'சகலசெல் வங்களுந் தரும்இமய கிரிராச
தனயைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்யமுள் ளத்தில்து திக்குமுத்
தமருக்கு இரங்கி மிகவும்

அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவாழ் நாள்வெற்றி
ஆகுநல் லூழ்நு கர்ச்சி

தொகைதரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப் பாய்
சுகிர்தகுண சாலிபரி பாலிஅநு கூலிதிரி
சூலிமங் களவி சாலி

மகவுநான் நீதாய் அளிக்கொ ணாதோ மகிமை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமிசுப நேமிபுகழ் நாமிசிவ சாமிமகிழ்
வாமி அபிராமி உமையே'



அன்னை அபிராமி அருள்

சித்தர்கள் பரிபாஷை அகராதி

அபிராமி அடிமை
டாக்டர் இரா. மாணிக்கவாசகம் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி - சென்னை-600 030.

"அன்னை அபிராமி அருள்"
செல்லம்மாள் தெரு,
சென்னை-600 030.

முதற்பதிப்பு : மே 1982.

விலை ரூ. 15-00 (ரூபாய் பதினைந்து)

கிடைக்குமிடம் :

அன்னை அபிராமி அருள்,
9, செல்லம்மாள் தெரு,
சென்னை-600 030.

அச்சிட்டோர் : மூலிகைமணி அச்சகம், ஷெணய் நகர், சென்னை-30.
தமிழோசை அச்சகம், 84, அபிபுல்லா ரோடு, தியாகராய நகர், சென்னை-17.

அட்டை : பொன்மணிஅச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை-5.

பாலமுருகனடிமை
அருள்திரு பாலமுருகன் திருக்கோயில்,
இரத்தினகிரி, கீழ்மின்னல்-632517.
வட ஆற்காடு மாவட்டம், தமிழ்நாடு

BALAMURUGANADIMAI
Arultiru Balamurugan Thirukkoil,
Rathinagiri, Kilminnal - 632517.
North Arcot Dist. Tamilnadu.

அருளாசி.

சித்தர்கள் பரிபாஷை அகராதி' நூல் பெற்றேன்.
வைத்தியம், வாதம், யோகம், ஞானம் இந் நான்கு துறையில் சித்தர்கள் கையாண்ட சொற்களுக்கு எளிதில் பொருள் கொள்ள புதிய நன்முறை சொற்களை தொகுத்துத் தயாரித்துள்ள இந்நூல் அனைவருக்கும் பயன்படும்.
அவரது கலைப் பணி சிறக்க எல்லா நலன்களும் பெற்று வாழ்த்துகிறேன்

பாலமுருகனடிமை
29.3.82

"அறமும் மெய்ம்மையும் வெல்லுதல் விழைவு"

5857

அணிந்துரை

Dr. SP. SHANMUGANATHAN

B.sc (Hons); M. Sc., Ph. D; F.I.C.S;
C. Chem; F. R. S. C; (London)
M. A. C. S; F. C. S; F. T. N. Sc.,
F. I. C. (India)

தமிழ் நாட்டில் தோன்றி, உலகம் முழுவதும் வாழும் மக்கள் சமுகத்தினரின் நலன் கருதி வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய பல துறைகளிலும் ஒப்பற்ற தொண்டு செய்தவர்கள் உளர் என்றால் அவர்கள் சித்தர்களாகத்தான் இருக்க முடியும். என்றாலும் என்ன காரணம் கருதியோ அவர்கள் தம் கருத்துக்களை மறைபொருளாகவே பாடிச் சென்றுள்ளனர். மேற் போக்காகப் பார்க்கும்போது ஒரு பொருளும், ஆழ்ந்து பார்க்கும் போது வேறு ஒருபொருளும் தோன்றும் வகையில் பாடியுள்ளனர். அவர்கள் குறிப்பாகவும், குழுஉக்குறியாகவும் பொருள் உணர்த்தும் பரிபாஷை முறை இலக்கியச்சுவை மிகவும் உடையதாகும். அவர்களது பரிபாஷைக்குப் பொருள் காண்பதென்பது எளிதன்று. நுண்ணிய நூலறிவால் மட்டும் இயலுவதன்று. சித்தர்கள் தொடர்பும், ஆன்மீகப் பயிற்சியும் உடையார்க்கு மட்டுமே இது இயலும்.

இவ்வகையில் புலமையும், ஆர்வமும், தகுதி மிகுதியுமுடைய டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்கள்எழுதியுள்ள சித்தர்கள் பரிபாஷை அகராதி என்னும் இந்த நூல், தமிழ் இலக்கிய அகராதி நூல் வரிசையில் சிறந்த ஓர் இடத்தைப் பெறத்தக்கதாகும். சித்தர்களின் பாடல்களில் காணப்பெறும் வைத்தியக் குறிப்புகளுக்கு அகராதிகள் இருக்கின்றன. ஆனால் வாதம், யோகம், ஞானம் ஆகிய துறைகள் பற்றிய அகராதி நூல் இது வரை எழுதப்பெறவில்லை என எண்ணுகிறேன். ஆதலின் இக் குறையை இந்த நூல் போக்குகிறது. நான்கு துறைகள் பற்றிய சொற்களுக்கு முதல் அகராதி இதுவே என எண்ணுகிறேன். எனவே சித்தர் இலக்கியங்களில் ஆர்வம் உடையவர்கள் மட்டு மல்லாது தமிழறிந்த அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டிய நல்லநூல் இது.

'நம்நாட்டுச் சித்தர்கள்' என்னும் சித்தர்கள் பற்றி இவர் எழுதிய நூல் சென்னை அரசின் முதல் பரிசைப் (1978-ம் ஆண்டு வெளிவந்த தத்துவத்துறை சார்ந்த நூல்களுள் சிறந்தது) பெற்றதும், 'சித்தர்கள் கண்ட சிறுநீர் மருத்துவம்', 'திருமந்திர

ஆராய்ச்சி' முதலிய அரிய தலைப்புக்களில் நூல்களை வெளியிட்டிருப்பதும், இவர் இத்துறையில் கொண்டுள்ள புலமையையும், தகுதியையும், ஆர்வத்தையும் காட்டுகின்றன.

டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்கள் இதுபோன்ற பலருக்கும் பயனுள்ள நூல்களை எழுதித் தொண்டாற்றிச் சிறப்புக்கள் பெறுதல் வேண்டும் என வாழ்த்துகிறேன். எனது வாழ்த்திற்குத் துணைநிற்க எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளை இறைஞ்சுகிறேன்.

Principal
professor and Head of the
Department of Chemistry
PACHAIYAPPA'S COLLEGE
MADRAS-600 030
15-4-82.

சுப. சண்முகநாதன்
முதல்வர்

கருத்துரை

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
தமிழ் மொழித்துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்

'சித்தர்கள் பரிபாஷை அகராதி' என்னும் நூல் டாக்டர் இரா: மாணிக்கவாசகம் என்னும் பேராசிரியச் சித்தரால் எழுதப் பட்டதாகும்: சித்தர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் பண்பாளர்கள் ஆவர். அவர்கள் இயற்றியுள்ள பாடல்கள் தமிழ் அறிந்த அனைவர்க்கும் எளிதில் விளங்கிவிடும் என்று கூறுவதற்கில்லை. காரணம் அவர்கள் பாடல்களில் எளிய சொற்களையே கையாண்டிருந்தாலுங்கூட, அன்றாட வாழ்வில் நாம் கொள்ளும் எளிய பொருள்களை நாம் அவர்கள் பாடல்களிற் பயன்படுத்தியிருக்கும் சொற்களுக்குப் பொருளாகக் கொண்டு விடமுடியாது. ஏனெனில் சித்தர்கள் கையாண்டிருக்கும் சொற்கள் எல்லாம் மேற்போக்காகப் பார்த்தால் எளிமையாகத் தோன்றினும் பொருள் விளக்கம் தருவதில் அருமைப்பாடுடையனவாய்த் துலங்குகின்றன. எனவே, அவர்கள் கையாளும் சொற்கள் பரிபாஷைச் சொற்கள் எனப் பகரப்படும். எனவே, அவற்றின் பொருளைத் தெரிந்து கொள்வதற்கெனத் தனிப் பயிற்சியும் பண்பும் வேண்டற்பாலனவாகும்.

சான்றாக, ''மாங்காய் பாலுண்டு மலைமேல் இருப்பார்க்குத் தேங்காய்ப்பால் ஏதுக்கடி'' என்ற பாடல் அமைந்திருக்கிறது. மாங்காய், பால், தேங்காய் என்று நமக்குத் தெரிந்த சொற்களே இப்பாடலிற் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் இவற்றின் பொருள் வேறாகும். அந்த வேறு பொருளை நாம் அறியவரும் பொழுது தான் அப்பொருளால் நமக்கு வாழ்க்கை அனுபவம் பளிச்சிடக் காணலாம்; பயன் விளைவிக்கக் காணலாம்.

எனவே 'சித்தர்கள் பரிபாஷை அகராதி' என்னும் நூல் வாழ்க்கை அனுபவங்களை உள்ளடக்கிப்பாடும் சித்தர்கள் பாடலின் பொருள் நயங்களைப் புரிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுவதாகும். இத்தகைய பரிபாஷை அகராதி இல்லையென்றால் சித்தர் பாடல்கள் நமக்குப் பொருள் விளங்காப் புதிர்க் கவிதைகளாகும். இவ்வகையில் டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்களின் இத் தொண்டினை நான் மனமார வாழ்த்துகிறேன்.

சி. பாலசுப்பிரமணியன்
5-4-82.

மதிப்புரை

பேராசிரியர்
டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ் இலக்கியத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்

தமிழ்மொழி—இலக்கிய வரலாற்றில் சித்தர்களுக்குத் தனிச் சிறப்பு உண்டு. காரணம், அவர்கள் மொழிநடையும் கருத்துப் பொருளுமே ஆகும். இந்த இரண்டுக்குமே ஒரு பொது அடிப் படை உண்டு போலும். அதுவே, மறைநுட்பம்-நுட்பமறை. இந்த மறை நுட்பத்தின் ஓர் அடிப்படை தனிமுறையில் தக்கார் என்று கருதப்பட்டவர்க்கே பேரின்பப் பெருவழியை விளம்புதல்-விளக்குதல் என்பதாகும். ''கரணம் தப்பினால் மரணம்'' என் னும் பழமொழிக்கு ஏற்ப ஏற்பட்டதே யோக வழியின்-சித்த மருத் துவத்தின்-அடிப்படை எனலாம். ஆயினும் மேற்குநாட்டு நாக ரிகத்தில்-அறிவாய்வில்-இத்தகைய ஒளிவு—மறைவு இல்லையே; அதனால், அந்நாடுகளில் என்ன அழிப்புகள்/அழிவுகள்/இழப்புகள்/ இழவுகள் ஏற்பட்டு விட்டன? இதனால், சித்தர்கள் ''இரகசி யங்கள்'' பற்றிக் கொண்டிருந்த கருத்து எந்த அளவுக்கு முழு மையாகச் சரியானது என்பதை என் போன்றோரால் துணிந்து கூற இயலவில்லை. குறைந்த அளவு தீமையற்ற நன்மை பயக் கும் வழிகளையும் பொருள்களையும் சித்தர் பெருமக்கள் அனைவர் அறிவுக்கும் பொதுவுடைமை ஆக்கியிருக்கலாமே! தீமை பயக்காத நன்மையே நல்கும் எந்தப் பொருளும், எந்த வழியும் இல்லையா? அந்த அளவிற்கு மேற்கு நாட்டு அறிவியல் முறைகளையும்-மருந்துப் பொருள்களையும் விட மோசமான வையா இந்த நாட்டு முறைகளும் பொருள்களும்? சித்தர்களின் மூடுமந்திர முறைகளால் இலாபத்தைவிட இழப்புதானே அதிகம்? இதற்கு மேல் இதைப் பற்றி இங்கே பேசிப் பயனில்லை.

''சென்றது இனி மீளாது''. ஆனால், இனியேனும் கிடைக் கும் அறிவை டாக்டர் இரா. மாணிக்கவாசகம் போன்றவர்கள் அனைவருக்கும் பயன்படச் செய்தல் பண்பு. பொருளைப் புதைப் பது போல் அறிவையும், அருளையும் புதைத்தல் அடாது. வைதிக நெறியாளர் கோயில்களையும் குளங்களையும் கட்டி மந்திரங்கள் தந்திரங்கள் செய்வதைப் பெருமளவு எதிர்த்தவர்கள் தானே சித்தர்கள்? படாடோப நடையை விட்டுவிட்டுப் பாமரர்கள் நடையைப் பயன்படுத்தியவர்கள் தானே சித்தர்கள்? எளிய உருவத்தை ஏற்றுக்கொண்ட சித்தர்கள் கடிய உள்ளத்தைக் கொண்டிருத்தல் தகுமா?

''வினைக்கு ஏற்ப சித்தர்கள் உதவுவார்கள்'' என்பது இந்த அறிவியல் காலத்துக்கு-அனைத்தையும் அம்பலமாக்குவோம்-என்னும் அறிவியல் காலத்துக்கு-''எல்லோர்க்கும் எல்லாம்'' ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' ''உரிமை தாழ்ந்தோர்க்கும்; உயர்வு தக்கோர்க்கும்'' என்னும் மக்களாட்சி சமதர்ம காலத் துக்கு–எவ்வாறு ஏற்கும்? பொருந்தும்? சுருங்கச் சொன்னால் தெரிந்த நல்லதை எல்லோருக்கும் விளக்கி, குறைந்த தீயதை மூடி வைத்தலுமே தான் முறைமை. இதைத்தானே மேற்கு நாட்டு அறிவியல்-ஆட்சியியல் உலகமும் கடைப்பிடிக்கிறது ஆனால் ஒன்று சித்தர்கள் வழிவந்த தாயுமானர் 'சேரவாரும் செகத்தீரே'' என்று கூவுவதைப் பார்க்கும் போது சித்தர்கள் சித்தத்தையும் காலம் கனிவித்திருக்கிறது என்பது தெரிகிறது.

மேற்கண்ட சிந்தனைகள் எளியேனுக்கும் மேவுமாறு செய்த சிறப்புடையது டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்களின், சித்தர்கள் பரிபாஷை அகராதி 'பரிபாஷை' என்ற சொல்லுக்கு-சொற்றொடருக்கு தனித்தமிழ் யாது! குறிப்புச் சொல்–குழூஉச் சொல்-வேற்றுப் பொருள் சொல்–என விளம்பலாமோ? முனைவர் மாணிக்கவாசகம் குறிப்புச் சொல்லுக்கும், குழூஉச் சொல்லுக் கும் வேறுபாடு காண்கிறார்; அது சரிதானா? இரண்டும் ஒன்றா தலும் இயக்கை. வேற்றுப் பொருள் சொல் அல்லது வேற்றுச் சொல் என்றால் இரண்டுக்கும் பொருந்தாதோ? குறியீட்டுச் சொல் என்றும் கூறலாம் அன்றோ?

டாக்டர் மாணிக்கவாசகம் அவர்கள் தொகுத்துள்ள சற்றொப்ப மூவாயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட சித்தர்கள் பரிபாஷை அகராதி இன்னும் முழுமை பெறுதற்குரிய முதன்மை யானது. இந்நாளில் இத்தகைய ஒரு முயற்சியை ஆசிரியர் தன் னிச்சையாகத் தனி முறையில் மேற்கொண்டிருப்பது அவர்தம் பேரார்வத்தையும், பேராற்றலையும் புலப்படுத்துகிறது. இந் நூலின் மறுபதிப்பு இன்னும் விரிவான விளக்கமான ஆய்வு முன்னுரையோடும் பரிபாஷைச் சொற்களைப் பல்லாற்றானும் எண்ணிட்டு (with serial numbers) வகை தொகை படுத்திய இணைப்புகளோடும் அவை பற்றிய விளக்க ஆய்வுகளோடும் வெளிவருதல் இன்றியமையாதது.

சித்தர்கள் ஆய்வுச் சித்தராக விளங்கும் பேராசிரியர் டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்களுக்கு அவர் தொடர்ந்து செய்ய இருக்கும் தொண்டுகளுக்குத் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

ந. சஞ்சீவி
14-4-82
தமிழ்ப் புத்தாண்டு நாள்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை

முன்னுரை

ஒருநாள் எம். ஏ. வகுப்பிற்குப் பாடம் நடத்துவதற்காக விடுகதைகளைப்பற்றிய குறிப்புகளைத் தொகுத்துக்கொண்டிருந்தேன்.

என்னுடன் பணியாற்றும் நண்பர் திரு. ஏ.எஸ். பிரகாசம் என்னை அணுகி 'நான் விடுக்கும் புதிருக்கு விடைதாருங்கள், பார்க்கலாம்' என்று தொடங்கி உடன் புதிரையும் கூறினர்.

ஒருவன் : 'முக்காலை யூன்றி மூவிரண்டுக்குப் போகையிலே
ஐந்து தலைநாகம் அழுந்தக் கடித்ததுவே'?

மற்றவன் : 'பத்து ரதன் புத்திரனின் மித்துருவின்
சத்துருவின் பத்தினியின் காலெடுத்துத் தேய்'!

இரண்டு பேரில் ஒருவன் விடுக்கும் புதிர்வடிவான வினவிற்கு மற்றவனும் புதிர்வடிவான விடை தருகிருன்.

'இந்தப் புதிருக்கு விடை தெரியவில்லை' என நான் ஒப்புக்கொண்டபின், அவர் விளக்கினர்.

முக்காலையூன்றி—முதிய வயதானவர்க்குத் துணையாகிய மூன்ருவது காலாகிய கோலை ஊன்றி;

மூவிரண்டுக்குப் போகையிலே — மூவிரண்டு — ஆறு; ஆற்றுக்குப் போகையிலே ;

ஐந்து தலைநாகம்—ஐந்து தலையையுடைய நெருஞ்சி முள்;
அழுந்தக் கடித்தது—காலில் தைத்தது.

இது ஒருவன் வினு.

பத்துரதன்—தசரதன்; புத்திரன்—இராமன்; மித்திரன்—சுக்ரீவன்; சத்துரு—வாலி; பத்தினி—தாரை; காலெடுத்தல்—தாரை எனும் சொல்லில் உள்ள காலை (ா) நீக்கிவிட்டால் தரை. தேய்—தேய்க்க

இது மற்ருெருவனின் விடை.

எனவே 'தடியை யூன்றி ஆற்றுக்குப் போகும்போது நெருஞ்சி முள் காலில் தைத்தது' என ஒருவன் வினவ, 'தரையில் தேய்' என மற்றவன் விடை தர அமைவதே இப்புதிர் என விளக்கினர்.

சித்தர் இலக்கியங்களைப் படித்துப் பழக்கப்பட்ட எனக்கு அதுவரை தோன்ருத ஓர் உண்மை விளங்கியது. குறிப்பாகவும், குழூஉக் குறியாகவும் பொருள் உணர்த்தும் முறையைச் சித்தர் இலக்கியங்களில் மட்டும்தான் காணமுடியும் என எண்ணிக்கொண்டிருந்த

எனக்கு, படிக்காத பாமர மக்கள் பரம்பரை பரம்பரையாகச் சொல்லியும், எழுதியும் வருகின்ற நாட்டுப்புறக் கலைகளில் ஒன்ருகிய விடுகதையிலும் இவ்வரிய ஆட்சியைக் காணலாகுமெனத் தோன்றியது. இதுபற்றி ஆராய வேண்டுமென்னும் வேட்கை என் உள்ளத்தில் விழுந்ததன் விளைவாக எழுந்ததுதான் இந்த நூல்.

விடுகதைகள்

விடுகதைகளில் பெரும்பாலானவை சித்தர்கள் பாடல்களைப் போலவே ஏமாற்றும் எளிமை (Deceptive Simplicity) மிக்கவை. மேற்போக்கான தோற்றத்தில் ஒரு பொருளும், ஆழ்ந்து நோக்கில் புதிர் பொதிந்த சுவைமிக்க உட்பொருளும் பெற்றுள்ளன.

அம்பலூர் ரோட்டிலே கம்பளி விரிச்சிருக்கு
அம்பலக்காரன் மகளைக் கைப்பிடித்து இழுக்கிருன்
அவள் ஐயோ என்கிருள்
அவன் சித்தே பொறு என்கிருன்

யாரோ ஒருவன் ஒருத்தியின் கையைப் பிடித்து இழுப்பது போலவும், அவள் அஞ்சுவது போலவும் உள்ளது இப்பாடல் தரும் மேற்போக்கான பொருள். 'வளையல் போடுதல்' என்னும் இப்புதிரின் விடையைத் தெரிந்து கொண்டால் இதன் சுவையைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

முதலில் குறிப்பிட்ட பாடலைப்போலவே வினுவும், விடையுமாகக் குறிப்புப்பொருள்பட அமைந்துள்ள வேறு ஒரு விடுகதை வருமாறு :

ஆண் : அக்கினிப்பழத்தைக் கக்கி விழுங்குதே அது என்னடி கண்ணே ?

பெண் : வாலைப்பிடித்தால் வாயைப் பிளக்குதே அதுதான் கண்ணுளா ?

இப்புதிரின் விடை 'நெருப்பு எடுக்கும் இடுக்கி'.

தனிப்பாடல்கள் :

ஏட்டறிவு இல்லாத நாட்டுப்புற மக்களால் வளர்க்கப்படும் விடுகதைகளில் மட்டுமல்லாது, பாட்டறிவு மிக்கப் புலவர்களின் படைப்புக்களிலும் இத்தகைய குறிப்புப் பொருள் பொதிந்துள்ள தன்மையினைப் பல்வேறு காலங்களில் எழுந்துள்ள இலக்கியங்கள் மூலம் அறியலாகும். இதனை விரிவாகக் காண்பது தனி ஆராய்ச்சியாகும்; ஆதலின் சில பாடல்கள் மட்டும் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளன.

பூனைக்கி ஆறுகால் புள்ளினத்துக் கொன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே ழானதே—மானே கேள்

முண்டகத்தின் மீது முழுநிலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லைக் காண்

புகழ்மிக்க காளமேகப் புலவர் பாடிய இப்பாடலின் மேற்போக்கான பொருளாவது, 'பூனைக்கு ஆறுகால்களும், பறவைக் கூட்டத்திற்கு ஒன்பது கால்களும், ஆனைக்குப் பதினேழு கால்களும் ஆனதைப் பெண்ணே கேட்பாயாக. தாமரை மலரின்மீது முழுநீல மலர்கள் பூத்ததைக் கண்டதுண்டு கேட்டதில்லை' என்பது. பூநக்கி எனப்பிரித்து வண்டுகளுக்கு ஆறுகால்களுள என்றும்; ஒன்பதுகால் கொண்டது இரண்டேகால் ஆதலால் புள்ளினத்துக்கால்களிரண்டே என்றும், பதினேழுகால் கொண்டது நாலேகால் ஆதலால் யானைக் கால்கள் நான்கே என்றும் பொருள் கொள்ள வேண்டும். முண்டகம் என்பது தாமரை முகத்தையும், முழுநீளம் என்பது கண்ணையும் குறிக்கும். இப்பொருளைப் புரிந்துகொண்டால் இப்பாடலின் நயம் விளங்கும். சித்தர்கள் பாடல்கள் போலவே தோன்றும் மற்றொரு தனிப்பாடல் கீழ்வருமாறு :

குதிரைக் கனியை நாகம்பறித்துக் கொண்டோடயிலே
குதிரை வரக்கண்டு நாகத்திலேறிடக் கூடவந்த
குதிரை யமட்டிட நாகம் பயந்துபின் கூப்பிட்டதால்
குதிரை பறந்து தடாகத்திலானையைக் குத்தியதே

மேற்போக்காகத் தோன்றும் பொருள் ஒருபுறம் இருக்க உட்பொருளை நோக்குவோம்.

குதிரைக்கனியை — மாம்பழத்தை; நாகம் பறித்துக் கொண்டோடயிலே—குரங்கு பறித்துக்கொண்டு ஓடும்போது ; குதிரை வரக் கண்டு — செந்நாய் அதைப்பிடுங்க வருவதைக்கண்டு; நாகத்திலேறிட — புன்னைமரத்தில் குரங்கு ஏறிட, கூடவந்த குதிரை யமட்டிட —பிடிக்கவந்த செந்நாய் அச்சக்குரல் எழுப்ப, நாகம் பயந்து கூப்பிட்டதால்—குரங்கு அஞ்சிக் கதறவே, குதிரை பறந்து—மரத்திலிருந்த கொக்கானது பறந்துபோய், தடாகத்தில் ஆனையைக் குத்தியதே—பொய்கையில் உள்ள களிற்று மீனைக் கொத்தியது.

''மாம்பழத்தைக் குரங்கு பறித்துக்கொண்டு ஓடும்போது செந்நாய் அதைப்பிடுங்க வருவது கண்டு, புன்னை மரத்தின்மேல் குரங்கு ஏறிட, பிடிக்கவந்த செந்நாய் அச்சக்குரல் எழுப்ப, குரங்கு அஞ்சிக் கதறவே, மரத்தில் இருந்த கொக்கானது பறந்துபோய் பொய்கையில் உள்ள களிற்றுமீனைக் கொத்தியது' என்பது இப்பாடலின் பொருள். இப்படிப்பல மேற்கோள்களைக் காட்டிச்செல்ல முடியும். விரிவு அஞ்சி இத்துடன் அமைகிறேன்.

குறிப்பாகப் பொருளுணர்த்தும் முறையைப் பண்டுதொட்டுப் படிக்காத பாமரர்களும், படித்த பாவலர்களும் பயின்று வந்துள்ளனர் என்பதைப் பல்வேறு காலங்களில் எழுந்துள்ள பலதுறை இலக்கியங்களின் மூலம் அறியலாம். இவற்றை ஆராயின் இலக்கிய நயம் கருதி—கவிச்சுவைக்காக—பொழுதுபோக்கிற்காக—தம் புலமையைத் தெரிவிப்பதற்காக—சிலர் இம்முறையைக் கையாண்டுள்ளனர் என்பதை அறிகிறோம்.

தமது கருத்துக்களைப் பலரும் தெரிந்துகொள்ளக் கூடாது என்று வேண்டுமென்றே குறிப்பு மொழியையும், குழூஉக்குறியையும் பயன் படுத்தியவர்களில் சித்தர்கள் முதலிடம் பெறுகிறார்கள்.

மற்றவர் பாடல்களுக்கும் சித்தர்கள் பாடல்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. பிறவற்றில் குறிப்பாகப் பொருளுணர்த்தும் முறைமையே மிக்கிருக்கும். குழூஉக் குறியாட்சி மிக அருகியே இருக்கும். ஆனால் சித்தர் பாடல்களில் குறிப்பும், குழூஉக்குறியும் விரவியிருக்கும்.

இனி, குறிப்பு மொழியாட்சி, குழூஉக்குறியாட்சி, இவற்றைப் பற்றிச் சிறிது விளக்கமாகக் காணலாம்.

சொல்லும் பொருளும்

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே[1]" என்பது தொல் காப்பியர் கருத்து.

'எந்த மொழியாயினும் ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கலாம். என்றாலும், சொல்வோன் கருத்து, சொல்வோன் திறம், சொல்பரிமாறும் சூழல், கேட்போன் நிலை, கேட்போன் திறம், கேட்கும் சூழல் இவையாவும் இசையுறப் பொருந்தினாலன்றிச் சொல்லின் பொருள்தெரிவதில்லை. அதாவது 'குறிப்பிற் குறிப்புணர வல்லார்க்கே சொல் தன்னையும் பொருளையும் விளக்குகிறது'[2] எனத் 'தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள்' என்பதுபற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்ற பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி கருதுகின்றார்.

எந்தச் சொல்லாக இருந்தாலும் பெரும்பாலான மக்களால் வழங்கப்படும் சூழல் வழி ஏற்பட்ட பொருளையே கருதிவிடுகின்றனர்.

சான்றாக, இருசொற்களைக் காணலாம். 'வேங்கடநாதன்' என்ற சொல் திருவேங்கடத்தீசனான திருமாலைக் குறிப்பதாகக் கொள்வர். 'முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பலாவர்' என்றார்போல் வேகும் இயல்புடைய கடமாகிய இவ்வுடம்பின் தலைவனாகிய ஆன்மாவையும் குறிக்கும் என்பதைச் சிலரே அறிவர். 'சீரங்கநாதன்' என்னும் சொல் திருவரங்கத்து ஈசனையே குறிப்பதாகக் கொள்வர்.

சீர், அங்கத்து, நாதன் ஆகிய ஆன்மாவையும் குறிக்கும் என்பதைச் சிலரே அறிவர்.

எனவே, சொல்லின் பொருள் நுண்ணுணர்வு உடையோர்க்குக் காரணம் உண்டாகும் தன்மை விளங்கத் தோன்றும் என்பது தெளிவு.

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்று"[3] எனத் தொல்காப்பியர் கூறுதலும் நோக்கத்தக்கது.

குறிப்புமொழி:

எந்தச் சொல்லாக இருந்தாலும் சூழல் தெரிந்து பொருள் காண முயல்வதே அறிவுடைமை. எனினும் சூழல் தெரிந்தும் எளிதில் பொருள் காணமுடியும் வகையில் சில சமயம் அறிஞர்கள் பாடுவதுண்டு அவற்றையெல்லாம் 'குறிப்புமொழி'யின் கீழ்க் கொண்டு வருதல் பொருந்தும்.

எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத்ததுவே குறிப்புமொழி என்ப[4]

எனத் தொல்காப்பியர் குறிப்புமொழிக்கு இலக்கணம் வகுக்கிறுர்; அதாவது நேரடியாக உண்மைப்பொருள் உணர்த்தாது வேறு பொருள் உணர்த்துவது. இந்த நூற்பாவை விளக்கும் வகையில் உரையாசிரியராகிய பேராசிரியர் கீழ்க்காணும் எடுத்துக்காட்டைத் •ர்ருன்கிதரு

குடத்தலையர் செவ்வாயிற் கொம்பெழுந்தார் கையி
னடக்கிய மூக்கின ராம்

'இதனுட் குடமே தலையாகப் பிறந்தாரெனவும், கொம்பெழுந்த வாயினரெனவும், கையுட்கொண்ட மூக்கினரெனவும் கூறியக்கால் எழுத்தும் சொல்லும் பொருளும் இயல்பிலவாதலும் குறிப்பினுன் அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறும் கண்டு கொள்க' என்பது எடுத்துக்காட்டு.

குறிப்புமொழிக்கு நன்னூல் தரும்விளக்கமும், அதற்குச் சங்கர நமச்சிவாயர் உரையும் தெளிவு மிகுதியும் தருவதாக உள்ளன.

ஒன்ருெழி பொதுச்சொல் விகாரந் தகுதி
ஆகு பெயரன் மொழிவினைக் குறிப்பே
முதலெருகை குறிப்போ டின்ன பிறவும்
குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை[5]

இது நூற்பா.

நீத்தொழிந்த வாறைந் தடக்கிபின் னிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் யானையும்-கூத்தற்கு
வாளேரூ டோசை வினைநில மிவல்லாற்
கேளா யுடன்வருவ தில்

இது அவர்தரும் மேற்கோள் பாடல்களில் ஒன்று. இதன்பொருள் 'நிலையாமை கடைப்பிடி. சிவபுண்ணியம் செய்' என்பது.[6]

எல்லாப்பற்றையும் நீத்து ஒழிவதால் பெறுவது நிலையான தன்மை; ஐந்துறுப்பும் தன்னுள் அடக்குவது ஆமை; வாயிலுக்கு வேறுபெயர் கடை; பெண் யானைக்குப் பெயர் பிடி; கூத்தன் என்பது சிவனுக்கு உரிய பெயர்; வாள் படுவதால் ஏற்படுவது புண், இனிய ஓசை எழுப்புவது இயம்; வினை நிலத்தின் வேறுபெயர் செய்; இவை பொருள் விளங்காக் குறிப்புமொழிகள். முழுமையும் குறிப்புப்பொருள் நிரம்பி உள்ள நூல்கள் தமிழில் பல்வேறு துறைகளிலும் உள்ளன; எனினும் சித்தர் இலக்கியங்களில் மிகுதியும் காணுதல் கூடும்.

சித்தர் இலக்கியங்களில் குறிப்புமொழி

மாறென்ரு ரின்வேர் மயிலவ னுயுதவேர்
கூறுமொரு நீவியினுற் கூட்டியே - நீறு
வெண்ணெயுடன் தண்ணில்மதி மேலுமிட நீவந்த
கண்ணன்கண் ணும்மாலைக் கண்[7]

இப்பாடல் கண்நோய்க்கான மருத்துவம் கூறுவது.
மாறன்—பாண்டியன்; தார்—மாலையாகிய வேம்பு; வேர்—வேப்ப மரத்தின் வேர்; மயிலவன்—மயில் வாகனமுடைய முருகன்; ஆயுதம் —வேல்; வேர்—வேலமரத்து வேர்; நீவியினுற் கூட்டி—குடுவையில் சேர்த்து; மதி—மாதம்; இவை எளிதில் பொருள் விளங்காக்குறிப்பு மொழிகள்; இனி இப்பாடல் உணர்த்தும் பொருளைக் காண்போம். 'வேம்பினது வேர், வேலமரத்து வேர் இரண்டையும் குடுவையில் இட்டு எரித்து நீருக்கி வெண்ணெயில் கலந்து கண்ணில் இட மாலைக்கண் மறைந்து கண்ணனது கண் என ஒளிவீசும். இப் பாடலில் வேம்பை 'மாறன் தார்' எனக்குறித்தலும், வேலமரத்தை 'மயிலவன் ஆயுதம்' எனக்குறித்தலும், குறிப்பு மொழிகள்.

தக்கவரன் பதியெடுத்தோன் நகர்தீ யிட்டோன்
தந்தையென்ற சினந்தீருந் தரிக்குந் தானே[8]

வாயு தொல்லைக்கு மருந்து சொல்லும் பாடலின் இறுதி அடி இது.
அரன்பதி—சிவனது [illegible] எடுத்தோன்—

இராவணன்; நகர் — இலங்கை; தீயிட்டோன் — தீயிட்டவனுன அநுமன்; தந்தை—வாயு—இவை குறிப்பு மொழிகள்.

குழூஉக்குறி

சித்தர் பாடல்களில் குறிப்புமொழியாட்சி மட்டுமின்றி குழூஉக் குறியாட்சியும் மிகுதியும் காணலாம். இதனைப் 'பரிபாஷை' என்பர். பொதுவாக எல்லாத் துறைகளிலும் அந்த அந்தத் துறையில் உள்ள வர்களால் மட்டும் அறியத்தக்கவகையில் சில சொற்கள் அமைகின்றன. சான்ருக நாட்டியம், இசை, மருத்துவம், சோதிடம், போன்ற பல துறைகளிலும் குழூஉக்குறிகள்—பரிபாஷைச் சொற்கள் உள்ளன. கலைச்சொற்கள் (Technical terms) அனைத்தும் ஒருவகையில் பரிபாஷைச்சொற்களே. பொதுவாக ஒவ்வொரு குழுவிலுள்ளோர் யாதேனும் ஒரு காரணத்தில் ஒரு பொருளினது சொற்குறியை யொழித்து வேருெரு சொற்குறியால் கூறுவதைக் குழூஉக்குறி என்று விளக்கம் கூறி, பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றும், யானைப்பாகர் ஆடையைக் 'காரை' என்றும், வேடர் கள்ளைச் 'சொல் விளம்பி' என்றும் வழங்குவர் என மேற்கோள் காட்டுவர்.

இம்முறையில் சித்தர்கள் குழுவினர் பயன்படுத்திய குழூஉக் குறி ஆட்சி சிலவற்றைக் காணலாம்

மன்னனுக்குச் செல்காலம் மந்திரிக்குத் தற்காலம்
பின்னனுக்கு மேற்காலம் பேதமில்லை-இன்னபடி
ஆனுலு நாடி யஃததுவா நாடிடிற்
ருனுண்டை நோயினர்க்குத் தான்[9]

மன்னன்—வாதம்; செல்காலம்—இறந்தகாலம்; மந்திரி—பித்தம்; தற்காலம் — நிகழ்காலம்; பின்னன் — சிலேத்துமம்; மேற்காலம்— எதிர்காலம். இவை குழூஉக்குறிச் சொற்கள். சித்தர் இலக்கியங் களில் மட்டுமே காணுதல் கூடும்.

வாதபித்த சிலேத்துமங்கள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் இங்ஙனம் வருதலின் மாறுதல் இல்லை. மருத்துவன் அந்நாடி களின் இயக்கத்தை முறையாக ஆராய்ந்து அவ்வவற்றிற்கேற்ப மருத்துவம் செய்யின் நோயாளிக்குப் பிணி நீங்கி வன்மையுண்டாகும் என்பது இப்பாடலின் பொருள்.

மாங்காய்ப் பாலுண்டு மலைமேலிருப் போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி - குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி[10]

இப்பாடலைப் பலரும் அறிந்திருப்பர். மேற்போக்காகப் படிப்பவர்க்கு ஒரு பொருளும், சித்தர்கள் பரிபாஷை அறிந்தவர்க்கு வேறுபொருளும் தரும்தகையது.

'மாங்காயின் பாலை உண்டு மலையின்மேல் இருப்பவருக்கு தேங்காயின் பால் எதற்கு? என்பது மேற்போக்காகத் தோன்றும் கருத்து; அல்லது மலைமேல்இருப்போர்க்கு மாங்காய்ப்பால் உண்டு ; ஆதலின் தேங்காய்ப்பால் எதற்கு என்றும் கொள்ளலாம்.

மாங்காய்ப்பால் என்பதை மா காயம் பால் எனப்பிரித்து சிறப்புடைய உடம்பின் பாலாகிய அமிர்தம் எனப்பொருள் கொள்ளுதல் வேண்டும்.

சித்தர் இலக்கியங்களில் சோமபானம், காயாப்பால், கறவாப் பால், சந்திர அமிர்தம், தேன், கள், எனப்பல்வேறு குழூஉக்குறிச் சொற்களால் உச்சியிலிருந்து விழ்வதாகக் கூறப்படும் அமுது குறிக்கப்படுகிறது.

சாவா திருந்திடப் பால்கற - சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற[11]

அண்ணாவின் மேல்வரும் பால்கற - பேர்
அண்டத்தில் ஊறிடும் பால்கற
விண்ணாட்டில் இல்லாத பால்கற - தொல்லை
வேதனை கெடவே பால்கற[12]

நிறுத்துமே கபாலத்தின் வாசலாக நிஷகாங்கமான
தொரு அமுர்தமப்பா
பொறுத்துமே துளிதுளியாய் விழும்பாரு[13]

முதலிய அடிகளை ஒப்பிட்டுக் காணலாம். எனவே மாங்காய்ப் பால் என்பது சந்திர அமிர்தத்தைக் குறிக்கும்.

மலை என்பது சகஸ்ராரம் என்னும் உச்சிப்பகுதியைக்குறிக்கும். சிற்சபை, சிற்றம்பலம், விந்து, முச்சுடர், முச்சந்தி, சபாத்துவாரம், மணிமேடை, மயானம், கபாடம், சூன்யப்பகுதி, மகாமேரு, வரை, அம்பலம் எனப் பல சொற்களால் குறிக்கப்பெறும் இடமாகும். இதனைத் துவாதசாந்தப்பெருவெளி என்றும் குறிப்பர். (துவம்2; தசம் 10=12; ஆறு ஆதாரங்களின் உள்ளும் புறமுமாகப் பன்னிரெண்டு)

அரிய யோகப் பயிற்சியால் கீழிருக்கும் நஞ்சை மேலேற்றி அமிர்தமாக்கி இறக்கும் பயிற்சியுடையவர்களையே இப்படிக் குறிக்

கிறது. 'உச்சியில் பிச்சையெடுத்தல்' என இச்செயலைக் குறிப்பர். உச்சி வேளையில் சோற்றுப் பிச்சையெடுப்பவர்களைக் குறிப்பது அன்று.

எனவே, சிறப்புமிக்க காயத்தின் பாலாகிய அமிர்தத்தை உண்டு அம்பலத்தில் தன்னை நிறுத்திக்கொள்ளும் பேறு பெற்றவர்களுக்கு, யோகப் பயிற்சியில் ஈடுபடுகின்றவர்கள் உட்கொள்ளுகின்ற மென்மையான உணவுப் பொருட்களாகிய தேன், காய், பால் முதலியன தேவையில்லை. அதாவது, உணவே தேவையில்லை என்பது இவ்வரிகளின் பொருளாகும்.

தாயான பாம்பாட்டிச் சித்தரப்பா தாரணியில் நெடுங்காலம்
இருந்த சித்து
காயான முப்பழமும் பாலும் கொண்டு கலியுகத்தில்
நெடுநாள் இருந்த சித்து

என போகர் 7000–(VI–936) இல் வருதல் காணத்தக்கது.

மலைமேலிருப்போர்க்கு மாங்காய்ப் பாலுண்டு என்றும், மாங்காய்ப் பாலையுண்டு மலைமேலிருப்போர்க்கு என்றும் மாற்றிப்பொருள் கொண்டாலும் பிழையில்லை.

நிலையான நிலையதுவு மென்ன சொல்வேன்
நிஷ்களங்க மானதொரு கபால பீடம்
கலையான கலையதுவும் இடகலை பிங்கலையின்
கருவான நாசியது மையம்பற்றி
மலையான கபாலமென்ற பீடம்பற்ற
மகத்தான மூலவரை மேலேசென்று
தலையான பஞ்சேந்தி ரமுள்ளடக்கம் சாற்றுகிறேன்
சிவயோகம் சாற்றுவேனே[14]

கருவான மலையதுதான் யென்ன சொல்வேன்
காசினியில் நாதாக்களிருக்கும் ஸ்தானம்[15]

ஏறினேன் ஆறுவரை யடுக்கும் கண்டேன்[16]

செல்லுமே கொங்கணரு மேறும்போது சுகமாக
ஆறுவரை
அல்லுமே சிலம்பொலியின் சத்தம் கேட்டார்[17]

மூச்சா மூச்சுக்கி மேலே நோக்கு
முச்சந்தி உதயகிரி உச்சி தோணும்[18]

முதலிய அடிகளைக் காணுதல் நன்று.

இராமலிங்க அடிகளாரின் பாடல் வரிகளையும் இதற்குத் துணையாகக் காட்டுதல் கூடும்.

கையறவிலாது நடுக்கண் புருவப்பூட்டு
கண்டுகளி[illegible] நடுநாட்டு[19]

கை—செயல்; அற—முற்றும்; இலாது—இல்லாவகையில்; நடுக் கண்—கண் நடுவாகிய புருவ மத்தியில்; புருவப்பூட்டு—வரையாகிய பூட்டுள்ளது; கண்டு—அதுதிறக்கும் வகையறிந்து; களிகொண்டு—களித்து; திறந்து—அப்பூட்டைத் திறந்து; உண்டு—உள்ளிருந்து ஒழுகும் அமுரியை அருந்தி; நடு—சமநிலையில்; நாட்டு—நிலைபெறுதல்; இவை குழூஉக்குறிச்சொற்கள். பொறிபுலன்களாது செயலொடுங் கச் சித்தத்தைச் சிவன்பாலே (லலாட நிலையில்) வைக்க, அவ்வீடு திறக்க, உள்ளிருந்து ஒழுகும் அக்கள்ளைப் பருகுபவர்கள் நடுவு நிற்பர் என்பது இவ்வரிகளின் பொருள். அமுதுண்ணும் இச்செயலைத் தான் அமுரிதாரணை எனக்குறிக்கின்றார் திருமூலர்.

விண்கடந்து நின்றசோதி மேலைவாசலைத் திறந்து
கண்களிக்க உள்ளுளே கலந்து புக்கிருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமும் மறந்துபோய்
எண்கலந்த ஈசனோடு இசைந்திருப்பது உண்மையே[20]

உற்றுற்றுப் பார்க்க ஒலிதரும் ஆனந்தம் அதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைத்திருப்பதுஇனி
எக்காலம்[21]

முதலிய அடிகளையும் ஒப்பிட்டுக்காணுதல் நன்று.

நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னிரென் றானே[22]

எனவரும் திருமந்திரப்பாடல் உணர்த்தும் பொருளும் இதுவே. ஆனால் தோன்றும் மேற்போக்கான பொருள் அகத்தியரின் தென் திசை வருகைபற்றிய புராணக்கதையை உணர்த்துவதாக உள்ளது. முழுக்க முழுக்க பரிபாஷையும், குறிப்புப்பொருள் உணர்த்தும் சொற்களும் நிறைந்ததிப்பாடல்.

குறிப்பும் குழூஉக்குறியும்

இவ்விரண்டு முறைமையும் கலந்த பாடல் ஒன்றினைக் காணலாம்.

சேந்தனிடந் தந்திரிக்காம் சீதரனூர் மந்திரிக்காம்
ஏந்து வருணனிட மேந்தலுக்கா-மீந்த
மருத்துவனூர் மூவருக்கும் வாயாது துற்கி
திருத்தலமா மானுலுந் தீ[23]

சேந்தனிடம்—முருகனுக்குரிய இடமாகிய மலைப்பகுதி; தந்திரி—சிலேத்துமம்; சீதரனூர்—மாயோனாகிய திருமாலுக்குரிய இடமாகிய காட்டுப்பகுதி; மந்திரி - பித்தம்; வருணனிடம் - வருணனுக்குரிய இடமாகிய கடல்சார்ந்தப் பகுதி; ஏந்தல் - வாதம்; மருத்துவனூர் -

இந்திரனுக்குரிய இடமாகிய வயல் பகுதி; மூவருக்கும் - முக்குற்ற நோயினருக்கும்; துற்கிதிருத்தலம் - துர்க்கைக்குரிய பாலைநிலம்.

முருகனுக்குரிய மலைப்பகுதி சிலேத்துமத்திற்கும்; திருமாலுக்குரிய காட்டுப்பகுதி பித்தத்திற்கும்; வருணனுடைய கடல் சார்ந்த பகுதி வாதத்திற்கும் வீறுகொள்ளுதற்கு இடங்களாகும். இந்திரனுக்குரிய வயல்பகுதி முக்குற்ற நோயினரும் வசிக்க ஏற்ற இடமாகும். துர்க்கையின் பாலைநிலமும் மேற்கண்டவாறு முக்குற்றங்களும் மீருதெனினும் பாலைநிலத்தில் வெப்பம் மிகுதியுண்டாம். ஆதலால் உறைவிடமாகக் கொள்ளலாகாது என்பது இதன் பொருள்.

இப்பாடலில் சேந்தனிடம், சிதரனூர், வருணனிடம், மருத்துவனூர் துற்கி திருத்தலம், என்பன குறிப்புப் பொருளுணர்த்தும் சொற்கள், தந்திரி, மந்திரி, ஏந்தல், மூவர் என்பன குழூஉக்குறிச் சொற்கள்.

சித்தர் பாடல்களில் இவை போன்று ஆயிரக்கணக்கான மேற்கோள் காட்டுதல் கூடும். ஆனல் அவற்றின் பொருளை அறிந்து கொள்ளுவதுதான் மிகவும் அரிதாகவுள்ளது.

எளிதான பேச்சு வழக்கில் உள்ள சொற்களையே பெரும்பான்மையும் பயன்படுத்தினர். எனினும் மேற்போக்காகப் பார்க்கும் போது ஒரு பொருளும், ஆழ்ந்து ஆய்ந்துணரப் பிரிது ஒரு பொருளும் புலப்படும். இவ்வகையில் அமைவன ஏமாற்றும் எளிமைச் சொற்கள், (Deceptive simplicity) எனக் குறிக்கலாம்.

மறைபொருட்கூற்று

திருமூலரின் திருமந்திரத்தில் உடம்பைச் சுமார் 35 சொற்களால் குறிக்கின்றார்.

அத்திப்பழம்	வேங்கடம்	பாடி
கோயில்	பாளை	கரும்பு
முட்டை	அச்சு	தண்டு
இடிஞ்சில்	சால்	அத்தி
தோற்பை	உலைப்பொறி	சீரங்கம்
பூட்டுத்தறி	ஊர்	சரீரம்
பழம்பதி	கோட்டை	குரம்பை
நிலம்	தோணி	காயத்தேர்
மாயாபுரி	இருட்டறை	மாயப்பை
உலை	கூடு	கழனி
பந்தல்	நாடு	மன்னுமலை
ஐந்தகம்		– என்பன அவை.

மருத்துவ நூல்களில் குறிக்கப்படும் குழூஉக்குறிச் சொற்கள் சிலவற்றைக் கீழே காணலாம்.

மலைக்குருவி	— குன்றிமணி;	கருப்பி	— இரும்பு
சதுர் முகி	— சதுரக்கள்ளி;	சரஸ்வதி	— வல்லாரை
சடைமுடி	— சரக்கொன்றை;	பராசக்தி	— வேம்பு
திரிசூலி	— சிவனார்வேம்பு;	குமரி,கன்னி	— சோறுக்கற்றாழை
மால்மனை	— அரிதாரம்;	ஜலபந்தனி	— கட்டுக்கொடி
மால்தொடை	— துளசி;	பூனை	
மால்தங்கை	— பாஷாணம்;	வணங்கி	— குப்பைமேனி
மால்எச்சம்	— மண்;	யானை	
மால்விந்து	— வெள்ளரிவிதை;	வணங்கி	— தேள்கொடுக்கு
மால் உந்தி	— தாமரை;	யானைப்பால்	— அத்திப்பால்

மறைபொருள் கூற்றின் காரணம்

இங்ஙனம் இவர்கள் மறைபொருள் கூற்றுகச் சொல்லிச் செல்ல வேண்டிய அவசியம் என்ன என்ற வினு அனைவர்க்கும் எழுவ தியல்பே.

பல்வேறுவகையான ஆற்றல்தரும் மூலிகைகளையும்; வாழ்வை விரும்பும்வரை நீட்டிக்கும் மூலிகைகளையும்; எல்லோருக்கும் விளங் கும் வகையில் கூறினுல் அதனுல் ஏற்படும் விபரீதத்தை எண்ணிப் பார்க்கவும் முடியாது. ஆகவேதான் நல்வினையால் பக்குவமடைந்த வர்க்கே இந்நூல்கள் கிடைக்கவும், பொருள் விளங்கவும் சொன் ஞர்கள் என இவர்கள் பாடல்கள் வாயிலாக அறிகின்றோம்.

வெளிவருமே பரிபாஷை புதையல் தன்னை
விதியான வினையாளன் காண்பதல்லால்
தெளியாத மூடர்க்கு [21]

பாரப்பா பூரணமாமிந்த நூலைப்
பாரிலுள்ளோர்க் கீயாதே பதனஞ்சொன்னேன் [25]

சொல்லாதே ஒளிந்திட்டார் சித்தரெல்லாம் [26]

நேர்த்தியடா வுலகத்தில் சொன்ஞருண்டோ
நிசமாகச் சித்தரெல்லாம் மறைத்துவைத்தார் [27]

வேண்டுமென்றே மறைவாகச் சித்தர்கள் கூறினுர்கள் என்பதற் கான சான்றுகளில் சில இவை.

உண்டான மூலியைத்தான் குகையினுள்ளே
ஒளித்து வைத்தார் சித்தரெல்லாம் வெளியா
மென்று
பண்பான சித்தர்க்கு மூலியிட்டுப் பாவிகட்கும்

கர்மிகட்கும் கிட்டுமோ சொல்
செண்டான பூவுலகில் மானுடரெல்லாம்
செத்தவர்களெழுந் திருப்பார் இடம் கொள்ளாது
கொண்டான விதியாளி வந்தானாகில்
கூப்பிட்டுத் தான்கொடுப்பார் சித்தர்தானே 28

தாமிந்த சூத்திரத்தைக் கொளியா தீந்தால்
தலை தெறித்துப் போகுமடா சத்தியமாய்ச்
சொன்னேன்
நாமிந்தப் படிசொன்னோம் யோகிக்கீவாய் 29

சித்தர்களுக் காகவே இந்நூல் சொன்னேன்
சிவயோகி மெய்ஞ்ஞானிக் கிந்நூல் சொன்னேன்
பற்றற்றாய் குருவுக்குத் தொண்டு பண்ணி
பன்னிரண்டு வருஷம் வரப்பாதம் போற்றிக்
கற்றோமென் றிருந்த கடைப்பிள்ளைக் காகும்
கல்வியறி வுள்ளோர்க்கு மீயலாகும்
மற்றுள்ளோர்க் கிந்நூலை யீந்தாயனால்
மாண்டி டுவாய் மகத்தான சாபமீதே 30

இந் நூட்களை யாருக்காக இயற்றினார்கள் என்பதையும், தவறு நேரின் விளைவு என்ன என்பதையும் கூறுகின்ற பாடல்களில் சில இவை.

முடிவுரை

தமிழ் நாட்டிற்கும், மொழிக்கும், இலக்கியத்திற்கும், குறிப்பிடத் தக்க அளவிற்குத் தொண்டாற்றியவர்கள் சித்தர்கள் என்பதைத் தமிழக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் மறுக்கவோ, மறைக்கவோ மறக்கவோ முடியாது. அவர்களின் தொண்டுக்குத் தலைவணங்கிச் செலுத்தும் காணிக்கையே இந்த நூல்.

வைத்தியம், வாதம், யோகம், ஞானம்ஆகியநான்குதுறைகளிலும் சித்தர்கள் பயன் படுத்தி வந்த பரிபாஷைச் சொற்களைத் தொகுக்கத் தொடங்கிய நாள் தொட்டு நானாகப் பொருள் புரிந்து கொண்டவை, எனது குருநாதர் மூலமாக அறிந்துகொண்டவை, உடைந்தும் சிதைந்தும் போன ஏடுகள்பலவற்றிலும் இருந்து தெரிந்து கொண்டவை இப்படியாக மெல்லச் சிறிது சிறிதாகத் தேனீக்கள் தேன் சேர்ப்பது போலச் சேர்த்துத் தொகுத்ததுதான் இந் நூல்.

இந் நூலில் ஐந்து பிரிவுகள் உள்ளன. முதலும் இறுதியும் யோகம், ஞானம் பற்றிய சொற்களை உடையன. இடையில் உள்ளவை வைத்தியம், வாதம் பற்றிய சொற்களை உடையன. சில

சொற்கள் விரவியும் வந்துள்ளன. இயன்றவரை பிழையின்ற வெளியிட முயன்றுள்ளேன். பிழையிருப்பின் தயங்காது சுட்டி காட்ட வேண்டுகிறேன். தக்கதாயின் தவறுது தலை தாழ்த் ஏற்றுக் கொள்வேன். இது அடுத்து வரும் பதிப்புகள் செம்மையா அமைய வழி செய்யும்.

இது வரை இந்த நான்கு துறைகளையும் தழுவிய முறையில் ஓ நூல் வந்தாகத் தெரியவில்லை. இது எனது முயற்சியின் தொடக்கம் தொடர ஆசை.

இந்நூல் இவ்வடிவு பெறத்துணை நின்ற அனைவர்க்கும் எ வணக்கம் உரியன.

அன்னை அபிராமியின் அருள் சூழ்வதாக!

சென்னை - 6000 30 அன்புட
நாள் 9-9-81 இரா. மாணிக்கவாசக

அடிக்குறிப்புகள்

1. தொல். சொல். நூற். 157.
2. பக். 23, தமிழ் நூட்களில் குறிப்புப் பொருள் ப ரா.போ. குருசாமியின் பிஎச். டி., ஆய்வு ஏடு (வெ யிடப்பெருததது) 1976, டிசம்பர்.
3. தொல். சொல். 394.
4. தொல். செய். 179.
5. நூற்பா, 269.
6. பக். 184. நன்னூல் மூலமும் சங்கர நமச்சிவாய உரையும் டாக்டர் உ. வே. சா. பதிப்பு 1953.
7. பாடல் 492, தேரையர் வெண்பா.
8. பாடல் 190, யூகி முனி வாத வைத்தியம் 200
9. பாடல் 8, தேரையர் வெண்பா.
10. பாடல் 28, குதம்பைச் சித்தர் பாடல்.
11. பாடல் 107, இடைக்காட்டுச் சித்தர் பாடல்.
12. பாடல் 830, அகஸ்தியர் 12000.
13. பாடல் 112, இடைக்காட்டுச் சித்தர் பாடல்.
14. பாடல் 747, போகர் சப்த காண்டம் VII காண்டம்
15. பாடல் 104, அகஸ்தியர் 12000.
16. பாடல் 7, யாகோபு தாண்டகம் 100.

17. பாடல் 1318, தேரையர் வைத்தியம் 1500.
18. பாடல் 31, சுப்பிரமணியர் ஞானம் 500.
19. பாடல் 147, நாமாவளிகள்-கீர்த்தனைப் பகுதி, திருவருட்பா, திரு ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு, 1933.
20. பாடல் 119, சிவவாக்கியர்.
21. பாடல் 228, பத்திரகிரியார் மெய்ஞ்ஞானம்.
22. பாடல் 337, திருமந்திரம், பி. வரதராஜன் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், 1978.
23. பாடல் 632, தேரையர் வெண்பா.
24. பாடல் 23, அம்பிகானந்தர் முப்பு சூத்திரம்.
25. பாடல் 6, அகஸ்தியர் வைத்திய பரிபூரணம் 400.
26. பாடல் 100, சட்டை முனி கற்பம்.
27. பாடல் 13, இராமதேவர் பட்சினி.
28. பாடல் 167, புலிப்பாணி வைத்தியம் 500.
29. பாடல் 216, அகத்தியர் பூரண சூத்திரம்.
30. பாடல் 251, அகத்தியர் ரசவாத நூல்.



அக்கரை – வீடுபேறு

அகக்கால் – பிராணன், உயிர்க்காற்று

அகத்தில் - உடம்பில்

அகத்தீ – அகம் + தீ – மூலாக்கினி

அகம் - உடம்பு

அகர உகரம்-எட்டும்இரண்டும்; நாதவிந்து; சக்தி, சிவம்.

அகரவெழுத்து – பிரணவத்திலுள்ள அகரஒலி; சிகாரம்

அகலிடத்தார் மெய் - உலக சராசரங்களின் மெய்யாக

அங்கப் புணர்ச்சி – பரியங்க யோகம்

அங்கி – மூலாக்கினி

அங்கு - துரியாதீத நிலை; வீடுபேறு

அச்சு அகலாது — உயிர் பிரியாது

அச்சு அற - உயிர் நீங்க

அசத்து - நிலையற்று; சத்து அற்ற

அசேதனன் - அறிவற்ற; ஆன்மா

அஜபா - ஜபிக்கப் படாத; ஊமை எழுத்து; ஹம்சம்;

அஞ்சனம் - யானை; குற்றம்; அறியாமை

அஞ்சாம் முகம் - சிவனது ஐந்தாவது முகமாகிய ஈசானம்

அஞ்சுள சிங்கம் - ஐந்து பொறிகள்

அஞ்சுமுகம் - சத்தியோ சாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம்

அஞ்ஞானம் – அ + ஞானம், அ[illegible] மேலான அறிவு

அட்டத்தைக் கட்டி - விந்[illegible] வைக் கட்டி

அடக்கும் தோட்டி - அறிவு

அடவி - மனம்; உடம்பு

அடியும் முடியும் - தோற்[illegible] ஒடுக்கம்; மண்ணும் விண்ணு[illegible]

அடுக்கும் தாமரை - சகஸ்ரார[illegible]

அடுகின்ற வாயு – பாய்கின்[illegible] வாயு

அடுப்பிடு மூன்று – சூரியன் சந்திரன், அக்கினிகலைகள் இரேசகம், பூரகம், கும்பகம்;

அடுப்பு — மூலாதாரம்

அடுப்பை அணைகோலி - மூல[illegible] கனலை எழுப்பி

அண்டவித்து – உலக சராசரங்களின் உயிர்

அணிமலர் - சகஸ்ராரம்

அணியன் - அணிந்திருப்பவன், இறைவன்

அணு - ஆன்மா

அத்தலை ஐவர் - தேகத்தில் உள்ள ஐவர்; மெய், வாய், கண், மூக்கு, செவி

அத்தாழ் - கண்புருவப் பூட்டு

அத்தி - சரீரம்; யானை வடிவான பிரணவம்

அத்திப்பழம் – மனம்

அத்தி பழுத்தால் - மனம் செம்மையானால்

அது இதுவாகும் - சிவன் சீவனாகும்

அகோரமுகம் – உள்முகம்

அந்தணர் - புறவேள்வி செய்வோர் ; அறவோர்

அந்நிலம் போம்வழி - வீடு பேறு அடையும் முறை

அப்பனுர் சரீரம் - உடல்

அம்பு கொண்டு - அறிவினுல்

அம்மனை - அ+மனை சகஸ்ரார அறை; வீடு பேறு

அம்மா - அ+மா - இந்திரியங் களாகிய யானை

அமிர்தம் - அமுரி; சந்திரபானம்; மாங்காய்ப் பால்

அமுதப்புனல் ஆற்றங்கரை - சகஸ்ராரம்

அமுரி தாரனை - அமிர்தத்தைத் தரித்தல் அல்லது சுவைத்தல்

அரசர் ஐந்துளர் - ஆட்சிசெய் யும் ஐந்து பொறிகள்

அரசனும் அங்குளன் - சீவனும், சிவனும் உளன்

அராபரன் - பாம்பை அணிந் தவன்

அரிசி - உயிர்ப்பு; சீவன்

அரியேறு முப்பது - வித்யாதத் துவம் 30;

அருகனும் சோமனும் - சூரிய சந்திர நாடிகள்;

அருங்கரையாவது அவ்வடி - பிறவிப் பெருங் கடலின் கரை இறைவனது பாதங்களே

அருங்கனி - சிவம்

அருங்கனி யூறல் - மதியமுது

அரும்பும் கந்தமும் -சீவனுள்ளே சிவமணம் பூத்தல்

அருவரையேறி - ஆருதாரம் ஏறி

அரைக்கீரை நல்வித்து - சுக்கில சுரோணிதம்

அரைமுழம் வட்டம் அமைந்த தோர்வாவி - உடலின் சந்திர மண்டலப் பகுதி

அல்லல்கழனி - துன்பத்திற் கேதுவானஉடல்

அவ்யாகிர்தன் - காரண உடம் புக்குக் கர்த்தாவாக இருப் பவன்

அவ்வூர் - வீடுபேறு

அவள் அக்கரம் - சக்தி எழுத்து; வகரம்

அவளுடன்சந்திக்க - விந்துநாதச் சேர்க்கை; பரியங்கயோகம்

அறிவொன்றிலா ஐயேழும் ஒன்றும் - 36 தத்துவங்களும்

அறுதொழில் - மல நீக்கம்

அறையில் புதைத்து - இல்லறம் காத்து

அன்னப்பறவை - சீவர்கள்

அன்னமிரண்டுள - சிவன், சீவன்

ஆ

ஆ - பசு; ஆன்மா

ஆகமதத்தின ஐந்து கரியுள - மிக்க மதம் உடைய ஐம் பொறிகள்

ஆகர்ஷணம் - அழைப்பு

ஆகாமியம் - பின்னை வினை

ஆகாயம்ஆறு - ஆகாயவழி; அ+காய+ஆறு அவ்வுடம் பின் வழி

ஆகின்ற அத்தனி நாயகி தன் னுடன் போகின்ற தத்துவம் - வாலையுடன் மேற்செல்வன

ஆகின்றசந்திரன் தானவனுமே - இரவு பகல் அற்றநிலை

ஆகின்றமின்னெளி - பயன்தரும் உள்ஒளி

ஆகுதிபண்ணும் - அகத்தீ புறத்தீ வேள்வி செய்யும்
ஆகும் உடம்பு - சூக்கும உடம்பு
ஆங்கரும்பு - விரும்பத் தக்க உடல்
ஆகுசம் - தீட்டு
ஆண்வண்டு - சிவன்
ஆணி - மனம்; அஞ்ஞானம்
ஆணி கலங்கின் - அஞ்ஞானம் கெடின்; மனத்திண்மை கலங்கின்
ஆத்தி - ஆத்தி போன்ற முதுகந்தண்டு
ஆதனம் - ஆசனம்; யோக இருக்கை
ஆதியெழுத்து - அகரம்
ஆபத்துக்கை - ஆ+பத்து+கை பக்கங்களில் பத்து
ஆபிக்கமலம் - சகஸ்ரார அறை
ஆமாக்கள் ஐந்து - பஞ்ச புலன்கள்; அபானன்; உதானன் சமானன், வியானன், பிராணன் ஆகிய வாயுக்கள் ஐந்து
ஆமை - மனிதன்
ஆமையகம் - மனம்
ஆமையொன்றேறி - ஐம்புலனடக்கி
ஆயன் - சிவன்
ஆயிழை ஏற்பட - சித் சக்தி பொருந்துமாறு
ஆரியன் - இறைவன்; குரு
ஆரியன் நல்லன் - சிவன்
ஆரைபடர்ந்தது - பாசம் மிக்கது
ஆலமரம் கண்டு - ஆல் + அமர் + அம்-சிவனைத்தரிசித்து
ஆலயம் - ஆ + லயம்; சிவனுடன் லயிக்கும் இடம்; உடல்
ஆவின்கிழத்தி - உயிர்; சிற்சத்தி
ஆவினமானவை - அவ்விறைவனினமான; அவ்வண்ணமாகி
ஆள்பவர் - உயிர்; சிவன்
ஆற்றங்கரை - முத்திநிலை
ஆற்றில் - வழியில்; வாழ்வில்; சிவபோக பாவனை முயற்சியில்
ஆறங்கம் - சிட்டை, கற்பம், வியாகரணம், சந்தோசிதி, சோதிடம், நிருத்தம்
ஆருக்கழனி - சுக்கிலமாகிய ஊற்றுபாயுமிடம்
ஆறியிருந்த - சிவத்துள் அடங்கியிருந்த
ஆறின்றிப்பாயும் அருங்குளம் - பிரமரந்திரமாகிய அறை
ஆறுதல் கும்பம் அறுபத்தினலு - 64 மாத்திரை நேரம் மூச்சை உள்ளடக்குதல் கும்பகம்
ஆறுதெரு - ஆறு ஆதாரம்
ஆறுபறவைகள் - காமமாதி ஆறும்
ஆறு பூ நிலை - ஆருதாரம்
ஆறுவிரித்தனன் - பஞ்ச பூதமாகவும் அவற்றின் ஆதாரமாகவும் இருப்பவன்
ஆறுளஒட்டகம் - காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம்
ஆறைக்குழி - ஆறு+ஐ+குழி காமம் ஆதி ஆறு; பெரிய குழிகள்
ஆனந்தத் தேறல் - அமுரி; சந்திரபானம்
ஆனந்த விளக்கொளி - உள்ளொளி; அருட்பெருஞ்ஜோதி
ஆனிலங்காது - சீவன் அழியாது

ஆணின்பகடு - ஆன்மாவின் மலம்

ஆனை - ஆ-வினை; சிவனை

ஆனைக்கன்று ஐந்து - ஐந்து பொறிகள்

ஆனைமயக்கும் - ஆ-பசு; ஆன்மா; ஆன்மாவை மயக்கும்

இ

இசைத்தான் - கூட்டிவைத்தான்

இட்டம் — திருவருள்; விருப்பம்

இட்டான் — தலைமகன்; சிவன்

இடக்கை வலக்கை - இடப்புறம் வலப்புலம்; இடகலை பிங்கலை; சந்திர, சூரியநாடி

இடம் வலம் சாதிப்பார் — ரேசக பூரகம் செய்வார்

இடாக்கொண்டு -இடைகலையால்

இடிகரை - அழியும் உடல்

இடிஞ்சில் - உடம்பு

இடியும் முழக்கமும் — விந்துவும் நாதமும்

இடைவாசல் - நடு நாடி

இதயன் - தாமசகுணம் பற்றியவன்

இந்துகை - சந்திரமண்டலம்

இந்துவும் பானுவும் - சந்திர சூரியகலை

இம்மனை — இவ்வுடல்

இம்முட்டையிரண்டும் கட்டி - இரேசக பூரகம் இரண்டும் நிறுத்தி

இயமம் — தீயன செய்யாதிருத்தல்

இரண்டவன் - சத்தி சிவமானவன்

இரண்டற - இருவினையற்று; சாயுச்சியநிலையுற்று

இரண்டு கடா - ரேசகம் பூரகம்

இரண்டுடல் — தூலம், சூக்குமம்

இரண்டு பெருவாய் — எருவாய் கருவாய்

இரணியகர்ப்பன் - சூக்கும உடலுக்குக் கர்த்தாவாக இருப்பவன்

இராப்பகல் அற்ற - சந்திர சூரிய கலைகள் ஒன்றிய நிலை; சுழுமுனை

இருகரை தங்கும் — உள்ளும் புறமும் விளங்கும்

இருட்டறை - மனம்; அஞ்ஞானம் நிறைந்தவுடல்

இருதயமந்திரம் — உளக்கோயில்

இருபக்கம் - பக்ஷம் — பக்கம் வளர்பிறை, தேய்பிறை

இருவினைப்பாத்திரம் - நல்வினை, தீவினைகளுக்குக் காரணமான உடல்

இரேகைச் சுடரொளி - சந்திர பிறை வடிவான ஒளி

இரை — இந்திரிய விஷயங்கள்; ஐம்புலன் உணர்வுகள்

இல்லம் - முத்தி; வீடு

இவ்வூர் — இவ்வுடல்

இழவு — தற்போத இழப்பு

இளங்கொடி - வாலை;குண்டலினி

இளையான் - இளைத்துவரும் காற்று; பூரகம்

இறந்தான் - பற்றற்றவன்; தன்னை இழந்தவன்;

இனிதுறையும் தையல் — மூலாதாரத்தில் சத்தி தத்துவம்

ஈ

ஈராறுகால்கொண்டு எழுந்தபுரவி -12 அங்குலம் செல்லும் மூச்சு

ஈரும் மனம் - சலிக்கும் மனம்

ஈரைந்தில் ஐந்து போனுல்-தச வாயுவில்பிராணன் அபானன், வியானன், உதானன், சமானன் ஐந்தும் போனுல்

உ

உச்சரி - உச்சித்துளை

உச்சிக்கு முன் - புருவ நடு

உடந்த தாமரை - சகஸ்ராரம்

உடம்பு - மகாகாரண சரீரம்

உடம்பொடு செத்திட்டிருப்பார் - உலகவாசனை அற்றிருப்பார்

உடல்மெய்-ஆன்மதத்துவம் 24

உடலில் இருகூறு - தூலம், சூக்குமம்

உடலில் ஒருவழி - நடுநாடி

உடையாமல் - இறவாமல்; உடல் இழியாமல்

உண்ணுடும் ஐவர்- ஐம்புலன்கள்

உண்ணும் ஐவர் - ஐம்புலன்கள்

உணர்த்து மெய் - சிவதத்துவம் ஐந்து

உணர்வு மெய் - வித்தியா தத்துவம்ஏழு

உதயக் குடில் - பரமாகாய மண்டலம்

உதறிய பாழில் ஒடுங்குதல் - சிவத்தில் ஒடுங்குதல்; சாயுச்சிய நிலை

உபசாந்த நிலை - விருப்புவெறுப்பு அற்ற நிலை; இருவினை நீக்கிய நிலை

உமி - ஆணவம்; மாயை

உய்யக்கொண்டேறும் குதிரை - பிராணன்

உயர்வரை உச்சி - புருவநடு; மேரு

உலகம் சரிந்தது - உடல் கெட்டது; நடுவு நில்லாது

உலை - உடம்பு; மூலாதாரம்; கருப்பை

உலைப்பொறி - சரீரம்

உழவன் உழஉழ - சாதகனது சாதனை முயற்சியில்

உழவு - யோக சாதனை

உள் நின்ற உற்பத்தி - உயிர்

உள் நின்ற ஏமத்திருள் - அஞ்ஞானம்

உள்ளெழுநுண்புகை - பிராணன்

உள்ளொட்டனம்செய்து - உடலுள் நிலைபெறுமாறு செய்து

உள்ளொளி - ஞான ஒளி

உற்ற பசுக்கள் - யோக நெறிப்பட்ட ஆன்மாக்கள்

உறுதிக்குடிநீர் - அமுரி

உறைவோர் - கர்மேந்திரியங்கள்

உன்மத்தமாமே-பரவசமடையும்

ஊ

ஊமன் - ஆன்மா

ஊமை எழுத்து - ஹம்சம்; மகர ஒற்று; அஜபா மந்திரம்

ஊமைக் கிணறு - உடம்பு

ஊமை மொழி - அஜபா மந்திரம்

ஊர் - முத்தி; உடம்பு

ஊர்புகுதல் - முத்தியடைதல்

ஊரினுள் - உடலினுள்; மனத்தினுள்

ஊரும் சகரத்தை ஓதுமின் – 'சி' கரம்

ஊழலொன்று வித்து ஒருங்கின காலத்து – தவமுயற்சி கைக் கூடிய காலத்து

ஊழி அகல் - உடல்

ஊற்றுக்கை – அமிர்தப்பெருக்கை

ஊற்றுப்பசுக்கள் - சிவதத்துவம் ஏழும்

ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம் – 32 மாத்திரை நேரம் காற்றுவெளிவருவதுரேகசமாம்

ஊறும் அருவி உயர்வரை உச்சி மேல் – மேருவில் இருந்து வரும் அமிர்தம்

ஊன் ஊறல் – சுக்கில, சுரோணிதம் ; அமிர்தம் ; அமுரி

ஊன்கரும்பாகிய ஊனிர் வரும் – உடம்பின் சுவை நீராகிய அமிர்தம் பெருகும்

எ

எட்டிப்பழம் - எளிதில் சிக்கும் இக் கனி; புலனின்பம்

எட்டியும் வேம்பும் – சுக துக்கம்; உலகியல் அனுபவங்கள்

எடுக்குந்தாமரை இல்லத்துள்ளது – உடம்பில் உள்ள சகஸ்ராரம்

எரிகொள்ளி – மூலாக்கினி

எருவிட்டு – தத்துவ விசாரணை செய்து; சிவசிந்தனை செய்து

எலி – சீவன்

எழுகடல் – ஏழுபிறவி

எழுகோடி மந்திரம் – நம; சுவாஹா; சுவதா; வௌஷட்; வஷட்; பட்; ஹூம்;

எழுதாப்புத்தகத் தேட்டின் பொருள் - மறைப்பொருளை; வேதப் பொருளை

என்கை இருள் - என்னிடத்துள்ள அஞ்ஞானம்.

ஏ

ஏணி – 36 தத்துவங்கள்; நடு நாடி

ஏலஎழுப்பி - மேல் எழுப்பி

ஏழுதுரவு - ஆறு ஆதாரமும் சகஸ்ராரமும்

ஏற்றம் இரண்டு - ரேசக பூரகம்

ஏற்றவள் – தலைமகள்

ஏறுதல் பூரகம் ஈரெட்டு – 16 மாத்திரை நேரம் உள்ளிழுப்பது ஆகிய பூரகம்

ஏறும் பெரும்பதிஏழும் – ஏழுமலையாகிய ஏழு ஆதாரங்களும்

ஏன்ற வியந்திரம் பன்னிரண்டங்குலம் – 12அங்குலம் இயங்கும் பிராணன்

ஐ

ஐந்தகம் – ஐந்து பொறிகளால் ஆகிய உடல்

ஐந்து குதிரை – ஐந்து பொறிகள்

ஐந்துண்ணலாமே - ஐம்புலனின் பழும் இணைந்த பேரின்பம் நுகர்தல் கூடும்.

ஐம்பொறி ஆடகம் - உடம்பு

ஐயெனும் வித்து – ஐந்து பூதங்களால் ஆகிய வித்து

ஐவர் - ஐந்து பொறிகள்; ஐந்து பூதங்கள்

ஐவர்க்கு ஒருசெய் - ஐந்து பூதங்களால் ஆன உடல்; ஐந்து பொறிகளால் ஆன உடல்

ஐவர்க்கு நாயகன் - ஆன்மா

ஐவரும்போயினர் - ஐந்து பூதங்களும் பிரிந்தன

ஒ

ஒட்டி ஒருநிலம் - உடல்

ஒண்ணு நயனத்தில் - நெற்றிக் கண்ணில்

ஒத்திட்டு இரண்டையூடுற்ருர் - இருவினை சேராதார்; சுழுமுனை சேர்ந்து

ஒருகடா - கும்பகம்; மனம்; வைராக்கியம்

ஒருத்தி – சக்தி; வாலை; குண்டலினி

ஒரு பொருள் - ஒப்பற்றபொருள்; சிவம்

ஒளி - ஆன்ம ஒளி; உள்ளொளி; அருட்பெருஞ்சோதி

ஒன்பது கட்டிட்ட கன்னியர் - நவசக்திகள்

ஒன்பது நீர்சால் - ஒன்பது வாசல் சரீரம்

ஒன்றவன்தானே - ஒப்பற்றவனுகிய இறைவன்

ஒன்றுவைத்தான் - உயிர் தந்தான்

ஓ

ஓடும் குதிரை - பிராணவாயு

ஓமப் பொருஞ்சுடர் - அருட்பெருஞ்சோதி

ஓலையால் மேய்ந்து - தோலிட்டு மூடிய உடல்

ஓவியம் - சமாதி நிலை

க

கங்கை வழிதரும் - சந்திர அமிர்தம் வழியும்

கசடற நுகர்தல் - குற்றமற மதியமுதை நுகர்தல்

கட்டலாம்-வெல்லலாம்; பிணைக்கலாம்

கட்டவல்லார் - பிராணனைக் கட்டவல்லார்

கட்டற்று - உடல் விட்டு

கட்டுவிட்டு - உடல் விட்டு

கடம் - உடல்

கடல் - பிறவி

கடா - மனம்; வைராக்கியம்

கடும்பசு – சீவன்

கடு வெளி - சூன்யப்பகுதி; அம்பலம்; பிரமரந்திரம்

கடைவண்டு - சீவன்

கடைவாசல் - மூலத்துவாரம்; கருவழி

கண்டத்தில் நின்ற கலப்பறியார்-விசுத்திநிலை அனுபவம் பெருதவர்கள்

கண்ணன் - முக்கண்ணன்

கண்ணுடி - கண் + நாடி புருவமத்தியைப் பார்த்து; அதோமுகப்பார்வை

கண்ணில் எழுந்த - பிரமரந்திரத்தில் தோன்றிய

கண்ணுங்கனல் - மூலாக்கினி

கணக்கறிந்தார்க்கன்றி - சரம் பற்றியறியாதவர்க்கு

கத்தி எடுத்தவள் - சத்தமிட்டுக் குழந்தையை ஈன்றதாய்

கதவு திறந்திடும் - சகஸ்ரார அறை திறந்திடும்

கதறியபாழ் கடந்து - முப்பாழ் நீங்கி

கதிமணி - புருவநடு

கதுவல் – கடைவாசல் திறந்து

கந்தாய்-முளைபோல் அசைவற்று இருத்தல்

கயிற்ருல் தொழுமி - பிராணுயாமத்தால் கட்டி

கருந்தாட் கயத்தில் கரும்பாம்பு - மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி

கருவைப்பற்றிக் கடைந்தமுதுண்டவர் - நஞ்சையமிர்தமாக்கியுண்டவர்

கரை - முத்தி ; புலன்கள்

கரைகட்டி - புலன்களைப் பக்குவப்படுத்தி

கரைபசு பாசங்கடந்தெய்தலாம் - பசு, பாசம் கடந்தால் கரையை அடையலாம்

கல்லாதார் - பரம் பொருள் பற்றிய அறிவு இல்லாதார்

கலசம் பதினெட்டு - புரியட்ட காயம் ; ஞானேந்திரியம் ; கர்மேந்திரியம் ஆக 18

கலவிமுழுதுமாய் - விந்து நாதச் சேர்க்கை ; சாயுச்சிய நிலை

கலை மூன்றும் - சூரியகலை, சந்திர கலை, அக்கினி கலை

கவறு ஐந்து - இந்திரியங்களாகிய சூதாடு கருவி

கழற்றிக்கொடுக்க - பூரித்து

கழனி - உடல்

கள்ளச் செய் - மனம்

கள்ளத்தட்டான் - மனம்; சிவன்

கள்ளுண்பர் - அமுரி தாரணை செய்வர்

களர் உழுவர் - பயனற்று முயல்வர்

களிம்பறுத்தான் - பாசநீக்கம் செய்தான்

கற்குழி - வயிறு

கற்ற பசுக்கள் - உய்யும் நெறியறிந்த ஆன்மாக்கள்

கன்னி - வாலை

கன்னித்துறைபடிந்தாடிய ஆடவர் - பெண்ணுறவு கொண்டவர்; நாதவிந்து சேர்க்கையுற்ரோர்

கன்னித்துறைபடிந்தாடும் கருத்திலர் - நாதவிந்து கலப்பறியார்

கனல் - மூலாக்கினி

கனல் வழி - மூலாக்கினிவழி

கா

காகோலி ஒன்றுபற்றி - நடுநாடி பற்றி

காட்டுச் சிவிகை - பிணம் எடுத்துச் செல்லும் பாடை

காடு - மனம்; மாயை; இடுகாடு; உடல்

காண விளக்கொளி - காணத்தக்கப் பெருஞ்சோதி

காணுக் கணக்கு - பிறப்பு இறப்பு

காணுக்கண் - ஞானக் கண்

காந்தாரமாறும் - ஆறு ஆதாரமும்

காப்பிடு கள்ளர் - காவல் செய்யும் பொறிகள்

காமுகன் - காக்கும் திருமால்

காமுற்றகத் திடுவர் - விரும்பி உள்ளத்திலிடுவர்

காயத்தேர் - உடம்பாகிய தேர்

காயத்ரி - உடம்பாகிய திரி

காயப்பை - உடம்பாகிய பை

காயப்பைக்குள் கள்வன் புறப்பட்டால் - உடம்பில் உள்ள சீவன் புறப்பட்டால்

காயம் இரண்டு - வெங்காயம் (அருஉடம்பு) பெருங்காயம் (உருஉடம்பு)

காயம் பலகை - உடம்பாகிய சூதாடு பலகை

காயம் பழுக்கினும் பிஞ்சாம் - மூத்தாலும் தேகம் இளமைத் தோற்றத்தோடு இருக்கும்

காய விளக்கு - உள்ளொளி

காரிருள் - ஆணவம்; மாயை; அஞ்ஞானம்

கால் - காற்று; பிராணன்; மண் தத்துவம்

கால் அணைகோலி - பிராணாயாமம் செய்து

கால் கட்டி - பிராணாயாமம் செய்து

கால் மாற்றி - கலையை மாற்றி

கால்வழி - காற்று இயங்கும்வழி; பிராணவாயுவின் இயக்கவழி

காலதுகொண்டு - பிராணனைக் கொண்டு

காலறுதல் - துன்புறுதல்

காவிதி - பன்னிரெண்டு ராசிகளிலும் சஞ்சாரம் செய்யும் சூரியன்

காற்றின் விளக்கது காயமறுக்கும் - பிராணப் பயிற்சியால் உடம்பின் மலமறும்

காற்று - பிராணன்

காற்றுப்பசுக்கள் - தசவாயுக்கள்

கானக்களிறு - ஆணவம்

கானக வாழைக்கனி - அஞ்ஞானம்

கானல் உவரி - அமுரி; விந்து; சிறு நீர்

கானின் கண் - காற்றிலிருந்து

காணிர் உருவழி - உச்சித்துளை

கி

கிடாக் கொண்டு - இடகலை, பிங்கலையாகிய கொண்டு

கிளி - அற உணர்வு

கீ

கீழ்க்கால் - அபானன்

கு

குகையில்லை - பிறப்பில்லை; கருப்பையில் நுழைதல் இல்லை

குசவர் - பிரமன்; தாய் தந்தை

குட்டமொருமுழம் உள்ளது - ஒரு முழம் உள்ளோடும் காற்று

குட்டிப் பசுக்கள் - வித்தியா தத்துவங்கள்; சிவ தத்துவங்கள்

குடப்பால் - அமுரி எனப்படும் சந்திர அமிர்தம்

குடம் - உடல்

குடிகொண்ட ஐவர் - ஐம்பொறிகள்

குண்டத்தினுள்ளே - மூலாதாரத்தினுள்ளே

குண்டியம் காயத்துக் குதிரை பழுத்தது - குண்டு, ஆலம், காயத்து, உக்கு, திரை, பழுத்து-பெரிய ஆலமரம் போன்ற உடம்பில் மேற்சென்று பக்குவப்பட்டு ஒளியாக விளங்கியது

குதிரை இரண்டுள - ரேசக பூரகம்

கும்பகக் களிறைந்து - ஐந்து பொறிகள்

குமரி - வாலை

குயவன் - இறைவன்

குரங்கு - மனம்

குருட்டினை நீக்கி - அஞ்ஞானத்தை நீக்கி

குருட்டுக் கிழவன் — ஆன்மா

குழாயகத்து - உடம்பில்

குழிப்பட்டு நின்றவர் - பிறவிக் குட்பட்டோர்

குழியில் - கருப்பையில்

குளம் - கருப்பை

குளிர்வரை - மேரு; புருவநடு

குறுநரிகள் - பொறிகள்

கூ

கூகின்ற - வெற்று ஆரவாரம் செய்கின்ற

கூகை - சீவன்

கூகை குருந்தமேறி - சீவன் ஆன்மீக உயர்வு பெற்று

கூடம் - புருவநடு; சுழுமுனை

கூடவல்லார் - சாயுச்சிய நிலை எய்த வல்லார்

கூடாத கூட்டம் - சையோகம்

கூடாப் பறவைகள் - புலன்கள்

கூடு - உடல்

கூத்தன் — சிவம்

கூத்தன் எழுத்து — 'சி'கரம்

கூத்தன் புறப்பட்டுப்போனகூடு- சத்துப் போன உடல்; பிணம்

கூப்பிடும் ஆற்றில் - உலக வாழ்வில்

கூபத்து சக்தி குளிர் முகம் பத்து- கர்மேந்திரியம் 5, ஞானேந் திரியம் 5

கூபப்பறவைகள் -இந்திரியங்கள்

கூபம் - உடம்பு; விசுத்தி

கூரு மிவ்வானின் இலங்கை குறியுறும் - உயர்ந்த அம்பலம் எய்தலாகும் (கைகுறியுறும்- அடையும்)

கூரை - உடம்பு

கூரை பிரியும் - உடம்பு அழியும்

கூரையின் கூம்பு - மேரு; முகட்டின் உச்சி

கே

கேட்டதும் கண்டதும் - ஒலியும் ஒளியும் (பத்து ஒலிகளும் ஏழு வண்ணங்களும்)

கேளாத கேள்வி - பத்துவகை ஒலிகளைக் கேட்டல்

கை

கைச் சதுரம் - சகஸ்ராரம்

கைத்தாழ் கொண்டாரும் திறந் தறிவாரில்லை - சுழுமுனையாகிய தாழ்ப்பாளைத் திறந்து யாரும் அறிவார் இல்லை

கொ

கொங்கு புக்கார் — பொறிகள்வழி மனத்தைச் செலுத்தியவர்

கொட்டனம் செய்து - குடைதல் செய்து

கொட்டு - நுகர்தல்

கொதிக்கின்ற கூழில்-மூலாதாரத் தில் வெப்பமேறிய குண்டலி சக்தியில்; விந்துவில்

கொம்பு - நடு நாடி

கொம்பேறி - நடு நாடிபற்றி ஏறி

கொம்மட்டி — பேரின்பம்

கொய்யும் மலர் - நுகரும் சுக துக்கம்

கொல்லன் - சிவன்

கொல்லை - மனம்

வைசிகம் - உடல், உயிர் இரண்டையும் பிரிக்கும் விந்தை

வைப்புச்சரக்கு - மருத்துவ முறைப்படி தயாரித்த மருந்துச் சரக்கு

மையமளந்தோன்சயனம் - நாகம்

வையமளந்தோன் தாரம் | - அரிதாரம்
வையமளந்தோன் மனை |

அ

அக்கினி - அக்கினிகலை; ஆறு வகைத் தொழிற்காரணமானதீ

ஓமாக்கினி - ஓமத்தீ

உதராக்கினி - அடிவயிற்றுத் தீ

மூலாக்கினி - மூலத் தீ

சடாக்கினி - உடல் சூடு

காமக்கினி - காமத்தீ

கோபக்கினி - கோபத் தீ

அக்கினிகலை - சூரிய சந்திர அக்கினி ஆகிய முக்கலைகளில் அக்கினிக்கலை 64; ஆன்ம அறிவு

அகக்கால் - பிராணன்

அகங்காரம் - நான் என்னும் அஞ்ஞானம் கலந்த முனைப்பு

அகண்டகலை - சூரிய கலை

அகத்தீ - மூலாக்கினி

அகந்தை - நான் என்னும் முனைப்பு

அகப்பகை - காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாச்சரியம், ஆகிய ஆறும் நம்முள்ளேயிருந்து நமக்குத்தீங்கு விளைவிப்பன

அகப்பூ - சகஸ்ராரம்; உச்சிக் கமலம்

அகம்பிரமம் - நானே கடவுள்

அகமுகம் - உள் நோக்கியமுகம்

அகர்நாதன் - அகரம்+நாதன் சூரியன்

அகரகாயம் - உடம்பின் முன் பக்கம்

அகவாயில் - மனம்

அகவாயுக்கள் - வைரம்பன், முக்கியன், பிரபஞ்சனன், அந்தர்யாமி, மகாபிராணன்

அகலிக்கை - வெம்மை

அகளமயம் - அருபியாய் நின்ற சிவன்

அகாயம் - தேகம் இன்மை

அகிதம் - துன்பம்

அகோரம் - சிவனது ஐந்து முகங்களில் ஒன்று. விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ஆகிய ஆகமங்கள் இம்முகத்தில் தோன்றின; அழித்தல்;

அங்கம் - பகுதி; அஷ்டாங்கம்; தசாங்கம்;

அங்காரகதோஷம் - லக்கினத்திற்கு 2,4,7,8 ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்தால் தோஷம் என்பது பொதுவிதி

அசத்காரிய வாதம் - காரியம் இன்மைக் கோட்பாடு

அசத்து - சத்து அல்லாத; நிலையற்ற

அசம்பிரஞ்ஞாத சமாதி - சமாதியில் உயர்ந்த வகை

அசரம் |
அசலம் | —அசைவில்லா

அசித்து - சடப்பொருள்

அசிந்தியபேதாபேதம் - எண்ண இயலாத வேற்றுமையும் வேற்றுமையின்மையும்

அசுத்தசைவம் - அ—எதிர்மறைப் பொருளோ, அண்மைப் பொருளோ அன்று; மேலான என்பது பொருள். சிவவேடம் தரித்துச் சிவன் எழுந்தருளியிருக்கும் எல்லாக் கோயில்களையும் வலம் வந்து பக்தி நிலையில் ஈடுபட்டு பதிபசுக்களின் இயல்புகளை அறிவதாகிய ஞானம் பெற்றவர்கள்

அசுத்தபுவனம் - ஆன்மதத்துவம்

அசுத்தம் - அஞ்ஞானம்; மாயை

அசுத்தமாயை – மாயாமலக் காட்சிகளில் ஒன்று. இது சுத்த மாயையிலிருந்து தோன்றிப் பிரகிருதி மாயை தோன்றுவதற்குக் காரணமாயுள்ளது. ஆகவே, ஆன்மாக்களுக்குப் புவன போகங்களையுண்டாக்கி ஆணவம், கன்மம், மாயை முதலிய மலங்களில் ஒன்ருகியும் சடத்திற்குக் காரணமாயும் விளங்குவது.

அசுரர் – தீய ஆற்றலை உடையோர்

அசேதனன் - சடம்; அறிவற்ற

அஸ்தம் - ஐம்மீன், உத்தமன், களிறு முதலிய வேறு பெயர்களைக்கொண்ட நட்சத்திரம்

அஸ்வனி- பரி, கிள்ளை, கொக்கு, மா, கோடகம்,குதிரை முதலிய வேறு பெயர்களைக் கொண்ட நட்சத்திரம்

அஞ்சனம் - மறைப்பு; மை

அஞ்சு | அஞ்சுகொம்பு | — மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகள்

அஞ்ஞானம் - ஆன்மாபிரமத்தின் பகுதி அல்லது தொடர்புடையது என்பதை அறியாமை

அஷ்டஐஸ்வரியம் - தனம், தான்யம், புத்திரர், பசு, தைரியம், வாகனம், அடிமை, அரசாங்கம் முதலியன

அஷ்டகருமவித்தை - ஆக்ருஷ்ணம், உச்சாடணம், பேதனம், மாரணம், மோகனம், வசியம், வித்துவேடனம், தம்பனம்,

அஷ்டசுபம் - இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி,தொட்டி நிறைகுடம், விளக்கு, முரசு

அஷ்டதனம் - அழகு, தனம், நற்குணம், குலம், சம்பத்து, விவேகம், வித்தை, ஆயுள்

அஷ்டபந்தனம் - சுக்காங்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமை வெண்ணெய், குங்கலியம், நற்காவி ஆகிய எட்டின் கலவை

அஷ்டபோகம் - ஆடை, தாம்பூலம், பரிமளம், சங்கீதம், உணவு, பூஅமளி, பெண், உணவு

அணிமா - தோற்றத்தில் பெரிய பொருள் சிறிய பொருளாதல். பிருகி முனிவர் வண்டு வடிவம் ஆனது சான்று

மகிமா – தோற்றத்தில் சிறிய பொருள் பெரிய பொருளாதல். திருமால் வாமனனுக வந்து நெடியதோற்றம் கொண்டது சான்று

லகிமா - சுமையுள்ள பொருளை லேசான தாக்குவது. திருநாவுக்கரசரைக் கல்லில்கட்டிக் கடலில் இட்டபோது கல்மிதந்ததுசான்று

கரிமா - லேசானபொருள் சுமையுடைய பொருளாக ஆதல். சிபியின் வரலாற்றில் புருவின் எடைக்குத் தானே அமர்ந்தது சான்று

பிராத்தி - எவ்வுலகும் எவ்விடத்தும் தடையின்றி சஞ்

சரித்தல். சூரன், இராவணன் முதலியோர் சான்று

பிரகாமியம் - பிறர் உடம்பில் நுழைந்து நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடம் செல்வது மூலன் என்னும் இடையன் உடம்பில் நுழைந்து திருமூலராய் எழுந்த யோகி சான்று,

சத்துவம் - ஐந்து தொழிலையும் நடத்துவது

ஞானசம்பந்தர், சுந்தரர், இராமலிங்க அடிகள் முதலியோர் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் சான்று.

வசித்துவம்-ஏழு வகைத்தோற்றமாகிய தேவ, மானிட., நரக' மிருக, பறப்பன, ஊர்வன, மரம், முதலியவற்றைத் தன் வசப்படுத்துவது.சுந்தரர்க்காக இறைவனே தூது சென்றது சான்று.

அஷ்டமி - எட்டாம் திதி

அஷ்டலட்சுமி - தன, தான்ய, தைரிய, வீர, வித்யா, கீர்த்தி விஜய, ராஜ்ய லட்சுமிகள்

அஷ்டவர்க்கம் - ராசிச்சக்கரத்தில் கிரக நிலைக்கேற்ப கிரகங்களின் பதத்தை அளப்பதற்குரிய எண்வகைச் சக்கரங்கள்; சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம் முதலியன

அஷ்டாங்க யோகம் - எட்டு அங்கங்களை உடைய யோகம்.

இயமம் - தீது அகற்றுதல்

நியமம் - நல்லது செய்தல்

ஆசனம்-இருக்கை, முன்கூறிய இரண்டையும் முடித்தபின்னர் யோகத்தில் இருப்பதற்கான தகுதிகளைப் பெற்றவர்கள் ஆகின்றனர் யோகத்தில் இருப்பதற்கான இருக்கைகளை கூறுவது.

பிராணாயாமம் - பிராணன் + யாமம், தசவாயுக்களில் ஒன்றான பிராணனை வெளிப்போகாவண்ணம் கட்டுவது; மூச்சுப் பயிற்சி; பொதுவாக 16 மாத்திரைநேரம் மூச்சை ஒரு நாசித்துவாரத்தின் வழியாகஉள்ளுக்குக் காற்றை இழுப்பது பூரகம். 64 மாத்திரை நேரம் உள்ளிழுத்த காற்றை உள்ளேயே நிறுத்துவது கும்பகம்.

32 மாத்திரை நேரம் நிறுத்திய காற்றை வேறு நாசித்துவாரம் மூலம் வெளிவிடுவது ரேசகம்-ஆகிய மூன்று பிரிவுகளையுடையது.

பிரத்தியாகாரம் – புறம்பே ஓடிப் பயின்ற மனத்தை ஒரு முகப் படுத்தும் முயற்சி

தாரணை – சூக்கும விந்துவின் விந்துவை (Spiritual Nucleus) கண்டு தெளியும் பயிற்சி; மனத்தை ஒரு வழி நிறுத்தி உள் முகமாக ஆராய்தல்; தரித்தல்; பருகுதல்

தியானம் - பூதம் ஐந்து, புலன் ஐந்து, அந்தக்கரணம் நான்கு மாயை ஒன்று, சீவன் ஒன்று ஆகிய 16 தத்துவங்களும் புத்தியில்ஒடுங்குவது. சகுணத் தியானம், நிர்க்குணத்தியானம் என இருவகைப்படும்

சமாதி - ஆதியுடன் சமமாதல். யோகத்தின் பயன் கூடும்நிலை. இவ்வெட்டு அங்கங்களில்

இயமம், நியமம், ஆசனம் மூன்றும் உடற்பயிற்சியாம். பிராணுயாமம், பிரத்தியாகாரம் தாரணை மூன்றும்மனப்பயிற்சியாம். தியானம், சமாதி இரண்டும் ஆன்மப்பயிற்சியாம்.

அஷ்டாவரணம் - எட்டுவிதிகள்

அட்சரபிரமன் - பிரமனின் வரையறைப்படுத்தப்பட்ட வடிவம்

அடயோகம் - நால்வகை யோகங்களில் ஒன்று, ஒற்றைக்காலில் நிற்றல், கைகளை உயர்த்தி நிற்றல் போன்ற பிரயாசையான யோகமுறை

அண்டசம் - முட்டையில் தோன்றுவன

அண்டம் - பிரபஞ்சம்; உலகம்

அணிமா – தோற்றத்தில் பெரிய பொருள் சிறியபொருள் ஆதல்

அணு – சூக்கும உடம்பு

அத்தன் - இறைவன்

அத்தியாசம் - மேல் சுமத்தல்

அத்துவா - வழி

அத்துவா மூர்த்தி – இறைவன் திரோதான சக்தியின் வழியாக எல்லாமாய்க் கவிந்து நிற்கும் நிலை

அத்யந்தபாவம் - என்றுமுள இன்மையுணர்வு

அத்வைதபாவம் - இருமையற்ற உணர்வு

அத்வைதம் – இருமையற்றநிலை

அதசம் - ஆன்மா

அதர்மம் - நீதியில்லாத

அதிகாரம் - தகுதி

அதிகாரி – கேட்போர்

அதிசூக்கும பஞ்சாட்சரம் - சிவாயசிவ என்பது

அதியாத்துமிகம் - ஆன்மாவுக்குரிய

அதோமாயை - அசுத்தமாயை கீழ்மாயை

அந்தக்கரணம் - மனம், சித்தம், புத்தி, அகங்காரம்

அந்தக்காரம் - இருள்

அந்தணர் - எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவோர்

அந்ததரம் – சித்தாந்தம்

அந்தர்யாமின் - உள்ளிருந்து ஆள்பவன்

அந்தர்யோகம் – உள்முகப் பயிற்சி

அந்தரங்கசுத்தி - உள்ளான சுத்தி

அந்தரங்கம் – அந்தர் + அங்கம்–மனம்

அந்தராங்கி - அனுகதம்

அந்தம் - இறுதி; வேதாந்தம்

அந்நியயோக வியவச்சேதம்-பிறிதனியைபு நீக்குதல்

அந்வயம் - உடன்பாடு

அநந்நியம் - அத்துவைதம்

அநவத்தை - முடிவுபேறின்மை

அநலி - சூரியன்

அநாகதம் - நாலாவது ஆதாரம்-12இதழ் உடையது; உ – சௌ ஒலியையுடையது. மார்பு இடம். உருத்திரன் தெய்வம்

அநாதிபதி - துரியாதீதநிலை

அநுதேகம் - சூக்கும தேகம்

அநுபலத்தி - இல்லையென்றறியுமறிவு

அநுபவித்தல் – அழிந்தியுணர் தல்

அநுமானம் - ஐயத்தோடெண் ணுதல். தருக்க சாத்திரத்தில் சொல்லப்பட்ட பிரமாணங் ளுள் ஒன்ருன கருதலளவை

அநைகாந்திகம் - ஒருதலைப் படாதது

அப்பரிசு -அந்தச்சத்தி

அப்பியாசம் - இடைவிடாப் பயிற்சி

அப்பிராகிருதம் – பிரகிருதியால் படைக்கப்படாதது

அப்பிருதச்சக்தி – பிரிக்கமுடி யாத தன்மை

அப்பு - தண்ணீர்

அபயம் – பயமின்மை; அடைக் கலம்

அபரநாதம் - ஒலிவடிவாயுள்ளது

அபரம் - மிகத்தாழ்ந்த

அபரவித்யா – கீழான அறிவு; உலகியல் அறிவு

அபரவிந்து – நினைவு வடிவாயுள் ளது

அபவர்கம் - துன்பம் முழுவதும் அற்றநிலை

அபாவம் – இன்மை

அபானன் – மலம், நீர்கழித்தல் ஆசனவாய் சுருக்கல், அன்ன சாரம் உருஞ்சுதல் முதலிய தொழில்செயும் வாயு.

அபூர்வம் - காணவியலாச்சக்தி

அபேதம் - வேறுபாடின்மை

அபிசாரமந்திரம் - மாரணமந்தி ரம்

அம்சம் - மூச்சை உள்ளிழுத்து வெளிவிடும்போது உள்ளேயே உச்சரிக்கும் மந்திரம்; பகுதி

அம்சமந்திரம் - அஜபாமந்திரம், வாய்விட்டு ஜபிக்கப்படா மந் திரம்

அம்மை - மேலுலக நிலை; சக்தி தத்துவம்

அம்மையப்பர் - நிமித்தகாரண ரான சிவசக்தி

அமிர்தம் - யோக அமுரி

அமுரி - சிறுநீர், மூத்திரம் - வை தியநூட்பொருள்; சோமபானம் மதியமுது, கள், கறவாப்பால்- யோகநூட்பொருள்

அயர்தல் - மறத்தல்

அயராவன்பு – இடைவிடாஅன்பு

அயனம் - செல்வது

அயோக வியவச்சேதம் - இயை யின்மை நீக்குதல்

அர்ச்சை - உருவம்

அர்த்தம் - பொருள்

அரன் -பசுக்களின் பாசங்களை அரிப்பவன்

அராகம் - விருப்பம்

அரனுக்குத்தாயும் மகளும் நல் தாரமும் ஆம் – சிவனுக்குச் சக்தி-தாய், மகள்,தாரம் ஆகிய முறையுடையவள். தத்துவங் கள் முப்பத்தியாறனுள் முப் பத்தியைந்தாவது தத்துவம் சக்தி; முப்பத்தி நான்காவது தத்துவம் சதாசிவம்; முப்பத்தி ஐந்திலிருந்து முப்பத்தி நான்கு தோன்றுவதால் சக்தி சிவனின் தாய் என்றும்; முப்பத்தியாறில் இருந்து முப்பத்தியைந்து தோன்றுவதால் சக்தி சிவனின் மகள் என்றும்; முப்பத்தி நான் கும், முப்பத்தி ஐந்தும் கூடிப்

பிறதத்துவங்கள் தோன்று வதற்குக் காரணமாதலின் சக்தி சிவனின்தாரம் என்றும் ஆகிறது

அருத்தாபத்தி - பொருள்

அலகைத்தேர் - பேய்த்தேர்

அலிகிரகம் – புதன், சனி, கேது

அலிநட்சத்திரம் - மிருகசீரிடம், மூலம், சதயம்

அவ்யாகிருதபிமானி - வியோமம் ஒன்றுபரனுக்குக்காரணதேகம். சுழுத்தி அவத்தையில் அவ்யா கிருதபிமானிஎனப்பெறும் நிலை

அவத்தை நிலை - துன்பம்; அனு பவம்- பொதுவாகநான்குவகை

சாக்கிரம் - நனவு; அதாவது புருவநடுவில்;

ஞானேந்திரியம்	5
கர்மேந்திரியம்	5
காற்று	10
அந்தக்கரணம்	4
புருடன்	1

ஆக 25 தத்துவங்கள் தொழில் படுதல்

சொப்பனம் - கனவு. அதாவது

கண்டத்தில் வாயு	10
அந்தக்கரணம்	4
புருடன்	1

ஆக 15 தத்துவங்கள் தொழில் படுதல்

சுழித்தி - உறக்கம், அதாவது நெஞ்சில்

அந்தக்கரணம்	4
புருடன்	1

ஆக 5 தத்துவங்கள் தொழில் படுதல்

துரியம் - பேருறக்கம் அதாவது கொப்பூழில் புருடன் ஆகிய ஒரு தத்துவம் மட்டும் தொழில் படுதல். (திருமந்திரம் 2103)

அவயவம் - வேறுவேறு பிரித் தற்குரியன; உறுப்பு

அவயவி - உறுப்புக்களையுடைய

அவத்தைபேதம் – அனுபவ நிலை கள்

கேவலஅவத்தை - தத்துவங் கள் ஒன்றும் கூடாமல் இருப் பது

சகலஅவத்தை - தத்துவங்க ளுடன் கூடிக் காரியப்படுவது

சுத்த அவத்தை - கேவல, சகல அவத்தைகள் தாக்காது பரசுகத்தைப் பெற்றிருப்பது

அவதாரம் - இறங்கிவரல்

அவருபசாங்கம் – அனுகதம்

அவித்தியை – அறியாமை

இவிநாபாவம் – நீக்கமின்றி நிற்றல்

அவிவேகம் - வேற்றுமைஉண ராத் தன்மை

அவிட்டம் - காக்கை, புள், பறவை முதலிய வேறு பெய ருள்ள நட்சத்திரம்

அளவை ஆறு - பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உபமா னம், அருந்தாபத்தி, அபாவம்

அறவோர் - அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல்; இந் நான்கும் நீக்கி அறம் ஆற்று வோர்; அந்தணர்

அறுகோணம் - விசுத்தி

அன்பு - இச்சை மீதூர்தல்

அன்றுதல் - மாறுபடுதல்

அன்னமயம் - தூலஉடல்

அன்னியம் - வேற்றுமை

அனுதீதம் - கும்பகம்

அனிலம் - காற்று

அனிலன் - பிராணவாயு

அனுகிரகம் - அருள்

அனுஷம் - புல், நீலம், தாழி, பனை, போந்தை ஆகிய வேறு பெயருடைய நட்சத்திரம்

அனுத்தரம் - அதற்கப்பால் ஒன்றுமில்லை எனும் நிலை

அனுபவம் - நுகர்வு

அனுபவித்தல் - அழுந்தி நுகர்தல்

அனுபலப்தி - அறிவு நிலையில்லாதது

அனுபூதி - மெய்யறிவு

அனுமானம் - கருதுதல்

அனேகானுகதம் - பலவற்றில் தொடர்ந்து இருப்பது.

அறுபதுவருடம் - பிரபவ, விப, சுக்கில, பிரமோதூத, பிரஜோற்பத்தி, ஆங்கிரச, ஸ்ரீமுக பவ, யுவ, தாது, ஈச்வர, வெகுதாண்ய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திவ, வியய,சர்வசித்து, சர்வதாரி, விரோதி, விகிருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, ஹேவிளம்பி, விளம்பி; விகாரி, சார்வரி, பிலவ, சுபக்ருது, சோபக்ருது, குரோதி, விசுவாவசு, பிராபவ,பிலவங்க, கீலக, சௌமிய,சாதாரண, விரோதிக்ருது, பரீதாபி, பிரமாதீச, ஆனந்த,ராக்ஷச,நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாக்ஷி, குரோதன, அக்ஷய = 60

ஆ

ஆக்கருஷ்ணம் - அட்டகருமத்தில் ஒன்று; அழைத்தல்

ஆக்கிரணம் - மூக்கு

ஆக்கினை - ஆணை

ஆக்ஞை - ஐந்தாவது ஆதாரம் மூன்றுஇதழ். புருவநடு. சதாசிவன். ஓ, ஸ்ரீம் மந்திரம்.

ஆகமம் - ஞானம், உரை (பிங்கலம் 2067)

சிவனது 5 முகங்களிலிருந்தும் 28 ஆகமங்கள் வந்தன என்பர்

சத்தியோசாதம் - (தோற்றுவித்தல்) காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம்

வாமதேவம் – (விளக்குதல்) தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சமான், சுப்பிரபேதம்

அகோரம் - (அழித்தல்) விசயம், நிச்சுவாசம், ,சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம்

தற்புருடம் -(காத்தல்) ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம்

ஈசானம் - (அனைத்துமாறுதல்) புரோற்கீதம், லலிதம், சித்தம், சந்தானம்

ஆகாசம் – விண்தத்துவம்

ஆகாமியம் - இப்பிறப்பில் செய்யும் பாவபுண்ணியம்; ஏறுவினை

ஆகாயகமனன் - ஆகாய வெளியில் பயணம் செய்வோன்

ஆகரயோகம் - மரணயோகம், உத்பாதயோகம், பிரபலாஷ்டயோகம்

ஆகுஞ்சனம் - ஒடுக்கம்

ஆ[illegible]யோகம் - [illegible]யோகம்,

சித்தயோகம், அமிர்த சித்த யோகம்

ஆச்சிரவம் – பொறிவழிச்சேரல்

ஆசனம் – இருக்கை, உடலுறுப் புக்களை உரியமுறையில் அடக்கி ஒருநிலையில் கொண்டு வந்து அமர்ந்து அதன் மூலம் மனத்தைக் கட்டுப்படுத்தும் இருப்பு நிலை

ஆசாரம் - வேத ஆகமங்கள் அனுஷ்டித்தவாறு நடத்தல்

ஆசு - மலம்

ஆசூசம் – தீட்டு; பிறப்பு இறப் பால் ஏற்படும் தீட்டு

ஆடி - பூராட நட்சத்திரத்தில் பருவம் வருவது

ஆண்கிரகம் - சூரியன், செவ் வாய், குரு

ஆண்நட்சத்திரம் - பரணி, ரோகிணி, புனர் பூசம், பூசம், மகம், அஸ்தம், சித்திரை, விசாகம், திருவோணம், பூராட் டாதி, உத்திரட்டாதி

ஆண்ராசி - மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம்: இவை ஒற்றை ராசி எனவும் படும்

ஆணவம் - மூலமலம்; மும்மலங் களில் முதன்மையானது; அணுக்களைச் சகஜமாய்ப்பற்றி நிற்றல்

ஆத்ம ஞானம் - தன்னையறியும் அறிவு

ஆதாரயோகம் - கருவிகளை நீக் கிக் கரணங்களோடு நின்று செய்வது

ஆதிசத்தம் - ஓம் எனும் பிரண வம்

ஆநந்தம் - பேரின்பம்

ஆப்தன் - நம்பிக்கைக்கு உகந்த ஒருவன்

ஆய்தல் - அணுகுதல்

ஆயில்யம் - பாம்பு, கட்செவி, புயங்கம், கௌவை முதலிய வேறுபெயர் உடையன

ஆருடசமாதி – முற்றும் துறந்த பின் செய்யும் சமாதி

ஆலம் - பனி

ஆலயம் - ஆன்மா(பசு) இறை யுடன் லயிக்குமிடம்; தேகம்

ஆலயவிஞ்ஞானம் - சவிகற்ப மாய் விரியும் ஞானமன்றிஒடுங் கும் ஞானம்

ஆலவிடமுண்டான்வீடு – கைலை மலை

ஆலோகம் - ஒளி

ஆவரணசத்தி - ஞானத்தை மறைக்கும் மாயையின் சத்தி

ஆவணி - திருவோண நட்சத்தி ரத்தில் பருவம் வருவது

ஆவாகனம் – தெய்வத்தை அழைத்தல்

ஆறங்கம் - சிட்சை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சோதி டம், சந்தோவிசிறி

ஆறந்தம் – வேதாந்தம் நான் அது ஆனேன் என்பது. இது தத்துவம் அசி என்னும் நிலை. தானான 'வேதாந்தம்'-திருமந்தி ரம் 2331

சித்தாந்தம் - உயிரானது இறைவனுடன் ஒன்றுபடும் போது ஐம்பொறிகளும் பற்றி நீக்கி மாயையற்று அவை தம் மைத் தொடராத தன்மையை யும் உணர்ந்து இறைவன்

திருவடிப் பேற்றையும் அடைந்து பேரின்பமடையும் 'தானென்னும் சித்தாந்தம்' தி. ம 2331

நாதாந்தம்-அயன், அரி, அரன், சதாசிவன், மகேசன், ஆகிய இவர்களையும் அதற்கு மேல் பரவிந்து, பரநாதம் ஆகிய இவர்களையும் விட்டு 36 தத்துவங்களும் நீங்கியபோது ஆன்மாவின் உண்மை நன்குவிளங்கும். உயிரானது தத்துவப் பிணைப்பிலிருந்து விடுபட்ட தெளிவால் நாதத்தைக் கடக்கும். அக இருள் நீங்கிஉள்ளுணர்வு பிறத்தலால் நாத முடிவில் உண்டான மெய்ஞ் ஞானத்தைப் பெறும். தி. ம 2333-2334

யோகாந்தம் - இயம நியமங்களை மேற்கொண்டார் பின் அவைகளைக் கடந்து சமாதி நிலையை அடைவர் உயிரானது சிவத்தன்மை பெற்றதும் பற்றற்ற நிலைமை அடையும் யோகநிலையின் முடிவுஎன்பது பொருள். தி. ம 2335

கலாந்தம் - கலைகளின் முடிவு என்பது பொருள் நிவிருத்தி முதலான பஞ்சகலைகளும் சப்த தாதுக்களும் மாயையினிடத்தில் ஒடுங்கும் முறையினை ஆராய்ந்து தெளிதல். தி. ம. 2336

போதாந்தம்-மெய்ப்பொருளாம் இறைவன் அறிவின் முடிவாம் தற்போதம் எனத் தெளிதல் தி. ம. 2337

ஆறத்துவா - மந்திரம், பதம், வண்ணம், புவனம், தத்துவம், கலை; ஆறுவழிகள்

ஆருதாரம்-மூலாதாரம்-எருவாய் கருவாய் இடையில். ஓம் - மந்திரம். 4 இதழ்

வாலை - தெய்வம்

சுவாதிட்டானம் - உந்தியில்
ந மந்திரம்
6 இதழ்
அ ஐம் ஒலி
பிரம்மா –தெய்வம்

மணிபூரகம் - நாபியில்
ம மந்திரம்
10 இதழ்
இ – கிலீம் – மந்திரம்
திருமால்

அநாகதம் - மார்பில்
சி மந்திரம்
12 இதழ்
உ - கௌம் ஒலி
உருத்திரன் தெய்வம்

விசுத்தி - தொண்டையில்
வ மந்திரம்
16 இதழ்
எ - ரீம் ஒலி
மகேஸ்வரன் தெய்வம்

ஆஞ்ஞை - புருவ நடுவில்
ய மந்திாம்
3 இதழ் ஒலி
ஓ-ஹ்ரீம்
சதாசிவன்

சகஸ்ராரம் - உச்சி
1000 இதழ்
சிவன் தெய்வம்

ஆறும் கடந்த - துவாதசாந்தம், பெருவெளி, வெட்டவெளி துவம் ...

தசம் - 10 -12ம் கடந்த; ஆறு ஆதாரங்களின் உள்ளும் புறம் மான 12-ம்

ஆறுவரை – ஆருதாரம்

ஆன்ம அறிவு - தற்போதம், தன்னையறியும் அறிவு

ஆன்ம ஒடுக்கம் - ஆன்மசக்தி உடம்பினுள் ஒடுங்கி நிற்றல்

ஆன்ம சுத்தி - ஆன்மாவின் சுத்தி நிலை

ஆன்மஞானம் - ஆன்மாவைப் பற்றிய அறிவு

ஆன்மதரிசனம் –ஆன்மா தன்னை யறிதல்

ஆன்மபோதம் – நான் எனும் முனைப்போடு கூடிய சிற்றறிவு

ஆன்மரூபம் – ஆன்மாவின் இயல்பு நிலை

ஆன்மா – பிராணன்- தான்வேறு சிவன் வேறு என்று எண்ணிக் கொண்டிருக்கும்ஆன்மா. இது வே அஞ்ஞானத்தில் மூழ்கிய நிலை

புருடன் - தான் வேறு சிவன் வேறென்று தன்னை எண்ண வைக்கும்; தன்னைச் சுற்றிய அஞ்ஞானத்தை உணர்ந்த நிலை

சீவன் - தன்னைச் சுற்றி அஞ் ஞானத்தை நீக்குதல் பொருட் டுக் குருவருள் பெற்ற ஆன்மா வின் நிலை; வியாபகம்;

ஆன்மாவலோகனம் - தன்னைப் பற்றிய உள்ளுணர்வு

ஆனந்த நிருத்தம் – பேரின்பக் கூத்து

ஆனந்தம் - பேரின்பம்

ஆனந்தமயம் - அவித்தை

ஆனுவறிவு - தன்னறிவின் நீங்காது நிலைபெறும் அ

ஆனுமை - நீங்காமை

ஆனிமாதம் - கேட்டை நட் திரத்தில் பருவம் படுவது

ஆஸ்திகம் - இறைமைத் த வத்தில் நம்பிக்கைக் கொ டிருக்கும் கொள்கை

ஆஸ்ரமம் – வாழ்க்கை நிலை

இ

இச்சை - விருப்பம்

இடகலை- வலக்கால் பெருவிரல் ருந்து இடது நாசிவரையில் முள்ளந்தண்டின் இடது பக் மாய் ஓடி நிற்கும் நாடி. இ சந்திரகலை என்றும் கூறப்படு

இணங்குதல் - நட்பு செய்தல்

இதம் - இன்பம்

இந்தனம் - விறகு

இந்திரிய ஒடுக்கம் - மூவகை இந்திரியங்களையும் ஒடுக்குதல்

இந்திரியம் - பொறி; வாயில்; ஞானேந்திரியம் - மெய், வாய் கண், மூக்கு, செவி

கர்மேந்திரியம்-கை,கால்,வாய், எருவாய், கருவாய்

அந்தரேந்திரியம் - இது அந் தக் கரணம் எனவும் படும் மனம். புத்தி, சித்தம், அகங் காரம்

இம்மை - இப்பிறப்பு

இயமம் - தீது அகற்றல் · அட்டாங்க யோகத்துள் ஒன்று

இரண்டடக்காமல் – மலம், சலம் இவற்றை அடக்காமல்

இரண்யகர்ப்பம் - நான்கு

இரவிமதி - சூரியகலே, சந்திர கலே

இராகம் - விருப்பம்

இராசி - மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்

உபாதைகளில் ஒன்று. அதாவது சூக்கும உடம்போடு கூடிய நிலே

இராசிஉருவம் - மேஷம் - ஆடு
ரிஷபம் - எருது
மிதுனம்–ஆண்பெண்
கடகம்-நண்டு
சிம்மம்-சிங்கம்
கன்னி-பெண்
துலாம்-தராசு
விருச்சிகம்–தேள்
தனுசு-வில்
மகரம் - முதலே
கும்பம் - குடம்
மீனம்-மீன்

இராசிநட்சத்திரம் -

மேஷம் - அஸ்வனி, பரணி, கிருத்திகை முதல்கால்

ரிஷபம் – கிருத்திகைமுக்கால், ரோகணி மிருகசீரிடம் முன்னரை

மிதுனம் - மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புணர்ப்பூசம் முக்கால்

கடகம் - புனர்ப்பூசம் பின்கால் பூசம், ஆயில்யம்

சிம்மம் - மகம், பூரம், உத்திரம் முதல்கால்

கன்னி - உத்திரம் முக்கால், அஸ்தம், சித்திரை முன்னரை

துலாம் - சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முக்கால்

விருட்சிகம் – விசாகம் பிற்கால், அனுஷம், கேட்டை

தனுசு - மூலம், பூராடம், உத்திராம் முதற்கால்

மகரம் – உத்திராடம் முக்கால் திருவோணம், அவிட்டம், முன்னரை

கும்பம் - அவிட்டம் பின்னரை சதயம், பூரட்டாதி முக்கால்

மீனம் – பூரட்டாதி பிற்கால், உத்திரட்டாதி, ரேவதி

இராசி நிறம் -

மேஷம் தனுசு சிம்மம்	—சிகப்பு
ரிஷபம் துலாம் கடகம்	—வெண்மை
மிதுனம் கன்னி மகரம்	—கறுப்பு
விருட்சிகம் கும்பம் மீனம்	—பச்சை

இராஜகிரகம்–சுக்கிரன், செவ்வாய், சூரியன்

இருவினையொப்பு - நல்வினே, தீவினேயொப்பு

இருள்தேகம் – தூலதேகம்

இலயம் - ஒன்றுதல்

இலலாடம் – புருவமந்தி

இழை - நூல்

ஈ

ஈ - குகை, பூரம்பாகிய குண்டலினி

ஈசத்துவம் - ஐந்து தொழிலையும் நடத்துவது. அஷ்டமாசித்துக் களில் ஒன்று. சம்பந்தர் எலும் பைப் பெண்ணாக்கியது சான்று

ஈசம் - ஈசோபநிடதம்

ஈசன் - சிவன்; சிவதத்துவம்

ஈசனுள் - திருவாதிரை

ஈசானம் - வடக்குதிசை முகம். சிவனது ஐந்து முகத்துள் ஒன்று. புரோற்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சருவோ கிதம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் முதலிய ஆகமங்கள் தோன்றின; அணைத்து மாறு தல்

ஈசானிய மூலை - வடகிழக்குமூலை

ஈசானியன் - சிவன்

ஈசுவரதத்துவம் - கடவுள் தத்து வம்

ஈசுவரபிரணிதானம் - இறைவ னிடம் நிறைந்த ஈடுபாடு

ஈட்டியது - சஞ்சிதவினை

ஈனோர் - இவ்வுலகத்தோர்

உ

உக்கிரநட்சத்திரம்- பரணி, மகம் பூரம், பூராடம், பூரட்டாதி ஆகிய ஐந்தும் ஆம்

உக்கிரன் - சிவன்

உக்கிரி - துர்க்கை

உகக்கனல் - வடவா முகாக்கினி

உச்சாடணம் | — உச்சரித்தல்;
உச்சாரணம் | ஜெபம்

உச்சுவாசம் - மூச்சை உள்ளி ழுத்தல்

உட்சேபணம் - கீழிருந்து மேல் நோக்கிச்செல்லல்

உட்டணகாரகன் - சூரியன்

உட்டியானு - கால்களைச் சிறிது பரப்பி அகற்றி உடலைச் சற்று முன் வளைத்து கைகளைத் தொடையின் மேல் வைத்து வயிற்றை எக்கி மூச்சு முழுமை யும் வெளிவிட்டுக் குடலை மேலே ஏற்றும் ஒருவித ஆசனம்

உட்பகை - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச் சரியம், ஆறும் உள்ளிருந்து தீங்குவிளைவிப்பன,

உடல் - அத்திப்பழம், கோயில், முட்டை, இடிஞ்சில்; தோற்பை, பூட்டும்தறி, வேங்கடம், பானை, அச்சு, சால், உலைப்பொறி, ஊர், கோட்டை, பாடி, கரும்பு, தண்டு, அத்தி, சீரங்கம், சரீரம், குரம்பை, பழம்பதி, தோணி, காயத்தேர், நிலம், இருட்டறை, மாயப்பை, மாயா புரி, பறவை, கழனி, உலை, கூடு, ஐந்தகம், பந்தல், நாடு, மன்னுமலை ஆகிய வேறுபெயர் களால் சித்தர் இலக்கியங் களில் குறிக்கப் பெறும்

உடலந்தம் - உடலழிவு

உடலிலான் - மன்மதன்;

உடு - விண்மீன்

உத்தமநாள் - திங்கள், புதன், வியாழன், வெள்ளி

உத்தமமாதம் - உத்திராயண மாதமாகிய தை, மாசி, சித்தி ரை, வைகாசி, ஆனி ஐந்தும் ஆகும்,

உத்தர - பிந்திய

உத்தரம் - விடை

உத்தானபாத ஆசனம் - நேராக நிமிர்ந்து, முதுகுதரையில் பொருந்தப்படுத்து, கைகளை உடம்போடு சேர்த்துப் பக்க வாட்டில் வைத்து, மெல்ல இரு கால்களையும் 40° உயரத் தூக்கி நிறுத்தி இறக்குவது.

உத்திதபத்மாசனம் - பத்மாசனம் போட்ட நிலையில் இரு கைகளையும் பக்கவாட்டில் வைத்து உடலை மேலே தூக்குதல்

உத்திரட்டாதி - அரசு, கோ, வரை, மன்னன் முதலிய வேறு பெயர் உடைய நட்சத்திரம்

உத்திரம் - குளம், ஏரி, தடாகம் வாவி முதலிய வேறு பெயர் உடைய நட்சத்திரம்

உத்திராடம் - ஊர்தி, மூர்த்தம் முதலிய வேறுபெயர் உடைய நட்சத்திரம்

உதகம் - தண்ணீர்

உதராக்கினி - அடிவயிற்றுத் தீ

உதவாயோகம் - விஷ்கம்பம், அதிகண்டம், சூலம். கண்டம், வியாகாதம், வச்சிரம், விதி பாதம், பரீகம், வைதிருதி, ஆக ஒன்பதும் சுபகாரியங் களுக்கு உதவாத யோகங்கள்

உதாசனன் - தீ; அக்கினி

உதானன் - வயிற்றின் சொ[illegible] மானம் செய்து அன்னசாரத் தைப் பிரிக்கும். இச்சாரத்தை வெளிப்படுத்தலும், கலக்கு தலும் செய்யும்

உதீசி - வடக்குத் திசை

உபசாரம் - இருக்கை அளித்தல், கால் கை தூய்மை செய்தல், நீராட்டல், ஆடைதருதல், முப்புரிநூல் தருதல், சந்தனம் பூசல், மலர்சாத்துதல், மங்கள அரிசி தூவல், நறும்புகை காட்டுதல், விளக்கிடுதல், கற்பூரமேற்றுதல்- அமுதமேற்றல் அடைக்காய் தருதல், மந்திர மலரால் அருச்சித்தல் ஆக பதினறு

உபத்தம் - எருவாய்

உபதேசம் - குருமொழி

உபபத்தி - புரிந்து கொள்ளும் தன்மை

உபமானம் - ஒப்புமை

உபரதி - துறவு மேற்கொளல்

உபலத்தி - உள்ளதென்றறியும் அறிவு

உபவேதம் - ஆயுர், தநுர், காந்தர்வ என மூன்று

உபாசனகாண்டம் - வேதத்தி தியானம் பற்றிய பகுதி

உபாசனை - தியானம்

உபாதானம் - முதற்காரணம்

உபாயம் - உத்தி; கருவி

உபேயம் - முடிவு

உயிர்த்துணைவன் - பிராண வாயு

உலகம் - மேல் உலகம், கீழ் உலகம் என இரண்டு. மேல் உலகமாவன பூலோகம், புவலோகம், சிவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என ஏழு.

கீழ் உலகமாவன - அதலலோகம், விதலலோகம், சுதலலோ

கம், தராதலலோகம், இச்சாதலலோகம், மகாதலலோகம், பாதாலலோகம் என ஏழு

உலோசனம் – கண்

உலோபம் – கருமித்தனம்

உருத்திர பூமி – மயானபூமி; காபாலிக பூசை செய்யும் இடம்; சிவன் உகந்த இடம். அண்டத்திலும் பிண்டத்திலும் உண்டு.

உஜ்ஜயி – ஒருவகை மூச்சுப் பயிற்சி. இரு மூக்குத் துவாரத்திலும் மூச்சை உள்ளிழுத்து சிறிது நேரம் வைத்திருந்து இருநாசி வழியாகவும் வெளிவிடல்

ஊ

ஊர்த்துவ தாண்டவம் – ஊழிக் கால நடனம்; பத்துத்திசையும் தாண்டி ஆடுவது. தாந்திரிக முறையினர் பயில்வது

ஊர்த்துவமுக நட்சத்திரம் – ரோகிணி, திருவாதிரை, அவிட்டம், திருவோணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, சதயம் ஆகியவை மேல் பார்வையுள்ள நட்சத்திரங்கள்

எ

எச்சம் – யாகம் செய்வோன்; யாகத்தின் அதி தேவதை

எசம் – நரம்பு; நாடி

எஞ்ஞம் – யாகம், வேள்வி

எண்குணம் – தன்வயத்தனாதல். தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுணர்வினனாதல், இயல்பாகப் பாசங்களில் இருந்து நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலா ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை

எட்சினி – துர்க்கைக்கு ஏவல் செய்யும் பெண்

எட்டுணை – எள் + துணை – எள்ளளவு

எட்டுத்திசையானை – ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் எனும் எட்டுத்திசையானைகள்

எட்டேகால்லட்சணம் – அவலட்சணம்

எழுத்து – விண்ணெழுத்து – வ
நீரெழுத்து – ம
நிலவெழுத்து – ந
நெருப்பெழுத்து – சி
காற்றெழுத்து – ய

எல் – சூரியன்; பகல்

எல்லிமனை – தாமரை

ஏ

ஏகமாய் – ஒப்பற்ற

ஏரொளிச் சக்கரம் – ஏர், எழுச்சி அழகு, ஒளி, சோதி உள்ளொளியைஎழுப்பி, திருவருள் ஒளியால் கலக்கச் செய்தற்கான முயற்சியை அனுபவப் பூர்வமாக்குதல், கருத்து நிலையில் இருந்து காரியநிலைக்கு மாற்றுவதற்குப் பயன்படும்உபாயம்.

ஆக்கும் ஆற்றல் – ஏரொளி
அழிக்கும் ஆற்றல் – காரொளி

ஐ

ஐஸ்வரியபிரதானபத்தி - இறைவனின் மேம்பட்ட தன்மையை ஒப்புக் கொள்ள அவனிடம் செலுத்தும் அன்பு

ஐஸ்வரியம் - மேம்பட்டிருக்கும் தன்மை

ஐந்திற்கிரண்டுபழுதில்லை- அண்டம், பிண்டம் இவற்றில் பஞ்ச பூதங்களில் ஆகாயம், மண் இவற்ருல் குற்றமில்லை.
தீ - பித்தம்
நீர் - சிலேத்துமம்
காற்று - வாதம்
இவை மூன்றும் மிகினும் குறையினும் துன்பம் தரும்.

ஐந்துடல் - பஞ்சகோசம்
அன்னமயம் - பூதஉடல்
பிராணமயம் - கருமேந்திரியம், பிராணன்
மனோமயம் - கருமேந்திரியம், மனம்
விஞ்ஞானமயம் - ஞானேந்திரியம், புத்தி
ஆனந்தமயம் - அவித்தை

ஐந்தெழுத்து - பஞ்சாட்சரம்
தூலபஞ்சாட்சரம் - நமசிவாய
சூக்குமபஞ்சாட்சரம் - சிவாயநம
அதிசூக்கும பஞ்சாட்சரம் - சிவாயசிவ

ஐந்தொழில் - படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல்

ஐப்பசி - அஸ்வனி நட்சத்திரத்தில் பருவம் வருவது

ஐம்பத்தோர் அட்சரம் -

அ முதல் ஔ வரை		12
க வரிசை ஒலி		4
ங		1
ச வரிசை ஒலி		4
ஞ		1
ட வரிசை ஒலி		4
ண		1
த வரிசை ஒலி		4
ந		1
ப வரிசை ஒலி		4
ம ய ர ல வ ழ ள ற ன	—	9
ஹ ஜ ஷ ஸ க்ஷ ஓம்	—	6
		51

ஒ

ஒண் குரு - அனுபவமுடைய குரு

ஒரு மகள் - ஒப்பற்ற திருவருள்

ஒருமை - சாயுச்சிய நிலை

ஒழுக்கம் - இந்திரிய ஒழுக்கம், கரண ஒருக்கம், ஜீவ ஒழுக்கம் என மூன்று

ஒன்பான் அவத்தை - ஸ்தூல தேகம் 5, சூக்கும தேகம் 5, கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, ஆக 20 தத்துவங்களும் சீவனுக்குத் தூலதேகம். சாக்கிர அவத்தையில் விஸ்வன் எனப்பெறும்.

மனம்-1, புத்தி-1, அகங்காரம் -1. ஆக 3 தத்துவமும் சீவனுக்கு சூக்கும தேகம், சொப்பன அவத்தையில் தைசதன் எனப் பெறும்.

பிரகிருதி - சீவனுக்குக் காரண தேகம். இது சுழுத்தி அவத்தையில் 'பிராஞ்ஞாபிமானி' எனப் பெறும்.

புருடன் பரனுக்குத்தூலம்-இது சாக்கிர அவத்தையில் 'விரட்ட பிமானி' எனப் பெறும்.

காலபரம் ஒன்று பரனுக்குச் சூக்கும தேகம், சொப்பன அவத்தையில் 'பொன்கர்ப்பன்' எனப் பெறும்.

வியோமம் ஒன்று பரனுக்குக் காரணதேகம். சுழுத்தி அவத்தையில் 'அவ்யாகிருதபி மானி' எனப் பெறும்.

பரம்ஒன்று சிவத்திற்குத்தூலம் சாக்கிரத்தில் 'சிற்சொலி தாபி மானி எனப்பெறும்.

மாயை ஒன்று சிவத்திற்குச் சூட்சுமம். சொப்பனத்தில் 'பிர சாபத்யாபிமானி' எனப்பெறும் பின்னுசத்தி ஒன்று சிவத் திற்குக் காரணதேகம். சுழுத்தி அவத்தையில் 'ரொற்புவி சாந்தாபிமானி' எனப்பெறும். இவற்றில் முதல் மூன்றும் சீவ அவத்தை; இடைமூன்றும் பர அவத்தை; கடை மூன்றும் சிவ அவத்தை எனப் பெறும்

ஒன்றைப் பெருக்காமல் – ஆண் பெண் உடல் சேர்க்கையை அதிகமாக்காமல் மாதம் ஒரு முறை சேர்தல் வேண்டும் என்பர். 'பெண்கடமை திங்க ளுக்கோர் காலன்றி மருவோம்' —1525 பதார்த்தகுண சிந்தாமணி

ஓ

ஓமாக்கினி - ஓமத்தீ, வேள்வித்தீ

ஓரிருவர் - சிவசக்தி; பதிபசு

க

ககோளவித்தை -வானசஞ்சாரம், குளிகை கொண்டு சஞ்சாரம் செய்தல்

கடகம் – கார், அலவன், கொண் டல், நீர், நண்டு முதலியன வேறு பெயர்கள்.

கண்ணிழந்த பகவான் - சுக்கி ரன் (அ) வெள்ளி

கண்ணுதன் வெற்பு - கயிலை மலை

கதம் - சீற்றம்

கதி - வீடுபேறு

கந்தம் - மணம்

கந்து - பற்றுக்கோடு

கபாலபதி - மூச்சுப்பயிற்சியில் ஒன்று. மூக்கின் இரு துவாரங் கள் வழி மூச்சை உள்ளிழுத்து உடன் வெளிவிடல்

கபாலிகன் - கபாலம் முதலியன கொண்டுருத்திர பூமியில் தந்திரசாதனை செய்வோன்

கமல பீடம் – மணிபூரகம்

கமனகுளிகை - ஆகாயகுளிகை

கமனம் - இடப்பெயர்ச்சி, உலா வல்

கர்மகாண்டம் - வேதத்தின் சடங்குபற்றிக் கூறும்பகுதி

கர்மம் - விரும்பிச்செயும் வினை

கர்மயோகம் - தன்னலமற்ற சேவை மார்க்கம்.

கர்மேந்திரியம் - இயங்கச் செய லுறுப்பு; உபஸ்தம், பாயு, பாணி, பாதம், வாக்கு

கரணம் – பஞ்சாங்கத்தில் ஒவ் வொரு தினத்திலும் ஐந்தாவது அங்கமாக வருவது; கருவி; மனம்

கரிமா - லேசான பொருள் சுமையுள்ளதாதல். சிபிச்சக்கரவர்த்தியின் எடையளவு புருவின் எடை உயர்ந்தல் சான்று.

கலை - அறிவு
சூரியகலை - 16 உருவ அறிவு
சந்திரகலை - 12 மன அறிவு
அக்கினிகலை - 64 ஆன்ம அறிவு;

64 கலைகள் : அக்கர இலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம்,சோதிடம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுன சாத்திரம், சிற்பசாத்திரம், வைத்திய சாத்திரம், உருவ சாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடணம், நாடகம், நடனம், சத்தப்பிரமம், வீணை, குழல். மிருதங்கம், தாளம், அஸ்திரபரிட்சை, கனகப்பரிட்சை, இரதப்பரிட்சை, யானைப்பரிட்சை, குதிரைப் பரிட்சை, ரத்தினப்பரிட்சை, பூமிப்பரிட்சை, சங்கிராமஇலக்கணம், மல்யுத்தம், ஆகருஷ்ணம், உச்சாடணம், வித்து வேடணம், மோகனம், வசீகரம், மதனசாஸ்திரம், இரசவாதம், காந்தருவ வாதம், பைபீல வாதம், கவுத்துக வாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், பரகாயப்பிரவேசம், ஆகாயகமனம், அதிரிசயம், இந்திரஜாலம்,மகேந்திரஜாலம் அக்கினிதம்பம், ஜலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம் =64

கவளீகாரித்தல் - அடக்கி கொள்ளுதல்

கள்வன் - ஆன்மா உடனின்றும் பசு ஞான, பாசஞானங்களாலறியப் படாதவன்.

கன்மச்சயம் - வினையொடுக்கம்

கன்னி - மாது, பெண், தெரிவை-வேறுபெயர்கள்

கனயோகபதி - துரியாதீதநிலை

கனயோகம் - சாக்கிரம்

கா

காண்டல் - ஐயுறவின்றித் தெளிதல்

காந்தபாவம் - கணவனிடம் மனைவி கொண்டுள்ளஉறவின் பாங்கு

காமதேவர் - கவுனகுளிகை

காமம் - மனநிறைவு; வேட்கை

காமாக்கினி - ஆறுவகைத் தொழில் காரணமான தீ; காமத்தீ

காமியகர்மம் - விரும்பிச்செய்யும் வினை

காமியவிதி - விரும்பிக்கடைப் பிடிக்கும் விதி

காயத்திரி - கா+ய+திரி. கா-ஜலதத்துவமாகிய ஸ்தூல தேகம், பிரம்ம சுருபம்; ய-வாயுத் தத்துவமாகிய சூக்கும தேகம்; விஷ்ணு சுருபம்;

ஆ - அக்கினி தத்துவமாகிய காரணதேகம், ருத்திர சுருபம். திரி-மூன்று; அதாவது மேற் குறித்த மூன்று தேகங்களின்

ஸ்வருப, ருப, சுபாவ குணங்களை ஐயம் திரிபு மயக்கம் இன்றிக்கடத்தல்; சனனமரண சாகரம் நீங்குதல்

காயாபுரி - உடம்பு

கார்த்திகை - கிர்த்திகை நட்சத்திரத்தில் பருவம் வருவது

கார்மனம் - சூன்யம் வைக்கும் எண்ணம்; தீயஎண்ணம்

காரகம் - கிரகங்கள் தாங்கள் கொடுக்கும் பலன்களை இன்னதென்று உரைப்பது

காரணசித்தம் - காரணமனம்

காரியசித்தம் - காரியமனம்

காரியதாஞானம் - தன்னுடைய கடமைகள் பற்றிய அறிவு

காலதத்துவம் - ஆன்மாவுக்குரிய போக தத்துவங்களை நிர்ணயிக்கும் காலம்

காலாதிசம் - அனுகதம்

காலைக்கோட்டி விவகாரம் - அனுகதம்

காவியம் - கும்பம்

காற்று - பிராணன்

காற்றெழுத்து - 'ய' கரம்

கி

கிங்கிரர் - ஏவலர்

கிஞ்சிஞ்ஞன், கிஞ்சிக்கியன் — சிற்றறிவினன்

கிரகமாலிகாயோகம் - லக்கினத்திலிருந்து ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கிரகம் இருத்தல்

கிராகியம் - பஞ்சேந்திரியம்

கிரியை - செயல்

கிருகஸ்தன் - இல்லறத்தலைவன்

கிருகரன் - செரிமான நீர்களைச் சுரக்கச் செய்து பசி [illegible]

கட்டுப்படுத்தும். இருத்தல், போதல், தும்மல், இருமல் ஆகிய தொழிற்குக் காரணமாம்

கிருத்திகை - எரி, அங்கி, அழல், அறுமீன் முதலியன வேறு பெயர்

கீ

கீதாந்தரன் - அனுகதம்

கீதாயோகம் - இறைவனை நினைந்து உருகித் தன்னை மறந்து பஜனைபாடல்

கீரைத்தண்டு போலாதல் - உடம்பில் குளிர்ச்சி ஏற்படல்; மரண அறிகுறி

கு

குக்குடஆசனம் - கோழிபோல் உட்கார்ந்த நிலை. பாதங்கள் இரண்டையும் மாற்றித் தொடைகள் மேல் ஏறுமாறு செய்வித்து உடம்பின்பளுவை முழங்கை தாங்குமாறு வைத்து அசைவின்றி இருத்தல்

குடிலம் - ஆகாயம்; சுத்த மாயை

குடிலை - சுத்தமாயை; பிரணவம்

குண்டம் - மூலாதாரம், வேள்வித் தீவைக்கும் பாண்டம்

குண்டலம் - குண்டலி

குண்டலி - குண்டலினி

குண்டலிகம் - மூலாதாரம்

குண்டலினி - மூலாதாரத்தில் இருக்கும் பாம்பு வடிவமான சக்தி; சுக்கில சுரோணிதம்

குணத்ரயம் - முக்கோணம்

குணபூரணம் - எல்லாக்குணங்களும் ஒரு சேர அமைந்து முழுமை பெற்றது

குணம் - இயல்பு

கும்பகம் - மூச்சை உள் நிறுத்துதல்

கும்பம் - குடம், ஜாடி, சால், கடம் வேறு பெயர்கள். உடல்

கும்பித்தல் - மூச்சடக்கல்

குரு - வியாழன்; வழிகாட்டி; அந்தணன்; இறைவன்; மந்திரி; பொன்; வேதியன்

குருபதி - துரியாதீதம்

கூ

கூடத்தன் - ஆன்மா

கூத்தன் - உயிர், சிவன்

கூர்மன்- தசவாயுக்களில் ஒன்று. கொட்டாவி விடல், வாயை மூடல், காட்சிகளைக்காணல், கண்ணிர் வரச்செய்தல் ஆகிய தொழிற்குக் காரணம்

கே

கேதாரயோகம் - ஜாதகத்தில் லக்கினம் முதல் வரிசையாய் நான்கு ஸ்தானங்களில் கிரகம் இருத்தல்

கேது - செங்கோள், கொடியன், ஞானி, மோட்சகாரகன், சதிர் பகை என்பன வேறுபெயர்கள்

கேவலம் - சார்பற்ற

கை

கைலைவழி - திருக்கயிலாயமரபு

கைவல்யம் - முழுமை பெற உள்ள வழி

கொ

கொடுரக்கிரகம் - பாவக்கிரகம் எனவும்படும். சூரியன், தேய்பிறைச்சந்திரன், சனி, செவ்வாய், ராகு, கேது - 6

கோ

கோ - பசு; ஆன்மா

கோசம் - உடல்

அன்னமயம்-தூலஉடல்

பிராணமயம்
மனோமயம்
விஞ்ஞானமயம்
ஆனந்தமயம் — சூக்கும உடல்

கோசாரப்பலன் - சூரியன் முதலிய கிரகங்களின் சஞ்சாரப்பலன்; கோள்+சாரம்+பலன்

கோத்திரம் - கோள்+ திரம் கோள்களின் நிலை; பரம்பரை

கோபாக்கினி - ஆறுவகைத் தொழிற்குக் காரணமாகியதீ - கோபத்தீ

கோமகன்- பசுக்களின் தலைவன், இறைவன்

ச

சக்கரதயோகம்-ஜாதகத்தில் லக்கினம் முதல், வரிசையாய் ஆறு இடங்களில் நட்சத்திரங்கள் இருத்தல்

சக்கரம் - பெரும்பான்மை வட்டமாயும் சிறுபான்மை பிற வடிவங்களிலும் பல்வேறு உலோகம் அல்லது மரத்துண்டுகளில் வரைதல். தந்திரகலை பயில்வோரும் யோகியரும் வரைந்து அதன்மீது அமர்ந்து சாதனை செய்தல் உண்டு. தெய்வ வடிவங்களைப் பிரதிஷ்டை செய்வதன் முன் அந்தந்த தெய்வங்களின் மந்திர எழுத்துக்களை

சர்வாங்காசனம் - விபரீதகரணியைப்போலவே உடம்பை நிறுத்திக் கழுத்துப்புறத்தின் மேல்நிற்குமாறு செய்தல். முதுகுப்புறத்தையும் தூக்கி நிறுத்துதல்

சர்வோத்தமம் - உயர்ந்த உள்பொருள்

சரநட்சத்திரம் - சுவாதி, திருவோணம், புனர்ப்பூசம், அவிட்டம், சதயம்

சரியை - புறவழிபாட்டில் பின்பற்றும் சடங்கு

சரீரத்திரயம் - தூலம், சூக்குமம், காரணம்

சரீரம் - உடம்பு

சரீரி - உடம்புடைய; உயிர்; ஆன்மா

சருமாசனம் - புலித்தோலாசனம்

சல்லிய நட்சத்திரம் - வலப்புறம் சஞ்சரிக்கும் நட்சத்திரம். வலவோட்டு நட்சத்திரம் அஸ்வனி, பரணி, கிருத்திகை புனர்ப்பூசம், பூசம், ஆயில்யம் அஸ்தம், சித்திரை, சுவாதி, மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி = 15

சல்லியவித்தை - மாந்திரீக வித்தை

சல்லியன் - மாந்திரீகன்

சலத்தம்பம்- விந்துகட்டுதல்; நீர் மேல் நடத்தல்

சலம் - சொற்புரட்டு; நீர்; அசைதல்

சவிகற்பசமாதி - விகற்பத்தோடு கூடிய சமாதி

சவாசனம் - உடம்பு முழுவதையும் பூமியில் படுமாறு கிடத்தித் தளரவிடல். உடம்பைத் தன் நினைப்பு இன்றிக் கிடக்குமாறுசெய்தல்

சவிகல்பம் - வரையறுக்கப்பட்ட புலன் காட்சி

சற்புத்திரமார்க்கம் - நன்மக்கள் நெறி

சன்மார்க்கம் – நன்னெறி

சன்னியாசம் - துறவுவாழ்வு

சனி – ரவிமகன், முடவன், முதுமகன், மந்தன், நீலன், கரியவன் முதலியன வேறு பெயர்கள்

சனித்தது - பிறந்தது

சனுதனு - பழமை வாய்ந்த

சா

சாக்கிரம் - விழிப்பு; நினைப்பு; நான்கு அவத்தைகளில் முதலாவது

சாகாக்கல்வி - மரணமிலாப்பெருவாழ்வு முறை

சாகாத்தலை - சாகாமல் காக்கின்ற தலையமுது வான் தத்துவம்

சாத்தியம் - நிறுவப்பட வேண்டுவது

சாத்தியோபாயம் - நிறுவப்பட வேண்டுவதை அடைவதற்கென்று ஏற்பட்ட வழிகள்

சாத்திரம் – சமய நூல்கள்

சாத்விககிரகம் - குரு; சந்திரன்

சாதகன் - ஆன்மீக நெறி நிற்பவன்; யோகி; பயில்பவன்

சாதனம் - நல்வழி, உயர்வழி, ஆன்மிகம்

சாதனை - முயற்சியுடன் கூடிய பயிற்சி

சாதாரண தீட்சை – முதல்வன் சகலருக்கு மானுட வடிவை ஆதாரமாகக்கொண்டு செய்யும் தீட்சை

சாதுவன் - ஐம்பொறியும் வென்றோன்.

சாந்தபாவம் - குழந்தையிடம் தோன்றும் தாய்மைப் பற்று

சாந்தி – மன அமைதி

சாம்பவி சக்கரம் – சாம்பவி மண்டல சக்கரம்: சம்பு-சாம்பு = ஆனந்தம், எட்டுக்கோடுகள் கீறி வரைவது, (திருமந்திரம் 1273) ; சக்தி சக்கரம்

சாமானிய குணம்-பொதுக்குணம்

சாமீப்யம் | சாமீபம் | - சைவ சித்தாந்த நூல்கள் கூறும் நான்கு இறைமை நிலைகளில் இரண்டாவது. இறைவனருகில் இருக்கும்பேறு

சாயாக்கிரகம் - கேது

சாயாதேவி தரிசனம் – தன் நிழலைப் பார்த்துப்பின் ஆகாயத்தைப் பார்த்து அவ்வுருவின் பிம்பத்தைப் பார்த்தல். இப்படிப் பன்னிரண்டு வருஷம் பார்த்தால் சூரியனின் மனைவி சாயா தேவியின் தரிசனம் கிட்டும், அவளே குருவாகி அருளுவாள்.

சாயுச்சியம் – சைவ சித்தாந்த நூல்கள் கூறும் நான்கு நிலைகளில் இறுதியானது இறையுடன் இணைதல்

சார்பு – பற்று

சார்பு கெடல் - பற்று நீங்குதல், தத்துவங்களில் இருந்து நீங்கல்

சாரூப்யம் | சாரூபம் | –சைவ சித்தாந்த நூல்கள் கூறும் நான்கு நிலைகளில் மூன்றாவது. இறை வடிவம் பெறுதல்

சாலோகம் - சைவ சித்தாந்த நூல்கள் கூறும் நான்கு நிலைகளில் முதலாவது. இறையுலகத்திலிருக்கும் பேறு

சாவாமருந்து – அமிர்தம் எனச் சொல்லப்பெறும் மதியமுது. யோக அமுரி, மாங்காய்ப்பால் கறவாப்பால், காயாப்பால், சந்திரபானம் முதலிய சொற்களால் குறிக்கப்பெறுவது.

சி

சி - சிவம்; நாயோட்டுமந்திரம்

சிகாமந்திரம்–தலை, காது முதலி ஆறு அங்கங்களையும் தொட்டு ஜபிக்கும் மந்திரம்

சிங்குவை – நாக்கு

சிஷ்டர் | சிட்டர் | —நல்லோர்

சிஷ்டபரிபாலனம் – நல்லோரைக் காத்தல்

சிஷா – ஆறு வேதாங்கத்தில் ஒன்று ; எழுத்துக்களை உச்சரிக்க வேண்டிய முறை

சித் – பேரறிவு

சித்தசாந்தி – மன அமைதி

சித்தந்தெளிதல் – மனம் தெளிவடைதல்

சித்தர் - சித்தத்தைச் சிவன் (இறைமை) பால் வைத்தோர்;

சித்தமல மறுத்தோர்; சிவன்; சித்தியடைந்தோர். 'சிந்தையிலே களங்க மற்றோன் சித்தனுவான்' – 50 அகத்தியர் குருநூல் முப்பூ 50

செகமெலாம் சிவமென்றே அறிந்தோன் சித்தன்.
2 வால்மீகர் சூத்திரம் 16

சித்தர் குளிகை – ககன குளிகை

சித்தர் பாஷை – பரிபாஷை; குழூஉக்குறி

சித்தர் முதல்வன் – சிவன்; அகத்தியன்

சித்தர் விளையாட்டு – அஷ்டமா சித்து முதலியன.

சித்த ஞானம் - முக்கால உணர்ச்சி

சித்த விருத்தி – மனோ விருத்தி

சித்தாசனம் – இடது குதிகாலை உள்ளடக்கி வலது குதி காலை எதிரில் வைத்து உட்கார்ந்து புருவ மத்தியில் நாட்டம் வைத்தல்

சித்தாந்த சாத்திரம்–

திருவுந்தியார்-திருவியனூர்

உய்ய வந்த தேவநாயனார்

திருக்களிற்றுப் படியார் – திருக்கடவூர்
உய்யவந்த தேவ நாயனார்

சிவஞானபோதம் – மெய்கண்ட தேவர்

சிவஞான சித்தியார் – திருத்துறையூர் அருணந்திசிவாச்சாரியார்

இருபா இருப∴து – திருத்துறையூர் அருணந்திசிவாச்சாரியார்

உண்மை விளக்கம்-திருவதிகை மனவாசங் கடந்தார்

சிவப்பிரகாசம் - கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார்

திருவருட்பயன் ,,
வினவெண்பா ,,
போற்றிப்ப∴றொடை ,,
கொடிக்கவி ,,
நெஞ்சு விடுதூது ,,
உண்மை விளக்கம் ,,
சங்கற்ப நிராகரணம் ,,

சித்தாந்தம் – சித்தர்கள் கண்ட முடிவு, சைவசமய முடிவு; நிலைத்த பொருள் பற்றிய முடிவு

சித்தார்த்தன் – புத்தர்; சித்தி பெற்றவன்

சித்திக்கண் – ஞானக்கண்

சித்திரநாடி – சுழிமுனை

சித்தி விளையாட்டு – அஷ்டமா சித்து; அருள் விளையாட்டு

சித்தி பறத்தல் – ககனப்பிரவேசம்

சித்திரை – நொய்ம்மீன், செவ்வீ, நீவி, ஆடை, வஸ்திரம், முதலிய வேறு பெயர்கள் உடையது

சித்து – அறிவுள்ளது; அசைவுள்ளது;

சித்துருபம் – அருபம்

சித்புருஷன் – சித்தன்

சிதாகாசம்–ஞானகாசம்

சிதாதார பீடம் – சுவாதிட்டானம்

சிதேந்திரியம் – ஞானேந்திரியம்

சிதேந்திரியன் – ஐம்புலன் வென்றோன்

சிந்தாமணி – விரும்பியதைத் தரும்மணி

சிம்மம் – சீயம், அரி, மிருகரசு, முதலிய வேறு பெயர் உடையது

சிம்மாசனம் – முழந்தாளின் மேல் பாதத்தை வைத்து அவற்றின் மேல் கைகளை நீட்டி விருப்புடன் மேல் நோக்கி குற்றமற்ற கண்களை மூக்கின் நுனியை நோக்குமாறு இருப்பது

சிமிட்டு வித்தை – கைச்சாதுர்யத்தால் காட்டும் வித்தை

சிமிள்வித்தை – கண் கட்டு வித்தை

சிரசாசனம் – சிரசை ஆதாரமாகக் கொண்டு இருகைகளையும் மடக்கி இணையாக்கிக் கொண்டு தலைகீழாக நிற்றல்.

சிரவணம் – 32 உபநிடதங்களில் ஒன்று

சிருஷ்டி – படைப்பு

சிலேத்தும கிரகம் – சுக்கிரன், சந்திரன்

சிலேத்துமம் – கபம், நீர்த் தத்துவம்

சிவ அவஸ்தை – சிற்சொலிதாபிமானி, பிரசாபத்யாபிமானி பொற்புவி சாந்தாபிமானி மூன்றும்

சிவகுணம் – எண்குணம்; தன் வயத்தனுதல், தூய உடம்பினனுதல், இயற்கை உணர்வினனுதல், முற்றும் உணர்தல், இயல்பாகப் பாசங்களிலிருந்து நீங்குதல், பேரருளுடைமை முடிவிலா ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை

சிவதத்துவம் – சுத்தவித்யா, ஈஸ்வரம், சாதாக்கியம், விந்து, நாதம் ஐந்தும் சிவதத்துவம்; சுத்த தத்துவம் எனவும் கூறுவர்

சிவதரிசனம் – சிவத்தைத் தரிசித்தல்

சிவபோகம் – சாயுச்சிய இன்பம்; சிவத்தன்மையைத் துய்த்தல்

சிவம் – சி – அனுதியாய் மலமில்லாதது

வ – சர்வ வல்லபமுடையது

சி – எல்லாம் உள்ளதாய் விளங்குவது

வ – எல்லாம் விளங்குவதாய் உள்ளது

ம – இரண்டிலும் நிரம்பிய இன்பம்

சிவயோகம் – சிவனுடன் ஒன்றுதல்

சிவராஜயோகம் – சிவத்துடன் கூடும் பெருமுயற்சி

சிவை – சக்தி

சிவைக்கியம் – சிவன், சீவன் ஐக்கியம்

சிற்சத்தி – அறிவாற்றல்

சிற்சொலிதாபிமானி – பரம் ஒன்று சிவத்திற்குத் தூல தேகம். சாக்கிரநிலையில் இப் பெயர் பெறும்

சின்முத்திரை – சிவன் சனகாதி முனிவர்களுக்குக் கல்லால மரத்தடியில் இருந்து இம் முத்திரையைக் காட்டிப் பொருளுணர்த்தினர்; பெரு விரலின் அடியில் சுட்டு விரல் சேர்த்துக் காட்டும் ஞான முத்திரை

சீ

சீத்தலை – நாக்கைக் குழல்போல் சுருட்டி காற்றை உள்ளே இழுத்து உடனே இருதுவாரம் வழி மெதுவாக விடல்

சீத்தாரி - நாக்கை உள்ளே மடித்து வாயைத் திறந்து காற்றை உள்ளே இழுத்து உடன் இரு துவாரம் வழியாக வெளிவிடல்

சீலம் – நற்குணமுடைமை

சீவ அவஸ்தை – விஸ்வன், தைசதன், பிராஞ்ஞாபிமானி, மூன்று நிலை

சீவ உபாதை – சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி

சீவகுணம் – பராதீனன், துக்க தேகி, செயற்கை உணர்வினன், சிற்றுணர்வினன், பந்தன், நிர்பவன், மலதேகி, காடின்னியன்

சீவதேகம் – தூலம், சூக்குமம், காரணம்

சீவ நாயகன் – ஆன்மா

சீவ வாதக்கட்டளை – உடம்பின் தத்துவங்களைக் குறிக்கும் ஒரு நூல்

சீவன் – தன்னைச் சுற்றிய அஞ்ஞானத்தை நீக்குதற் பொருட்டு குருவருள் பெற்றஆன்மாவின் நிலை

சீவன் முத்தர் – சிறப்புயிர்; முத்தி பெற்ற சீவன்

சீவித மந்திரம் – பஞ்சாட்சரம்

சு

சுக்கல பட்சம்-வளர்பிறை பக்கம்

சுக்கிரன் – வெள்ளி, சுங்கன், மழைக்கோள் வேறுபெயர்; சீதளம்

சுகாசனம் - வசதிப்படி உட்காருதல்

சுட்டுணர்வு – பாசஞானம்

சுத்த அவத்தை – சகல, கேவல அவத்தைகள் தாக்காது பர சுகத்தைப் பெற்றிருப்பது

சுத்த ஆத்ம வாதம் – ஒன்றுமில்லாமையாகிய வாதம்

சுத்த சூன்யம் – முழுப்பாழ்

சுத்தசைதன்யம் – தூய அறிவு

சுத்த சைவம் – நிலைத்த பொருளான இறைவனையும் [பதி], சடப்பொருளான பாசத்தையும், சார்ந்ததன் வண்ணம் பெற்று நிற்கும் இயல்பான அறிவில்லாத பசுவையும் பற்றிய மும்மையறிவு பெற்று, பதி (சித்து) பசு [அசித்து] என்கின்ற

வேற்றுமை நீங்கி சுத்தம் அசுத்தம் [நல்வினை, தீவினை] ஆகிய இருவினை ஒப்பு நிலையில் மலபரிபாகம் செய்தவர்கள் (திருமந்திரம் 1395)

சுத்த தத்துவம் – சிவதத்துவம்; சுத்த வித்யா, ஈஸ்வரம், சாதாக்கியம், விந்து, நாதம்– 5

சுத்ததேகம் – மாயை முதலியன நீங்கி பார்க்கும் பொருள் அனைத்தும் அருளாய் நிற்கும் நிலை

சுத்தவித்தை – சிவதத்துவம் ஐந்தனுள் ஒன்று

சுத்தன் – நின்மலன்

சுத்தாத்துவிதம் – யாதானு மொன்றால் விசேடிக்கப்படாத அத்துவிதம்

சுத்தாத்வைதம் – சீவான்மா, பரமான்வுடன் இரண்டறக் கலத்தல் கொள்கை

சுத்தாவத்தை – கன்மம் நீங்கிப் பிறவியற்று ஆன்மா சுத்தமாயிருக்கும் நிலை

சுபதிதி – துதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி ஏகாதசி, துவாதசி, திரயோதசி, = வளர்பிறை சுபதிதி; பிரதமை, துதியை, திரிதியை, பஞ்சமி = தேய்பிறை சுபதிதி

சுபவாதனை – நானுனுபவம்

சுபோதம் – மெய்ஞ்ஞானம்

சுரோத்திரேந் திரியம் – ஞானேந் திரியம்

சுவாதி – மரக்கால், தீபம், பதுமம், கமலம், சுடர் முதலிய வேறுபெயர்கள் உடையது

சுவாதிஸ்டானம் – ஆறு ஆதாரங்களில் இரண்டாவது இடம். 6 இதழ்களையுடையது. அ, ஐம் மந்திரம். உந்தியை இடமாகக் கொண்டது, பிரம்மா தெய்வம்.

சுழித்தி நிலை – உறக்கத்தில் புருடன், அந்தக் கரணம் ஆக ஐந்து தத்துவமும் கொண்டு ஆன்மா இருதயத்தில் நிற்கும் நிலை.

சுழிமுனை – மூலாதாரத்திலிருந்து ஆக்கினை வரை வீணை தண்டு மூலமாய் ஓடும் நாடி

சுழியோகம் – 64 வகையான யோகங்களில் ஒன்றான சிவோகம்

சுழுத்தி – உறக்க நிலை

சூ

சூக்குமகாயம் – புரியட்டகாயம்; தன்மாத்திரை, புத்தி, மனம், அகங்காரம் எட்டும். அனுகதம், விசுத்தி, ஆக்கினை, நாதம், விந்து, சக்தி, சிவம், பறை எட்டும் சேர்ந்தது என்றும் கூறுவர்.

சூக்குமபஞ்சாட்சரம் – சிவாயநம என்பது

சூக்குமம் – நுண்மை, அணு

சூட்சம் — மணி பூரகம்

சூத்திரக்காரன் – ஒரு கோட் பாட்டுக்கிளையை அமைப்பவன்

சூத்திரப்பாவை – பஞ்ச பூதங் களால் ஆட்டப்படும் உடம்பு

சூரியகலை – பிங்கலை; வலதுநாடி; 16 கலை

சூரியமண்டலம் – சந்திர, சூரிய, தீ ஆகிய மூன்று மண்டலங் களில் ஒன்று

சூரியன் – ஆதித்தன், பருதி, ரவி, ஆதவன், பகலோன், ஆகிய வேறுபெயர் உடையது.

சூலயோகம் – ஜாதகத்தில் ஜனன லக்கினத்திலும் குடும்ப ஸ்தானத்திலும், சகோதர ஸ்தானத்திலும்அந்தஸ்தானுதி பதிகளோடு, சுபக்கிரகங்களும் நட்புகிரகங்களும் சேர்ந்திருத்-தல்

சூன்யநாள் – செவ்வாய்

சூன்யம் – பாழ்; வெளி; முப்பாழ்; வெறுமை

சூனியம் - பாழ்; விளக்காமை, மந்திரத் தீச்செயல்

செ

செகப்பு மயக்கி – மயக்கம் உண்டாக்கும் திரோதாயி சக்தி

செத்தார் – உலகியல் உணர்வற்று இருப்போர்

செத்தாரைப் போலிருத்தல் – செயலற்றிருத்தல்

செய்யாச்செயல்– யாராலும் செய்யமுடியா ஐந்தொழில்

செவ்வாய் - சேய், குசன், அங்காரகன், நிலமகன், வக்கிரகன் ஆகியன வேறுபெயர்கள்

செவிப்பறையறைதல் – மறைமொழி; ரகசிய மொழி

சென்மம் – பிறப்பு

சே

சேடம் – அழித்தல்

சேதனம் – அறிவு

சேதனன் – அறிவுடையவன்

சேர்ந்தாரைக் கொல்லி – தீ; கோபம்

சை

சைவம் – இளம் பருவம்; சிவசிந்தனைக் கொள்கை; சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்கசைவம், கடுஞ்சைவம் எனநான்கு வகைத்து
—திருமந்திரம் 1394

சுத்தசைவம் - நிலைத்த பொருளான இறைவனையும் [பதி] சடப்பொருளான பாசத்தையும் சார்ந்ததன் வண்ணம் பெற்று நிற்கும் இயல்பான அறிவில்லாத பசுவையும் ஆகிய இம்மும்மை அறிவு பெற்று பதி [சித்து] பசு [அசித்து] என்ற வேற்றுமை நீங்கி சுத்தம், அசுத்தமாகிய [நல்வினை, தீவினை] இருவினை யொப்பு நிலையில் மலபரிபாகம் செய்தவர்கள் சுத்த சைவர்
—தி.ம: 1395

அசுத்த சைவம் – அ– எதிர் மறைப் பொருளும் அண்மைப் பொருளும் அன்று. மேலான என்பது பொருள். எனவே மேலான சைவம் என்பது பொருள். சிவவேடம் தரித்துச் சிவன் எழுந்தருளியிருக்கும் எல்லாக் கோயில்களையும் வலம் வந்து, பக்தி நிலையில் ஈடுபட்டு பதி பசுக்களின் இயல்புகளை அறிவதாகிய ஞானம் பெற்றவர்கள்
— தி. ம1398

மார்க்கசைவம் - சிவ சாதனங்களையும், விபூதியையும், தரித்துக்கொண்டு, சரியை, கிரியை யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையும் வகுத்துக்கொண்டு ஒழுகுபவர்கள். — தி.ம 1402–1411

கடுஞ்சைவம் - திருக்கோலம் எதுவும் இல்லாமல் கருத்தால் அன்றிக் கருவியால் செய்விக்கும் தன்மையில்லாது, ஆசா பாசமற்று பசுத்தன்மை கெட நிற்கும் மெய்யுணர்வாளர் - தி.ம 1412-1416

சைதன்ய நிலை - பிறப்பு இறப்பு அற்ற நிலை

சைவாகமம் - சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலிருந்தும் தோன்றின. இவை இருபத்தெட்டு. அவை காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூஷ்மம், சஹச்சரம், அம்சுமான், சுப்ரபேதம், இவை பத்தும் சிவபேதம் எனப்படும்; விஜயம், நிச்வாசம், ஸ்வயம்பூ, ஆக்நேயம்,வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தமம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம், இவை பதினெட்டும் ருத்ரபேதம் எனப்படும்.

சொ

சொப்பனம் - தூக்கத்தில் வாயு 10, அந்தக்கரணம் 4, புருஷன் 1 ஆக 15 தத்துவங்களும் கண்டத்தில் நிற்கும் நிலை

சொல்மறைவு — பரிபாஷை

சொற்பனவஸ்தை — ஆன்மா கழுத்தில் நிற்கும் காலத்தில் மனம் தவிர இந்திரியங்கள் செயலற்றுள்ள நிலை

சொற்பிரபஞ்சம் - மந்திரம், பதம், வன்னம்

சோ

சோகம் - துக்கம்

சோகம்பாவனை - தனக்கு இன்னல் இருப்பதாக நினைத்துக் கொண்டு சதா துன்பப்பட்டுக் கொண்டிருப்பது; அதுவே நான் என எண்ணும்எண்ணம்.

சோடசகலை - மனித உடம்பில் சக்தி பரிணமித்திருக்கும் 16 யோக நிலைகள்

சோதிக்கலை - சூரியகலை

சோதிடம் - சிக்ஷா, வியாகரணம் சந்தஸ், நிருக்தம், சோதிடம், கல்பம் ஆறும் வேதாங்கம் எனப்படும்.

சிக்ஷா - எழுத்துக்களை உச்சரிக்க வேண்டிய முறை

வியாகரணம் - சப்தங்களை உபயோகிக்கும் முறை

சந்தஸ் - கவிபாடும் முறை

நிருத்தம் - ஆங்காங்கு உபயோகப்படும் பெயர்களுக்குக் காரணம்

கல்பம் - வேத விஹிதமாகிய கர்மாக்களைச் செய்யும் தந்திரம்

சோதிடம் - கிரகங்களின் நிலையும் பயனும் அறிதல்

சோமகலை - இடைநாடி, சந்திர கலை

சோமபானம் - மதியமுது, யோக அமுரி, மாங்காய்ப்பால்

சோமன் - சந்திரன்

ஞா

ஞாதா - காண்போன்

ஞாதுரு - அறிவுள்ள ஆன்மா

ஞானகாண்டம் - வேதத்தின் அறிவு பற்றிய பகுதி; சோதிடத்தின் கல்வி ப்ற்றிய பகுதி

ஞானதேகம் - கண்ணுக்குப் புலனுகாது அறிவுக்குப் புலனுகும் உடல்

ஞானம் - உயர் அறிவு; உலகியல் அல்லாத அறிவு; காட்சி

ஞானயோகம் - மெய்ஞ்ஞான அறிவினை மிகுதிப்படுத்த முயல்வது, அறிவு முயக்க மார்க்கம்

ஞானேந்திரியம் - கண், மெய், வாய், மூக்கு, செவி முதலிய அறிவு நிலை உறுப்புக்கள்

நே

நேயம் - அறியக்கூடியது

த

தகனுனவாயு - பிராணவாயு

தச்சுக்கழித்தல் - புது வீட்டில் கிரகப்பிரவேசத்தின் முன்பே பேயோட்டுதற்காகத் தச்சர்கள்செய்யும் ஒரு வகைச் சடங்கு

தசகாரியம் - கைவல்யமாகும் காலத்து ஆன்மா அடையும் பத்து நிலைகள்

தத்துவரூபம் - உண்மை நிலை

தத்துவ . தரிசனம் - ஞானக் காட்சி தத்துவ சுத்தி - தத்துவங்களின் சுத்தி

ஆன்ம தரிசனம் - ஆன்மா தன்னை யறிதல்

ஆன்ம ரூபம் - இயற்கை நிலை யடைதல் அல்லது இயற்கை உணர்தல்

ஆன்ம சுத்தி - ஆன்மாவின் சுத்த நிலை

சிவ தரிசனம் - சிவனைத் தரிசித்தல்

சிவயோகம் - இறைவனுடன் இணைதல்

சிவராஜயோகம் - இறைவ-னுடன் இணையும் பெரு முயற்சி

சிவபோகம் - சிவனுடன் கூடுதல் அல்லது ஒன்றுதல்.

தசத்துவாரி – பெண்; பத்து துவாரங்களை உடைய உடம்புடையவள்;
கண் - 2; காது 2; மூக்கு 2; வாய் 1; கருவாய் 1; எருவாய்1 நீர்வாய்1

தசதானம் - உப்பு, எள், நெய், நெல், பசு, பூமி, பொன், ஆடை, வெல்லம், வெள்ளி

தசதீட்சை – யோகம் பயில்வோரின் பத்துவகை முயற்சிகள்

1. உரோமத் துவாரங்கள் வழியாகக் கெட்ட நீர் வியர்வையாக வெளியேறும்படிச் செய்தல்
2. வாத பித்த சிலேத்துமம் முதலிய முத்தோஷமும் போக்குதல்

3. பழைய ரத்தத்தைச் சுத்தம் செய்தல்
4. உடம்பின் தோலுரிதல்
5. உரோமம் கருத்தல்
6. சுழி முனைவாசல் திறத்தல்
7. உடம்பு ஒளிவடிவு பெறல்
8. கூடுவிட்டுக் கூடு பாய்தல்; வெளிப்பயணம் முதலியன
9. அஷ்டமாசித்து பயிறல்
10. மரணமிலாப் பெரு வாழ்வு பெறுதல்

பத்துமுறை சுத்தி செய்தல்; பத்துமுறை ஊறவிட்டுக் காய வைத்தல்

தசநாடி - இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி சங்கிணி, அலம்புடை, புருஷன் குருவன், சிங்குவை.

தசநாதம் — யோகப் பயிற்சியின் போது கேட்கும்] ஒலிகள்

தசப் பொருத்தம் :- தினப் பொருத்தம்; ராசிப் பொருத்தம்; மகேந்திரப் பொருத்தம்; வசியப் பொருத்தம்; ஸ்ரீ தீர்க்கப் பொருத்தம்; ரஜ்ஜி பொருத்தம்; யோனிப்பொருத்தம்; ராசி அதிபதிப் பொருத்தம்; வேதைப் பொருத்தம்;

தசமன் — ஆன்மா

தசமூலம் — பெரும் பஞ்சமூலம்; சிறுபஞ்ச மூலம்; கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறு மல்லி, பெருமல்லி, நெருஞ்சி- பெரும் பஞ்சமூலம். வில்வம், பெருங்குமிழ், தழுதாழை, பாதிரி, வாகை - சிறு பஞ்ச மூலம், மூலம்-வேர்;

தசவாயு - பிராணன், அபானன். வியானன், உதானன், சமானன் நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன.

பிராணன் - உணவைச் சீரணிக்கும், உடலுக்கு அழிவில்லை.

அபானன் - மலம், நீர் கழிக்க; ஆசனவாய் சுருக்குதல், அன்ன சாரத்தை உறிஞ்சுதல்;

வியானன் - உடலின் உறுப்புக்களை நீட்டல், முடக்கல், அன்ன சாரத்தை உடலின் பகுதி கட்குக் கொண்டு செல்லுதல்

உதானன் - வயிற்றின் செரிமானம் செய்து அன்னசாரத்தைப் பிரிக்கும். மேலும் அச்சாரத்தை வெளிப்படுத்தலும் கலக்குதலும் செய்யும்

சமானன் - ஏனைய வாயுக்களைக் கட்டுப்படுத்தலும், அறுசுவைகளையும், நீரையும், அன்னத்தையும் உடலெங்கும் ஒரே சீராகப்பரவச் செய்யும்.

நாகன்-பாடும்படிச் செய்வதும், கண்களை விழிப்பிக்கச் செய்வதும், சிமிட்டுவதும் மயிர் சிலிர்க்கச் செய்தலும் செய்யும்

கூர்மன் - கொட்டாவி விடல், வாயை மூடல், காட்சிகளைக் காணல், கண்ணீர் வரச்செய்தல்.

கிருகரன் - செரிமான நீர்களைச் சுரக்கச் செய்து பசி வேகத்தைக் கட்டுப்படுத்தும். மேலும் இருத்தல், போதல், தும்மல், இருமல் முதலியன உண்டாக்கும்.

தேவதத்தன் - சோம்பலை முறித்து முயற்சி உண்டாக்கும். சண்டையிடல், அடித்தல், வன்மையாகப் பேசல், கோபம் உண்டு பண்ணுதல் ஆகிய செயல்களுக்குக் காரணம்.

தனஞ்சயன் - ஒலியைப் பிறப்பிக்கச் செய்யும். உடல் விட்டுப் பிராணன் பிரிந்த உடன் மற்ற வாயுக்களில் சோர்வு ஏற்படும். தனஞ்சயன் மூன்று நாள் மட்டுமிருந்து பிணத்தின் தலைவெடித்த பின்னரே மறையும்

தசாங்கம் - பத்து அரசியல் உறுப்புக்கள்; பத்து வகைப் பட்ட வாசனைத் திரவியங்களாலாகிய தூபப்பொடி; யானை, நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, தேர், முரசு, தார் கொடி என்பன பத்து அரசியல் உறுப்புக்கள்

தசிரா - தேவ மருத்துவர்

தசை எடுப்பு - கிரக ஆட்சிக் காலத் தொடக்கம்

தசை வைப்பு - கிரகத்தின் ஆட்சி முடிவு

தஞ்ஞன் — தன்னையறிந்தவன்; ஞானி

தட்சிண கௌளி - ஒருவர் ஒன்றை நினைக்கும் போது மங்களக் குறியாக தெற்கில் இருந்தேனும் வலப்பக்கத்திலிருந்தேனும் சொல்லும் பல்லி

தட்சிணாபதி - யமன்

தட்சிணாமூர்த்தம் - சிவன் தென் முகமாக இருந்து பிரம புத்திரர்களான சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்த திருவுருவம்

தட்சிணாமூர்த்தி - சிவன்; அகஸ்தியன்

தட்சிணாயனம் - சூரியன் தெற்கில் சஞ்சரிக்கும் ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி 6 மாதங்கள்

தடஸ்தன் - ஞானி; பார பட்சமற்றவன்;

தடாக யோகம் – ஜாதகத்தில் ஜன்மலக்கினத்திலிருந்து 2, 5 8 ஆம் வீடுகளிலேனும் ,3, 6, 9 ஆம் வீடுகளிலேனும் ஏழு கிரகங்கள் கூடியிருந்து பெரும் செல்வம் உடையவனுயினும் உலோபி எனக் குறிக்கும் அவயோகம்.

தடைகட்டுதல்-பாம்பு முதலியனவற்றை மந்திரத்தால் தடுத்தல்

தடையறுத்தல் – மந்திரத்தடை நீக்குதல்

தத்துவசுத்தி – தத்துவங்களின் சுத்தம்

தத்துவதரிசனம் – 36 தத்துவங்களும் மாயையின் காரியத்தால் ஏற்பட்ட சடபதார்த்தங்கள் என்று ஆன்மா தன்னறிவிலே விளங்கக் காணும் அனுபவ நிலை; ஞானக்காட்சி

தத்துவத்திரயம் – தத்துவங்களின் உண்மைப் பொருளை உணர்தல்

தத்துவப்பிரகாசம் – தத்துவம் பற்றிய அறிவு விளக்கம்

தத்துவம் – 96 தத்துவங்கள்; 36 தத்துவங்கள்; அடிப்படைக் கருத்து; பூதம் 5 கர்மேந்திரியம் 5 (10) ஞானேந்திரியம் 5 (15) அந்தக் கரணம் 4 (19) மூலப்பிரகிருதி (20) ராகம் (21) புருடன், (22) கலை (23), நியதி (24), காலம் (25) சுத்த வித்யா (26), ஈஸ்வரம் (27),

சாதாக்கியம் (28), விந்து (29), நாதம்(30), சுத்த மாயை (31), மாயை (32), சதாசிவன் (33), பராசக்தி (34), சக்தி (35), சிவன் (36), இவற்றில் சுத்த வித்யா, ஈஸ்வரம், சாதாக்கியம், விந்து, நாதம் முதலியன சுத்ததத்துவம் அல்லது சிவ தத்துவம் எனப்பெறும். பிருகிருதி, வித்யா, ராகம், புருஷன், காலம், நியதி, கலை, முதலியன அசுத்த தத்துவம் அல்லது வித்யாதத்துவம். அந்தக்கரணம், ஞானேந்திரியம், கர்மேந்திரியம், தன்மாத்திரை, பூதம் ஆகியவை ஆன்ம தத்துவம்

தத்துவமசி – தத்—துவம்—அசி அது நீ ஆகிறாய்;

தத்துவரூபம் – உண்மை நிலை

தத்துவ விசாரம் – தத்துவ ஆராய்ச்சி

தந்திரகலை – ஆகமப்பகுதி

தந்திரயுக்தி – பரிபாஷையாகக் கூறுதல்

தந்திரம் – தனு—த்ர—உடம்பின் அழிவில் இருந்து காப்பது; படை ; திருத்தொண்:
எறிபத்தர் : 29
வித்தை : சிலம்பு : கொலை : 166–169
சிவாகமம் : ஞானசம் :
திருமுறை II : 1
செய்யத் தக்கது :
திருநாவு : IV ; 633
உபாயம் : பெருங்கதை : 11–9
தொழில் : சீவக : நாமகள் : 205

தம்பனம் — அஷ்ட கருமத்துள் ஒன்று ஸ்தம்பித்தல்

தமஸ – மந்தத்தன்மை

தமி – தனி முதற் பொருள்

தமோமயம் – அறியாமை வடிவு

தரிசனம் – காட்சி

தரிப்பது – தாங்குவது

தலைக்கண் விருத்தி – பத்மாசனம்

தற்புருடன் – சிவனது முகங்களில் ஒன்று.

தற்போதம் – தன்னறிவு

தற்போத இழப்பு – தன்னை மறந்து தன் நாமம் கெடல்

தன்மாத்திரை – ஐம்பொறிகளின் மூலம்; நுட்பமான சாரம்

தன்னையறிதல் - தத்துவங்களின் இயல்பறிதல்; ஆன்மா தன்னியல் பறிதல்

தன்வசம் - பரம்பொருள் வசம்

தனஞ்சயன்–பிராணன் உடம்பை விட்டுப் போனாலும் தான் போகாமல், உடம்பை வீங்கச் செய்து மூன்றும் நாள் சிரசு வெடித்து வெளியேறும் தச வாயுக்களில் ஒன்று.

தனு - வளரும் நிலையுடைய உடம்பு

தனுசு – வில், சிலை, காண்டீபம் முதலிய வேறு பெயர் உடையது

தனுர் ஆசனம் – வில்லைப்போல் உடம்பை வளைக்கும் ஆசனம். குப்புறப்படுத்து உடம்பைப் பின்புறமாக வளைத்து இரு கைகளால் இரு கால்களையும் பிடித்து இயன்றவரை உடம்பை

மேலே தூக்குதல், வயிற்றில் ஊன்றி இருத்தல்.

தா

தா – அழிவு; மறைதல்

தாகாரித்துவம் – ஆகாய சுருப மறிதல்

தாச பாலனம் – தயாவிருத்தி பதி ஞன்கில் ஒன்று. அணுகி வந்த அடிமையைக் காத்தல்

தாசமார்க்கம் – அடிமைநெறி

தாசியம் – அடிமைப் பாங்கு

தாசு - இரண்டரை நாழிகை நேரம்

தாரணை -- சூக்கும உடம்பின் விந்துவின் (Spiritual Nucleus) அமைவிடம் கண்டு தெளியும் பயிற்சி; மனத்தை ஒருவழி நிறுத்தி உள்முகமாக ஆராய்தல்; தரித்தல்

தாத்பரியம் -- கருத்துப்பொருள்

தாதுக்கள் - தோல், எலும்பு, நரம்பு, மச்சை, ரத்தம், சுக்கிலம்

தாபதர் – தவசிகள்

தாபம் - வெப்பம்

தாமசகிரகம் – சனி, புதன், ராகு கேது

தாராபலன் – நட்சத்திரப் பொருத்தம்; நாள் பொருத்தம்

தி

திக்குயானை—எட்டுதிசை யானைகள் அவை ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபூமம், சுப்பிரதீபம்

திகம்பரன் – திக்கையே ஆடையாகக் கொண்டவன்; நிர்வாணத்துறவி

திசாபுத்திபலன் – கிரகங்கள் அமைந்த இடங்களால் உண்டாகும் நல்ல, கெட்ட பலன்களை அறிதல்

திதி – தினம்; பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பருவம், அமாவாசை

தியானம்-ஆழ்ந்த இறைச்சிந்தனை

தியானயோகம்–தியானமார்க்கம்; ஒருமைப்பாடு

திரவியம் - பொருள்

திரிகரணம் – மனம், வாக்கு, காயம்

திரிகுணம் – இராஜச, தாமச, சத்துவகுணம்

திரிகுணாதீதம் - மூன்று குணங்களுக்கு அப்பால் சென்று

திரிபதார்த்தம் – பதி, பசு, பாசம்; முப்பொருள் உண்மை

திரிபுரைச்சக்கரம் – சக்தி சக்கரம்; ஸ்ரீசக்கரம்; நாற்பத்து முக்கோணச்சக்கரம்; நவகோணச்சக்கரம்

திரிமூர்த்தி – அரன், அரி பிரமன் ஆகிய மூன்று உரு

திரியங்முகநட்சத்திரம் - சம பார்வையுள்ள நாள், அஸ்வனி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி

திருஷ்டாந்தம் – உதாரணம்

திருஷ்டி – கண்ணேறு;
ஜீவதிருஷ்டி – சிந்தித்தல்
மனதிருஷ்டி – விசாரித்தல்
ஆன்மதிருஷ்டி – உள்ளழுந்தல்

திருவம்பலச்சக்கரம் – 6 கோடுகள் 25 கட்டங்கள் வருமாறு அமைத்து அவற்றில் முறையே சிவாயநம, மசிவாயந, நமசிவாய, யநமசிவா, வாயநமசி என வகுத்தல்.

இச்சக்கரத்தின் ஒரு வரிசையின் கடைசி எழுத்து அடுத்த வரிசையின் முதல் எழுத்தாக வருதல். முதல் வரிசையின் முதல் எழுத்து இரண்டாம் வரிசையின் இரண்டாம் எழுத்தாகவும், மூன்றும் வரிசையின் மூன்றும் எழுத்தாகவும், நான்காம் வரிசையின் நான்காம் எழுத்தாகவும், ஐந்தாம் வரிசையின் ஐந்தாம் எழுத்தாகவும் அதேபோல் ஒவ்வொரு வரிசையிலும் வரும்

திருவாதிரை – மார்கழி, உருத்திரன், சிவன் முதலிய வேறு பெயர்கள்

திருவாவடுதுறை – திரு—ஆ—ஆடுதுறை - புனித ஆன்மா மூழ்கும் அருள் துறை

திருவோணம் – உலக்கை, மால், மாயன், மாதவன் வேறு பெயர்கள்

திரோதயி – ஆன்மாவைப் பல காரியங்களுக்கு உட்படுத்தி இறுதியில் பாசங்களை அறுப்பித்துப் புனிதப்படுத்தும் சக்தி

திரோதம் – மறைப்பு

திரோதானசக்தி– மறைப்பாற்றல்; நடப்பாற்றல்

திவ்யம் – புனிதம்

தீ

தீட்சை – தீ—மலம்;
க்ஷை–ஒழிவு; சுத்தி செய்தல்

தீவிதரம் – அடுப்புக்கரி – தீப்பிடித்தல் போல் ஆன்மீக அறிவு பெறல்.

தீவிரம் – காய்ந்த விறகு – தீப்பிடித்தற்போல் ஆன்மீக அறிவு பெறல்.

து

துட்ட நிக்கிரகம் – தீயோரைத் தண்டித்தல்

துரியநிலை - பிராணவாயு, சித்தம், இரண்டு கருவிகளில் பிராணன் ஒன்று மட்டும் இருக்க ஆன்மா நாபியில் நின்று செயல்படும் நிலை

துரியம் - பேருறக்கம்; நான்காம் நிலை; புருடன் மட்டும் கொப்பூழில் தொழில் படும்

துரியாதீத நிலை - துவாதசாந்தம் என்றும் கூறுவர். துரிய நிலைக்கு அதீதமாக விளங்குவது; உயிர்ப்படங்கல்

துருவகலை - சந்திரகலை

துலாம் - கோல், நிறை, தராசு ஆகிய வேறுபெயர்கள்

துவாதசாந்தம் - துவம் - 2; தசம் - 10; அந்தம் - முடிவு, பன்னிரண்டின் முடிவு; ஆறு ஆதாரங்களின் உள்ளும் புறம்பும் ஆகப் பன்னிரண்டு.

துவைதம் - சீவான்மா, பரமான்மாவினும் வேறுனது என்ற கொள்கை. இதன் எதிரான கொள்கைக்கு அத்துவைதம் என்று பெயர்

துளக்கம் - சலனம்

தூ

தூமாயை - சுத்தமாயை

தூரதிருஷ்டி - இடம் கடந்து பார்க்கும் ஆற்றல்; ஞானக் கண்

தூலதேகம் - ஐந்து பூதங்களாலும் ஐந்து குற்றங்களாலும் ஆகிய புறஉடம்பு அல்லது தூல தனு

தூலபஞ்சாட்சரம் - நமசிவாய

தூலவாயு - தனஞ்சயன்

தூவாமாயை - அசுத்தமாயை

தெ

தென்திசைத் தெய்வம் - சிவன்
தென்திசைமுனி - அகத்தியன்

தே

தேஜஸ் - ஒளிமயமான

தேகம் - ஐந்துவகை உடம்பு
இருள்தேகம் - தூலதேகம்
மருள்தேகம் – மாயையில் மூழ்கிய நிலை
சுத்ததேகம் - மாயை முதலியன நீங்கிப் பார்க்கும் பொருள்அனைத்தும் அருளாய் நிற்கும் நிலை.
பிரணவதேகம் - கண்ணுக்கும் கைக்கும் பிடிபடாத நிலை
ஞான தேகம் - உளக் கண்ணுக்குத் தோன்றும் நிலை

தேய்பிறை – பௌர்ணமி கழிந்த மறுநாள் முதல் அமாவாசை வரையில் உள்ள 15 நாளும் தேய்பிறை

தேவதத்தன் – தசவாயுக்களில் ஒன்று. சோம்பலை முறித்து முயற்சி உண்டாக்கும். சண்டையிடல், அடித்து வன்மையாகப் பேசுதல், கோபம் உண்டு பண்ணுதல் ஆகிய செயல்களைச் செய்யும்

தேவர் - தெய்வத்தன்மை கொண்டோர்

தேவர்கணம் - ஆதித்தர் 12;
அஸ்வனிகள் 2;
உருத்திரர் 11;
வசுக்கள் 8;

ஆக 33 பேர்.

தை

தை - பூச நட்சத்திரத்தில் வருவது

தைசதன் – மனம், புத்தி, அகங்காரம் மூன்று தத்துவமும் சீவனுக்குச் சூக்கும தேகம், சொப்பன அவத்தையில் தைசதன் எனப்பெறும்

தைலதாரைத் தியானம் - எண்ணெய் ஒழுக்குப் போல் மனம் ஒருவழி ஒழுகுவது.

தைவம் – தெய்வ உடைமை

தொ

தொந்தனை – தொடர்பு

தொந்தித்தல் - கட்டுப்படுத்துதல்

தொழும்பு – அடிமை

ந

நசிதல் – கெடுதல்

நடுநாடி - உடம்பின் ஆறு ஆதாரங்களையும் ஊடுறுவிச் சென்று பருவமத்தியில் ஒடுங்கும் நாடி

நட்சத்திரம் - அஸ்வனி, பரணி, கிருத்திகை, ரோகிணி திருவாதிரை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்தரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி;ஆக27; தினம்;வைகல்; தாரகை; விண் மீன்

நட்புக்கிரகம் –

சூரியன் - சந்திரன், செவ்வாய், குரு

சந்திரன் – சூரியன், புதன்

செவ்வாய் - சூரியன், குரு, சந்திரன்,

புதன் - சூரியன், சுக்கிரன்

குரு – சூரியன், சந்திரன், செவ்வாய்

சுக்கிரன் – புதன், சனி

சனி - புதன், சுக்கிரன்

ராகு – சுக்கிரன், குரு, சனி

கேது – செவ்வாய், சுக்கிரன்

நண்ணுதல் - தலைப்படல்

நதி மண்டலம் – சூரியமண்டலம்

நல்வழிநாலு - சரியை, கிரியை, யோகம், ஞானம்

சரியை – எல்லா உயிரிடத்தும் அன்பு செயல்

கிரியை – எல்லா உயிரையும் தன்னுயிராய் எண்ணல்

யோகம் - எல்லா உயிருள்ளும் ஓர் இயைபு காணல்

ஞானம் – உயிர்க்கு உயிராய் நிற்றல்

நவக்கிரகம் – சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது

நவசக்தி – பிரம்மாவின் ஆற்றல் —பிராமணி

கார்த்திகேயனின் ஆற்றல் —கார்த்திகை

இந்திரனின் ஆற்றல் —இந்திராணி

மகேஸ்வரனின் ஆற்றல் —மேகஸ்வரி

நரசிம்மனின் ஆற்றல் —நரசிம்மி

ருத்திரனின் ஆற்றல் —ரௌத்திரி

வராகனின் ஆற்றல்—வராகி

விஷ்ணுவின் ஆற்றல் —வைஷ்ணவி

சிவனின் ஆற்றல்—சிவை

நவத்துவாரம் - கண் 2

மூக்கு 2

காது 2

வாய் 1

எருவாய் 1

கருவாய் 1

நவநாதர் – ஆதிநாதர், திருமூல நாதர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், பதஞ்சலி, வியாக்ரமர், சிவயோகமாமுனி

நவமணி – கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்

நவவாயில்–நவத்துவாரம் காண்க

நவாக்கரிச்சக்கரம் - ஒன்பது அட்சரச்சக்கரம். அவை யாவன சௌ, ஔ, ஹௌம், கிரீம், சௌம், ஐம், ஹ்ரீம், ஸ்ரீம், கிலீம்

நா

நாகன் - தசவாயுக்களில் ஒன்று. பாடும்படிச் செய்வதும், கண்களைச் சிமிட்டுவதும், விழிப்பிக்கச் செய்வதும், மயிர் சிலிர்க்கச் செய்தலும் செய்யும்

நாக்கி - அலம்புடை என்னும் நாடி

நாடி - மன ஆற்றல் செல்லும் வழி, தசநாடிகள்

நாடிபார்த்தல் –

நெட்டைவாங்கிப் பட்டுத் துணியை விரித்துப் பெருவிரல் இரண்டங்குலம் கீழ் சுட்டு, நடு மோதிர விரலால் அழுத்திக் காணுதல். பருவங்கள் தோறும் பார்க்கும் நேரமும் மாறும்

நாடிச்சக்கரம் - ஆருதாரம்

நாடி பார்க்கும் காலம் -

சித்திரை, வைகாசி - விடியல்
ஆனி, ஆடி, ஐப்பசி. கார்த்திகை - மதியம்
மார்கழி, தை, மாசி – மாலை
பங்குனி, ஆவணி, புரட்டாசி —இரவு

நாதம் - சிவதத்துவம்; ஒலிமயம்; ஓம்; பிரணவம்

நாதவிந்து - சுரோணித, சுக்கிலம்

நாபி - உந்திப்பகுதி; கொப்பூழ்

நாபிக்கமலம், நாபிப்பதுமம், நாபிப்பீடம் } - மணிபூரகம்

நால்வகைத் தோற்றம் – முட்டை வியர்வை, கருப்பை, விதை முதலியனவற்ருல் தோன்றுவன

நாவடக்கம் - மௌனம்

நாற்பதம் - சரியை, கிரியை, யோகம், ஞானம்; சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்

நான்குமார்க்கம் - சன்மார்க்கம், சகமார்க்கம், சத்புத்திர மார்க்கம், தாசமார்க்கம்

நி

நிக்கிரகம் - தண்டனை

நிகளம் – விலங்கு

நிசுவாசம் – வெளியோடும் மூச்சு

நிட்களம் – வடிவமில்லாதது

நித்தியம் - என்றுமுள்ளது

நித்தியானந்தன் - என்றுமுள்ள ஆனந்தமானவன்

நித்திரை - உறக்கம்

நியதி – ஊழ்

நியமம் – அனுசரிக்கப்பட வேண்டியவை

நியதேந்திரியன் - இயந்திரியங்களைக் கட்டுபவன்

நிர்க்குணத்தியானம் – ஆதியந்தமில்லாததும், பரிசிக்கப்படாததும், பார்க்கபபடாததும்,

சுவை மணம் இல்லாததும், உவமிக்கப்படாததுமான பிரமத்தை நான் எனத்தியானித்தல்

நிர் அவயவம் - பகுதிகளற்ற

நிர்க்குணம் - குணமற்ற

நிர்த்தத்துவன் - தத்துவங்களுக்கு அப்பால் உள்ளவன்

நிர்வாணம் - அபேத நிலை. முற்றும் துறந்த நிலை

நிர்விகல்பம் - வரையறுக்கப்படாத புலன் காட்சி

நிர்விகல்பசமாதி – சித்தம் சிவத்துடன் ஒடுங்கும் நிலை

நிர்விகாரி – செயலற்றிருப்பது.

நிரஞ்சனன் - மறைப்பில்லாதவன்

நிராகாரநிலை - உண்மையிலிருக்கும் நிலை

நிராதாரம் - ஆதாரம் இல்லாத; சுவாதிஸ்டானம்

நிராதாரயோகம் – கருவிகரணங்கள் அனைத்தும் நீங்கித் திருவருள் குணத்தால் ஒடுங்குவது

நிராலம்பயோகம்- நிட்களத்தைப் பற்றி நின்று செய்வது

நிருக்தம் – ஆறு வேதாங்கத்தில் ஒன்று. ஆங்காங்கு உபயோகப்படும் பெயர்களுக்குக் காரணம். ஆறு வேதாங்கமாவன சிக்ஷா, வியாக்கரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கல்பம்

நிருத்தம் - பஞ்சகிருத்தியம் பண்ணுதல்

நிருத்தன் - பஞ்சகிருத்தியம் பண்ணும் கூத்தன்; சிவன்.

நிலவெழுத்து - 'ந' கரம்

நிவிர்த்தன் - பிறப்பிறப்பற்றவன்

நிவிருத்தி - பிறப்பிறப்பறுதல்

நிஷ்காமிய கர்மம் - பயன் கருதாச்செயல்

நிஷ்களம் - அருவம்

நிஷ்கள சகளம் - அருவுருவம்

நிற்றல் - சலியாது நிலைபெறல்

நிற்குணன் – சீவ குணமற்றவன்

நிறைமதி - பௌர்ணமி

நின்மலன் – மும்மலமுமற்றவன்

நீ

நீர் எழுத்து – 'ம' கரம்

நெ

நெருப்பெழுத்து - 'சி' கரம்

நே

நேர் நோக்குதல் - முன்னை மருட்பார்வையை மாற்றி அருட்பார்வையான நோக்குதல்

நை

நைமித்திக கர்மம் - விசேஷ காலங்களுக்கென்று ஏற்பட்ட சடங்குகள்

நைவேத்தியம் – உணவுப் படையல்

நோ

நோக்கு - மன எழுச்சி விசேடம்

நோன்பு - விரதம் நோற்றல்

நோற்றல் - மேற்கொள்ளல்; பொறுத்தல்

ப

பக்கிசைத்தல் - பிரிந்திசைத்தல்

பக்தியோகம் - பரம் பொருளிடத்தில் தன்னைச் சரணுகதியாக்கும் பக்தியில் ஈடுபடும் தன்மை

பகடி - பிரகிருதித் தத்துவம்

பகிரங்கசக்தி - வெளிப்படையான சக்தி

பகைக்கிரகம் - சூரியன்—சுக்கிரன்
சனி, ராகு, கேது,
சந்திரன் - பகையில்லை
செவ்வாய் - புதன்
புதன் - சந்திரன்
குரு - புதன், சுக்கிரன்
சுக்கிரன் - சூரியன், சந்திரன்
சனி - சூரியன், சந்திரன், செவ்வாய்
ராகு - சூரியன், சந்திரன்
கேது - சூரியன், சந்திரன்

பங்கம் - அழிவு

பங்குனி - உத்திர நட்சத்திரத்தில் பருவம் வருவது

பக்ஷம் - பிறை
சுக்கில பட்சம் - வளர்பிறை
கிருஷ்ணபட்சம் - தேய்பிறை

பசு- பாசத்தால் பிடிக்கத்தக்கது; ஆன்மா; குருவருளால் தன்னைச் சுற்றிய அஞ்ஞானத்தையகற்றி இருப்பினும் பாசம் முற்றும் நீங்கா ஆன்மாவின் நிலை

பசுகரணம் - இயற்கையில் உள்ள மூன்று உணர்வினல் தன்னையும் கடவுளையும் அறியும் அறிவு

பசு ஞானம் - ஆன்ம ஞானம்

பசு போகம் - ஆன்ம நுகர்ச்சி

பசு போதம் - ஆன்ம அறிவு

பஞ்ச அறிவு - ஐம்பொறி யறிவு; ஐம்புலன்

பஞ்ச கர்த்தாக்கள் - அயன், அரி, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்

பஞ்சகிருத்தியம் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய ஐந்து செயல்கள்

பஞ்ச சத்தி - இச்சாசத்தி, கிரியா சத்தி, ஞானசத்தி, பராசத்தி, ஆதி சத்தி

பஞ்ச சுத்தி - ஆன்ம சுத்தி, லிங்கசுத்தி, திரவியசுத்தி, பூத சுத்தி, மந்திரசுத்தி

பஞ்சபூதம் - மண், நீர், தீ, காற்று, ஆகாயம்

பஞ்சபூத எழுத்து -
பிருதிவி - அ, ந, ஐயும்
அப்பு - இ, ம, கிலியும்
தேயு - உ, சி, சவ்வும்
வாயு - எ: வ, றீயும்
ஆகாயம் - ஒ, ய, ஸ்ரீயும்

பஞ்சபூதக்கூறு -
மண் - மயிர், எலும்பு, தோல், சதை, நரம்பு
நீர் - நீர், ரத்தம், சுக்கிலம், சுரோணிதம், கொழுப்பு
தீ - ஆகாரம், பயம், சோம்பல், போகம்
காற்று - இருத்தல், கிடத்தல், நடத்தல், நிற்றல்
ஆகாயம் - காமம், கோபம், குரோதம், மதம்

பஞ்சபூத நிறம்
மண் - பொன்
நீர் – பளிங்கு, நீலம்
நெருப்பு – செம்பு
காற்று – கருப்பு
ஆகாயம் - புகை

பஞ்சமலம் - காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம்

பஞ்சமாபாதகம்-பொய், கொலை, களவு, காமம், கள்

பஞ்சமுத்திரை – யோகிகளுக் குரியன - உருத்திராட்சம், கமண்டலம், காவிவேட்டி, சடைமுடி, யோகதண்டு

பஞ்சமூர்த்தி - பஞ்சகர்த்தாக் களான அரி, அயன், ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்

பஞ்சயாகம் – கர்மயாகம், ஞான யாகம், ஜெபயாகம், தபோ யாகம், தியானயாகம்

பஞ்சலிங்கம் –
மண் - காஞ்சிபுரம்
நீர் – திருவானைக்கா
தீ – திருவண்ணமலை
காற்று – திருக்காளத்தி
ஆகாயம் – சிதம்பரம்

பஞ்சதான மூர்த்தி -
மூலாதாரம் - கணபதி
சுவாதிஷ்டானம் - பிரம்மா
மணிபூரகம் - விஷ்ணு
அநாகதம் – ருத்திரன்
விசுத்தி - மகேஸ்வரன்
ஆறுவது ஆதாரமாகிய
ஆக்கினைக்கு - சதாசிவன்

பஞ்சமகாரம் - மைதுனம், மச்சம், மாமிசம், மது, முத்ரா

பஞ்சவர் - மண், நீர், தீ, காற்று, ஆகாயம்

பஞ்சாங்கம் - வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம்

பஞ்சாட்சரம் – நமசிவாய

பஞ்சாவஸ்தை - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்

பஞ்சான்மா - அந்தரான்மா; சீவான்மா, தத்துவான்மா, பூதான்மா, மந்திரான்மா

பஞ்சீகரணம் - பஞ்சபூதங்களின் சேர்க்கை ரகசியம்

பஞ்சீகரணவித்தை – பஞ்சபூதங் களின் சேர்க்கை ரகசியம் கண்டு இயற்றுதல்

பஞ்சேந்திரியம் - மெய், வாய், கண், மூக்கு, செவி

பத்மாசனம் - வலக்காலை இடது தொடையிலும், இடக்காலை வலத்தொடையிலும் மாற்றிப் போட்டுக்கொண்டு கால் மூட்டுக்கள் தரையில் தொடு மாறு இருக்கக் குதிக்கால் இரண்டும் அடிவயிற்றைத் தொடல் முதுகு நிமிர்ந்து இருத்தல்

பத்திராசனம் — வலக்காலை வெளித் தோன்றுமாறு இடது தொடையின் மேல் வைத்து இரண்டு முழந்தாள்களிலும் அங்கைகளை மேல் நோக்கு மாறு அமைத்து நீட்டி உடம்பைச் செவ்வையாக நிமிர்ந்து இருக்குமாறு செய் தல்

பதப்பிராப்தி - சாலோகம், இன்னுலகப் பேறு

பதார்த்தம் - பொருள்

பர அவத்தை - விரட்டபிமானி, பொன் கர்ப்பன், அவ்யா கிருதபிமானி, மூன்றுநிலை

பரகாயப்பிரவேசம் – கூடு விட்டுக் கூடு பாய்தல்

பரசுரூபம் – விசுத்தி

பரணி - அடுப்பு, தாழி, கிழவன் வேறுபெயர்கள்

பரத்துவம் – தொலைவிலிருப்பது

பரதேகம் – சூக்குமதேகம்

பரநாதம் – அருளொலி

பரந்தாமம் - உயர்ந்தஉறைவிடம்

பரபக்தி – உயர்ந்தபக்தி

பரம் – அதிசூக்குமம்

பரம குரு - உயர்ந்த குரு

பரமாணு - பிரிக்க முடியாது என்று முளன்

பரமாத்மா - அதி உயர்ந்த ஆன்மா

பரவசம் - பரம்பொருள் வசம்

பரவாசம் – பிரமரந்திரம்

பராசக்தி – வனப்பாற்றல்

பராவித்யை - உயர்ந்த அறிவு

பரிணமம் – ஒன்று மற்றென்றுதல்

பரிணமவாதம் – உருமாற்றுக் கொள்கை

பரிமாணம் – அளவு

பரிபாலனம் – காத்தல்

பவ்வம், பவம் } பிறப்பு

பலாலம் – வைக்கோல்

பஸ்திரிகா யோகம் – ஒரு வகை மூச்சுப் பயிற்சி. வலது கைப் பெரு விரலால் வலது மூக்குத் துவாரத்தை அடைத்து இடது மூக்குத் துவாரத்தின் வழியாக காற்றை உள்ளே இழுத்து உடன் வலக்கை மோதிர விரலால் இடது மூக்கை அடைத்து வலது துவாரத்தில் காற்றை மெல்ல விடுதல்.

பா

பாகம்–மலபரிபாகம், மலநீக்கம்

பாசஞானம் – உலக பந்தங்களுக்குக் கட்டுப்பட்ட ஞானம்

பாசம் – கயிறு ; தளை

பாசயோகம் – ஜனன லக்ன முதல் வரிசையாய் ஐந்து இடங்களில் கிரகம் இருத்தல்

பாசன் – சீவான்மா

பாத்திரோதகம் – கலத்திலுள்ள நீர்

பாத்தியம் - பாதங்களைக் கழுவும் நீர்

பாதஹஸ்தாசனம் – உடலை முன் நோக்கி வளைத்துக் குனிந்து இரு கைகளால் இரு கால்களின் பெரு விரலைப் பிடித்து முகம் முழங்காலுக்குள் புதைந்திருப்பது

பாதம் நான்கு – சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு

பாதுகாசித்தி – நீர்மேல் நடத்தலாகிய சித்தி

பாணி – கை

பாயுரு – எருவாய்

பாரமாத்திகம்–சார்பற்ற நோக்கு

பால் – ஊழ், வினை

பாலை நிலத்துக்காரி – துர்க்கை

பாவனசம் – கும்பகம்

பாவனை – அனுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமாய் உள்ளது

பானு – சூரியன் ; சூரியநாடி

பானுவைப்பணி தீண்டும் நாள்–சூரியகிரகணம்

பி

பிங்கலை – வலது நாசியில் ஓடும் சரம்

பித்தகிரகம் – சூரியன், செவ்வாய், கேது, ராகு

பிண்டப் பொருள் – பதப்பொருள்

பிரகஸ்பதி–தேவகுரு, வியாழன்

பிரகாசம் – விளங்குதல் ; ஒளி

பிரகாமியம் – பிறர் உடம்பில் நுழைந்து நினைத்த இடம் செல்வது

பிரகாரம் – முறை

பிரகிருதி – மூலப் பகுதி; பஞ்சபூதம் ; ஜடம் ; இயற்கைப் படைப்பின் ஆரம்பத்தில் உள்ளது

பிரசன்ன – தெளிவான

பிரசாதம் – அருள்படையல்

பிரசாபத்யாபிமானி – மாயை ஒன்று சிவத்திற்குச்சூட்சுமம். சொப்பனத்தில் இப் பெயர் பெறும்

பிரணவதேகம் – கண், கை – இவற்றுக்குப் பிடிபடாத நிலை

பிரதோஷம் – 13-ஆம் நாளாகிய திரயோதசி விரதம் – 13-ஆம் நாள் விரதம். சூரியன் மறைவுக்கு 1–30 மணி முன்னும் பின்னுமான காலம்

பிரத்தியட்சம் – புலன் காட்சி

பிரத்தியாகாரம் – அஷ்டாங்க யோகத்துள் ஒன்று. புலன்களைப் பொருள்கள் மேல் செல்ல ஒட்டாமல் செய்தல்; புறம் ஓடிப் பயின்ற மனத்தை ஒரு முகப்படுத்தும் முயற்சி

பிரதி சங்கிதை முறை – ஒரு விஷயத்தை வேறு வேறாக வகுத்துக் கூறுவது

பிரதி பிம்பம் – எதிர் உரு

பிரபஞ்சம் – உலகம் ; மாயை

பிரபஞ்சபேதம் – உலக வேறுபாடு

பிரபத்தி – இறைவனை முற்றிலும் சரணடைதல்

பிரபோதிகம் – விடியல் காலை

பிரபோதம் – ஞானம்

பிரம எழுத்து – அயன் எழுத்து ; விதி

பிரம்மச்சரியை – திரிகரண சுத்தி

பிரமசித்தன் – சித்தர்களில் உயர்ந்தவன்

பிரமம் – பெரியது ; முடிவான உள்பொருள்

பிரம நாடி – சுழி முனை

பிரம யஞ்ஞம் – பிரம்மனுக்குச் செய்யும் வேள்வி

பிரமரந்திரம் – உச்சித்துவாரம்

பிரம வித்தை – பிரமனைப் பற்றிய அறிவு

பிரமாணம் – அளவை ; ஏற்புடைய அறிவைப் பெறும் வழி

பிரமேயம் – ஏற்புடைய அறிவுக்குரிய பொருள்

பிரவாகம் – நீரோட்டம்

பிரவிருத்தி – யோகப் பயிற்சியில் வளர்ச்சி

பிரவிருத்தி விஞ்ஞானம் – சவிகற்பமாய் விரியும் ஞானம்

பிரளயம் – அழிதல்

பிரளயகாளர் – ஆணவம், கன்மம் ஆகிய இரு பிணிப்புடையார்

பிரஸ்தானத்திரயம் – உப நிஷதங்கள், பகவத்கீதை, வேதாந்த சூத்திரம் ஆகிய மூன்று அடிப்படைகள்

பிரா கிருதம் – பிரகிருதியில் இருந்து தோன்றுவது

பிராஞ்ஞாபிமானி – பிரகிருதி சீவனுக்குக் காரண தேகம். இது சுழுத்தி அவத்தையில் பிராஞ்ஞாபிமானி எனப் பெறும்

பிராண பிரதிஷ்டம் – விக்கிரகங்களுக்கு உயிர்ப்பூட்டல்

பிராண வாயு–தலையையிடமாகக் கொண்டு மார்பு, கண்டம் இவற்றில் உலாவி, இதயம் பஞ்சேந்திரியம் இவற்றின் இயக்கத்திற்குக் காரணமாகி மூச்சுக்கு ஆதாரமாய் இருப்பது

பிராணன் - உணவைச் சீரணிக்கும் தொழில் காற்று ; தான் வேறு சிவன் வேறு என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஆன்மா – அஞ்ஞானத்தில் மூழ்கிய நிலை

பிராணாயாமம் – பிராணனாகிய வாயுவைக் கட்டுதல் ; மூச்சுப் பயிற்சி

பிரார்த்தனை – நன்மை கருதி வேண்டுவது

பிராரத்தம் – பழங்கருமத்தின் பயன் ; ஏன்ற வினை

பிரிதியட்சம் – கண்கூடு

பீ

பீஜம் – மூலம், விதை

பீஜாட்சரம் – மூல எழுத்து

பு

புசிப்பு - அனுபவித்தல்

புணர்தல் – தலைப்படல் ; சாயுச்சியம்

புதன் - மேதை, கணக்கன், பொறையன் வேறுபெயர்கள்

புத்தி – அறிவு ; அந்தக் கரணங்களில் மூன்றுவது ; பொருளை அறிவது

புரட்டாசி - பூரட்டாதி நட்சத்திரத்தில் பருவம் வருவது

புரியட்டகம் – ஐந்து பொறி, மனம், புத்தி, அகங்காரம் எட்டும் ஆகும்

புருவ நடு-சிற்சபை, சிற்றம்பலம், விந்து, முச்சுடர், முச்சந்தி, சபாத்துவாரம், மணி மேடை, நெற்றிக் கண், கபாடம், சுழிமுனை, சூன்யப்பகுதி, பிரமாந்திரம், மகாமேரு,

மயானம், வரை, அம்பலம், முதலியன வேறு பெயர்கள்

புருஷன் - ஆள்; ஆன்மா; தான் வேறு, இறைவன் வேறு என்று தன்னை எண்ண வைக்கும், தன்னைச் சுற்றிய அஞ்ஞானத்தை உணர்ந்த ஆன்மாவின் நிலை

புருஷார்த்தம் – மனித லட்சியம்; உயர் கொள்கை

புருஷோத்தமன் – புருஷர்களில் உத்தமன்

புவனுபதி – புவனே – புவனு—சக்தி புவனுபதி – சிவன்

புவனுபதி சக்கரம்—சிவ சக்கரம். ஆறு கோணம் வரைந்து கோணங்களை உள்ளடக்கம் முறையில் வட்டமிட்டு வட்டத்தைச் சுற்றிலும் பதினறு இதழ்கள் இட்டு மந்திரம் அடைத்தல்

புனர் பூசம் – கரும்பு, மூங்கில், வேய், திகிரி, வேறு பெயர்

பூ

பூசரி - மூக்கின் நுனியை அசையாமல் பார்த்தல்

பூசாரி – இறைவனுக்குப் பூவால் அருச்சனை புரிபவன் ; பூ சொரிபவன்

பூசை-பூவினுல் அருச்சனை செய்தல்

பூதகலை - சூரியகலை

பூத சரீரம் - தூல உடம்பு

பூத சக்தி - பூதங்களைச் சுத்தி செய்தல்

பூதத் தோற்றம் - விண்- ஓசை
காற்று - ஓசை, ஊறு
தீ - ஓசை, ஊறு, ஒளி
நீர் – ஓசை, ஊறு, ஒளி, சுவை
நிலம் – ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்

பூதம் – பஞ்ச பூதங்கள்

பூதலவாசனை – உலகப் பற்று

பூதாத்மா - சீவாத்மா

பூர்வம் - தொடக்கநிலை

பூரகம் - மூச்சை உள்ளிழுத்தல்

பூரணம் - நிறைவு

பூரணயோகம் - முழுமையான யோக நெறி

பூரம் - எலி, துர்க்கை, நாவிதன், கணை – வேறு பெயர்கள்

பூராடம் - நீர், குளம், புனல் வேறு பெயர்கள்

பூஷணம் – அணிகலன்

பூஷன் - போஷிக்கின்றவன் ; சூரியன்

பெ

பெண் கிரகம் - புதன், சனி, கேது

பெண்கிரகம் – அஸ்வனி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், பூரம், உத்தரம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம் உத்திராடம், அவிட்டம், ரேவதி

பெண்ராசி - ரிஷபம், கடகம், கன்னி, விருட்சிகம், மகரம்

பெத்தம் - பந்தம் ; கட்டு

பெத்தர் - மும்மலப் பிணிப்பு உற்றவர்

பே

பேதம் - வேற்றுமை

பேதாபேதம் – வேற்றுமையும், வேற்றுமை இன்மையும்

பேய்த்தேர் - கானல் நீர்

பேரின்பம் - இறைமை நுகர்ச்சி

பை

பைசந்தி – நினைவோசை

பைரவன் சக்கரம் - சிவசக்கரம்

பைரவி சக்கரம் - சக்தி சக்கரம்

பொ

பொருட்பிரபஞ்சம் – புவனம்; தத்துவம்; கலை

பொற்புவி சாந்தாபி மானி – பின்னுசக்தி ஒன்று சிவத் திற்குக் காரண தேகம். சுழுத்தி அவத்தையில் இப் பெயர் பெறும்

பொன் கர்ப்பன் – காலபரம் ஒன்று பரனுக்குச் சூக்குமம். சொப்பன அவத்தையில் இப் பெயர் பெறும்

போ

போக்கியம் – அனுபவிக்கப்படும் பொருள்

போக்தா - அனுபவிப்பன்

போகாப்புனல் – போகாமல் காக் கின்ற பிராணன்

போடம் – ஆற்றல்

போத்திருத்துவம் – போகம் நுகர்வோனுதல் தன்மை

போதத் தொழில் - அறிவுத் தொழில்

போதம் - அறிவு

போதவான் - மெய்யுணர்வுடை யவன்

போதன் - தானும் இறையும் ஒன்றே என அறிந்து பாசம் முதலிய முற்றும் நீங்கிய ஞான நிலை

போதி - அரசமரம்; அறிவு உடையவன்

ம

மகம்-நுகம், கலப்பை, நாஞ்சில், வாய்க்கால் வேறுபெயர்

மகத்து - உலகின் வித்து

மகரம் – மான்தலை, சுரு வேறு பெயர்

மகாமுனி - அகஸ்தியர்

மகிமா - சிறியபொருள் பெரிய பொருளாதல்

மச்சாசனம் - பத்மாசனம் போட்டு மல்லாந்து படுத்து இருகைகளால் கட்டை விரலை யும் பிடித்தபடி உடம்பை வில் லாகப் பின்புறம் வளைக்கும் ஆசனம். தலையை வளைத்து முதுகைத் தூக்குதல்

மண்டலம் - சூரிய, சந்திர, அக்கினி ஆகிய மும்மண்டலம்

மண் - தலம் - மண்ணுகிய இடம்; மண்தத்துவம்

மண்டிய ஞானம் - மெய்யுணர்வு நிறைதல்

மணி - நவமணி

மணி பூரகம் – ஆறு ஆதாரங் களில் மூன்ருவது. 10 இதழ்; நாபியை இடமாகத் திருமால்; இ, கிலீம் ஆகிய மந்திரம்

மத்த கஜம் - மூலாதாரம்

மத்திம நாள் – சனி, ஞாயிறு

மத்திம மாதம் - ஆவணி, ஐப்பசி, கார்த்திகை
மத்திமை – மிடற்றோசை
மத்தியானம் - மத்திய தானம்; புருவ மத்தியாகிய இடம்
மதியமிர்தம் – சோமபானம், மாங்காய்ப்பால், கறவாப்பால், கள், யோக அமுரி—வேறு பெயர்கள்
மந்ததரம் - வாழைத்தண்டு தீப் பற்றுதல் போன்று அருள் பெறல்
மந்தம் – பச்சை விறகு தீப்பற்றுதல் போல் அருள் பெறல்
மந்தமாருதம் - மெல்லியகாற்று; தென்றல்
மந்திரம் – மன + த்ர–மனத்தைக் கட்டுக்களில் இருந்து விடுவிப்பது

மனனம் திராயதே – (மனனம்) மந்திரம் காப்பாற்றும்;

மத்ரிகுப்தபாஷனே – மந்திரம் ரகசிய மொழியாகும்.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப' தொல்காப்பியம் : சொல் : 178

அமைச்சர்திரள் - சிலம்பு : கொலை 137

மந்திர எழுத்துக்கள் - சிலம்பு கொலை : 143

வேதம் - சம்பந்தர் : திரு II : 1

ஐந்தெழுத்து - நாவுக்கரசர் : திரு VI : 8

ரகசியச்செய்திகள் - பெருங்கதை : பிரச்சோதனன் : 10

வித்யாதரன் - சிந்தாமணி : காந்தரு : 47

பெயர் – திருத்தொண்டர் புராணம் : திருஞான ; 721

அமைச்சர்–கம்பன்: அட்சய :10

வீடு – கம்பன் : ஊர்தேடு: 138

கோயில் - கந்தபுராணம் : காம தகனம் : 67

கள் – குமரகுருபரர் : மதுரைக் கலம்பகம் : 128

குகை - குமரகுருபரர் : நீதி வெண்பா : 2

குதிரைப்பந்தி : இலக்கியச் சொல்லகராதி : பக் 147

மல நசிவு - மலம் கெடல்
மலபரிபாகம் - மலம், அறிவை மயக்க இயலாது வலிகுன்றச் செய்தல்
மலம் – தூய்மை இன்மை; ஆணவம், கன்மம், மாயை, முப்புரம் என உருவகித்தல் உண்டு. 'முப்புரமாவது மும் மலகாரியம்'

திருமந்திரம் – 329

மலமிரிந்து - மலம் நீக்கி
மலையமலை - பொதியமலை
மலையமுனி - அகத்தியன்
மருள்தேகம்–மாயையில் மூழ்கிய நிலை
மயக்கம் – தெளிவின்மை
மயம் – வடிவு
மயூராசனம் – வயிற்றுப் பகுதியில் கைகளுக்கு மயில்போல் அணையாக வைத்து இரு உள்ளங்கைகளையும் பூமியில் பதியவைத்து உடம்பை மெல்ல தூக்கி நீண்டு நிறுத்துதல்
மறுமை - மறுபிறப்பு
மறை – வேதம்; மந்திரம்
மன்னுயிர் - அழிவிலா உயிர்
மனத்தின் பற்று- ஜீவப்பற்று: தேகப்பற்று, களத்திரப்பற்று

மனோமயம் - கருமேந்திரியம்; மனம்
மனோன்மணி – மன உள்மணி

மா

மாசி – மக நட்சத்திரத்தில் வருவது
மாதசூன்யம் – இந்த இந்த மாதங்களில் இன்னின்ன திதிகளும்: நட்சத்திரங்களும், ராசிகளும் சேர்ந்தால் அந்த நாள் எவ்வித சுபங்களுக்கும் உதவாதென்பது
மாது – திருவருள் ; சக்தி
மாமாயை - அசுத்த மாயை
மாய கலை – சந்திர கலை
மாயா சக்தி–மாயையின் ஆற்றல்
மார்கழி – மிருக சீரிஷ நட்சத்திரத்தில் பருவம் வருவது:
மா+கழி – ர் எழுத்துப் பெறு, அஞ்ஞான நீக்கம்
மாரணம் - அட்ட கருமத்தொன்று, மந்திரத்தால் கொல்வது
மாருதம் - காற்று
மார்க்க சைவம் – சிவ சாதனங்களையும், விபூதியையும் தரித்துக் கொண்டு, சரியை முதலான மார்க்கங்களையும் வகுத்துக் கொண்டு ஒழுகுபவர்.
மான் - பெரியோன்
மானச பூசை - மனத்தால் வழிபடல்
மானசீகம் - மனம் சார்ந்த
மாறு அசத்து - நன்மையில்லா அசத்து

மி

மிதுனம் - யாழ், வீணை, கவிஞன் வேறு பெயர்கள் .
மிருக சீரிஷம் - மான் தலை, தேங்காய் மிருக வதனம், மும்மீன் – வேறு பெயர்கள்
மிருது நட்சத்திரம்-மிருகசீரிஷம், சித்திரை, அனுஷம், ரேவதி

மீ

மீதானம் – சிவப்பேறு
மீனம் - மீன், கயல், சேல், கெண்டை – வேறு பெயர்கள்

மு

முக்கடுகு–சுக்கு, மிளகு, திப்பிலி
முக்கரணம் – மனம், வாக்கு, காயம்
முக்கலர் – சகலர், பிரளயாகலர் விஞ்ஞானகலர்
முக்குணம் – சத்துவம், இராஜசம், தாமசம்
முக்தி – வீடுபேறு
முக்தி யோக்கியம் - வீடு பேறு அடையும் தகுதி
முத்திரு – தனித்திரு, விழித்திரு பசித்திரு
தனித்திரு- தத்துவங்கள் அற்ற ஆன்மாவின் தனி நிலை.

தன்னரசே செலுத்தி நின்ற
தத்துவங்கள் அனைத்தும்
தனித்தனி என் வசமாகித்
தாழ்ந்தேவல் இயற்ற
67. அருள்விளக்க மாலை
—அருட்பா

விழித்திரு – குண்டலினியை விழித்திருக்கச் செய்தல். ஆன்மாவின் விழிப்பு நிலை.

தூங்குக நீ என்கின்றாய்
தூங்குவனோ எனது
துரைவரும் ஓர் தருணம் இதில்
தூக்கம்தான் வருமோ'
—66 அனுபவமாலை : அருட்பா

பசித்திரு - மதியமிர்துண்ணப் பசித்திருத்தல்

'ஓங்கு நிலா மண்டபத்தே
என் கணவருடனே
உவட்டாத தெள்ளமுதம்
உண்டு பசி தீர்ந்தேன்'

30 அனுபவ மாலை : அருட்பா

முத்திரை - அடையாளம்; மும்மலம் ஆகிய திரை

முத்தீ - காருக பத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி; தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி; சந்திரன், சூரியன், அக்கினி

முத்துரியம் - சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம்

முப்பகை - காம, வெகுளி, மயக்கம்

முப்பாழ் -

காரியப்பாழ் - மாயப்பாழ் (ஆன்மதத்துவம் - 24 - ம் கடந்த நிலை)

காரணப்பாழ் - போதப்பாழ் (வித்யாதத்துவம் -7-ம் கடந்த நிலை)

காரிய காரணப் பாழ் - உபசாந்தப்பாழ் (சிவ தத்துவம் 5-ம் கடந்த நிலை - திருமந்திரம்) 2456.

மும்முத்தி - சீவமுத்தி - துரியாதீதத்தில் அமையும்

பரமுத்தி - உபசாந்தநிலை

சிவமுக்தி - ஆனந்த நிலை

மும்மை - இம்மை, மறுமை உம்மை

முளை - திருவருள்

முற்றுணர்வு - அனைத்தறிவு

முறை - சிவாகமம்; ஊழ்

முனைத்திடாமை - சுட்டியறியப் படுவதாய் வேறு நில்லாமை

மூ

மூதறிவு - இறைஞானம்

மூலப்பிரகிருதி - மூலச்சடப் பொருள்

மூலம் - இராக்கதர், அரக்கர், அவுணர் வேறு பெயர்கள்; மூலாதாரம்

மூலாக்கினி - ஆறு வகைத் தொழிற்குக்காரணமான தீ;மூலத்தீ

மூலாதாரம் - ஆறு ஆதாரங்களுக்கு மூலமானது. எருவாய் கருவாய் இடையில் இருப்பது; 4 இதழ். ஓம் மந்திரம். வாலை தெய்வம்; கணபதி என்றும் கூறுவர்

மூன்றகம் - பூரகம், ரேசகம், கும்பகம்

மூன்று மண்டலம் - சந்திர மண்டலம், சூரிய மண்டலம், அக்கினி மண்டலம்

மெ

மெய் - எக்காலத்தும் நிலை பெற்றுள்ளதாகிய தன்னியல்பு; என்றும் உள்ளது

மே

மேருதண்டம் - முதுகுத்தண்டு

மேஷம் - வருடை, ஆடு, மறி தகர் - வேறு பெயர்கள்

மோ

மோகம் - அறிவு இகந்த நிலை

மோகனம் -அட்ட கரும வித்தையில் ஒன்றுகிய மயக்குதல்

மோட்ச காமம்-துன்ப விடுதலைப் பேறு வேட்கை

மௌ

மௌன கலை - சூரிய கலை

மௌன நிலை - சமாதி நிலை

ய

யக்ஞம் - வேள்வி

யா

யாக்கைக் குற்றம் - பசி, நீர் வேட்டல், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு - 18

யாகம் - வேள்வி, 21 வகை; அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உத்தியம், சோடசீ, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்

கினி யாகமதேயம், அக்கினி கோத்தரம், தரிச பூரண மாயம், சாதுர் மாசியம், நிருட பசு பந்தம்; ஆக்கிரயணம், சௌத்திராமணி, அட்டகை, பார்வணம், சிரார்த்தம், சிரா வணி, ஆக்கிரகாயணி, சைத் திரீ, ஆசுவயசி - 21.

யு

யுக்தி - ஆராய்வு, உபாயம்

யுகம் - காலப்பகுதி
கிருதாயுகம் - 1728000 காலம் வரை
திரேதாயுகம் - 1296000 காலம் வரை
துவாபரயுகம் – 864000 காலம் வரை
கலியுகம் - 432000 காலம் வரை

யோ

யோக நித்திரை - அறிதுயில்

யோகம் – யுஜ் – என்பது அடிச் சொல். சேர்தல் என்பது பொருள். இறைவனுடன்ஆன்மா இணைதல்; பஞ்சாங்கத்தில் ஒவ் வொரு தினத்திலும் நான்கா வது அங்கமாக வருவது. விஷ் கம்பம், பிரீதி, ஆயுஷ்மான் சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, ஆலம் கண்டம், விருத்தி, துரு வம், வியாகாதம், அரிக்ஷணம் வச்சிரம், சித்தி, விதிபாதம் வரியான், பரீகம், சிவன் சித் தம், சாத்தியம், சுபம், சுப்பி ரம், பிராமியம், ஐந்திரம், வைதிருதி – 27; கர்மயோகம், ராஜயோகம், ஹடயோகம், அஷ்டாங்க யோகம்

யோகமுத்திரா - பத்மாசன நிலை யில் இருந்து கொண்டு கை களைத் தளர வைத்து முதுகின் பின் கட்டிக் கொண்டு (குறுக் காக) நெற்றி தரையில் படும் படியாகத் தொடுதல்

ர

ரசவாதம் - தாழ்ந்த உலோகங் களை உயர்ந்தனவாக்குதல். உபரசவாதம், ரசவாதம் என இரு வகை.

உபரசவாதம் – மந்திரவாதம், புரீஷவாதம், தூளன வாதம், வாயு பிரேரகவாதம், தேவாங்க வாதம், பிரவேச விசிரிம் பிதவாதம், தந்திர வாதம் (எழுத்துக்கள் சம்பந் தத்தால், மூத்திரத்தினுல், பாத தூளிகை சம்பந்தத்தால், சுவாச சம்பந்தத்தால், உபா சனைகளினுல், பூததாதுவால், நிரேதுவாகச் செய்தல்) - 7 வகை

ரசவாதம் – ஸ்பரிச வாதம், ரசவாதம், தூம வாதம், தாதுர் வாதம், வாக்கு வாதம், அக்ஷி வாதம், அங்கப்பவாதம் (திருசம் பந்தத்தால், மருந் துக்களால் புகை வேதியால்

பஞ்சலோகத்தால், சொல்லால், பார்வையால், தியானத்தால்) செய்தல் – 7

ரா

ராகம் - பற்று

ராகு - கருங்கோள், போககாரகன், மதிபகை, யோககாரகன் - வேறு பெயர்கள்.

ராசதம் – மனவூக்கம், கல்வி, தருமம், கேள்வி, தானம்

ராஜயோகம் - கிரகங்களின் உச்சம், ஆட்சி, நட்புக் கிரக, சுப கிரகப் பார்வை இவற்ரோடு விளங்குவது ; உடலை ஓரிடத்தில் அமர்த்தி வைக்கின்ற இருக்கை (ஆசனம்) மூலம் உடலை விட மனத்துக்கு சிறந்த பயிற்சி அளிப்பது

ரி

ரிஷபம் - விடை, எருது, ஏறு, காளை, புல்லம் - வேறு பெயர்கள்.

ரிஷி - திர - திருஷ்டி - ஆன்மீகத் துறையில் வழி காட்டும் புதிய அனுபவம் பெறுவோர்.

ரு

ருதுகாலம் - பருவக்காலம்.

வசந்தருது - இளவேனில்,
கிரீஷ்மருது - முதுவேனில்,
வருஷருது - கார்காலம்,
சரத்ருது - குளிர் காலம்,
ஹேமந்தருது - முன் பனிக்காலம்
சிசிரருது —பின்பனிக்காலம்

ரே

ரேசகம் – காற்றை வெளிவிடல்

ரேவதி - ஓடம், நால்வாய், தோணி, மரக்கலம் - வேறு பெயர்கள்

ரோ

ரோகிணி - தேர், வையம், சகடு வண்டி, சாகாடு - வேறு பெயர்கள்

ல

லக்கிஞதிபதி - லக்கினத்திற்கு அதிபதி

லகிமா - சுமையுள்ள பொருளை லேசானதாக்குவது

லலாடம் - புருவமத்தி

லி

லீலை - அருள் விளையாட்டு

வ

வச்சிரமயம் - மணிபூரகம்

வச்சிராசனம் - கால்களை மடக்கி மண்டியிட்டு அதன் மேல் நிமிர்த்தி அமர்ந்து கொண்டு கைகளைத் தொடையின் மீது வைத்துக் கொள்ளுதல்

வசந்த ருது - இளவேனில் காலம்

வசனரகிதம் - சொல்லுக்கெட்டாதது

வசித்துவம் - எழுவகைத் தோற்றமாகிய தேவ, மானிட, நரக மிருக, பிறப்பன, ஊர்வன, மரம் முதலியனவற்றைத் தன் வசப் படுத்துவது

வசியம் -அட்ட கரும வித்தைகளில் ஒன்ருகிய தன்வயப் படுத்துதல்

வடவிருட்சம் – ஆலமரம்

வர்மசாத்திரம் - நரம்புத் தொடர் புடைய சாத்திரம்

வரம் - நேயம்

வளர்பிறை - அமாவாசை கழிந்த மறுநாள் முதல் பௌர்ணமி வரை 15 நாள்

வா

வாக்காதி ஐந்து – வாக்கு முதலிய ஐந்து புலன்கள்

வாக்குஸ்தானம் - லக்கினத்திற்கு இரண்டாவது இடம்

வாகடம் – இயல்பு கூறும் நூல்; மருத்துவம்

வாசனை - கர்மவினை

வாசி – மூச்சு

வாசிகம் – வாய்மொழி

வாசியோகம் - மூச்சுப்பயிற்சி

வாத்சல்யம் - தாய்மைப்பாசம்

வாதகிரகம் - குரு, புதன், சனி

வாமசாரம் - இடக்கை முறைகள்

வாமதேவம் - இறைவன் முகம். இதில் தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சமான், சுப்பிரபேதம் ஆகிய ஐந்து ஆகமங்கள் தோன்றின

வாமம் - இடப்பாகம்

வாமனன் – குள்ளன்; உள்சென்று குறைந்து வரும் பிராணன்

வாய்த்தல் – கிடைத்தல்

வாயில் - பொறி; நவ, தச துவாரம்

வாரசூன்யம் - இன்னின்ன தினங்களில் இன்னின்ன நட்சத்திரங்களும், இராசிகளும் சேர்ந்தால் அந்த நாள் எவ்விதச்சுபங்களுக்கும் உதவாது என்பது

வாரம் – கிழமை, அன்பு

வாலை - கன்னி, குமரி

வாலைகலை – சூரியகலை

வானப்பிரஸ்தன் - முனிவன், துறவி

வி

விகற்பம் – மாறுபாடு, ஐயம்

விகாசம் - விரிவு

விகாரம் - மாறுதல்

விசாகம் - வைகாசி, முன்றில் —வேறு பெயர்கள்

விசிஷ்டம் - விசேடமான குறிப்பிட்ட ஒன்று

விசுவன் - ஆருயிர்; தூலபூதம் 5 சூக்குமபூதம் 5, கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, —20 தத்துவங்களும் சீவனுக்குரிய தூலதேகம், சாக்கிர அவஸ்தையில் விசுவன் எனப்படும்

விசுத்தி - ஆறு ஆதாரங்களில் ஐந்தாவது. 16 இதழ். தொண்டையில், மகேஸ்வரன் தெய்வம், எ, ரீம் மந்திரம்

விசுவவியாத்தன் - வியாபிக்கப்பட்ட உடம்புடையவன்

விஞ்ஞானம் – உயர்ந்த அறிவு

விஞ்ஞானமயம் – ஞானேந்திரியம்; பக்தி

விடயம் – புலன்; நுதலிய பொருள்

விண் – ஆகாயம், வெளி

விண்ணெழுத்து - 'வ' கரம்

வித்து - சிவம்

வித்யாதத்துவம் - அசுத்த தத்துவம்; பிரகிருதி, ராகம், வித்யா, புருடன், காலம், நியதி கலை

விதண்டாவாதம் - வெற்று வாதம்

விதனம் - வருத்தம்

விதேகமுத்தன் - உடல் அழியும் போது வீடுபேறு அடைபவன்

விதேக முத்தி – உடல் அழியும் போது வீடுபேறு அடைதல்

விந்து – சுத்தமாயை; தாது

விநாசம் – அழிவு

விபாவம் - அவதரித்த வடிவம்

வியமகாரசமாதி – உலகவிவகாரத்தில் இருந்தபடியே செய்யும் சமாதி

வியாகரணம் – இலக்கண நூல்
வியாத்தம் – வியாபிக்கப்பட்டது
வியாத்தி – முறையான உட னிகழ்ச்சி
வியாபர சக்தி - கிரியாசக்தி
விரட்டபிமானி – புருடன் பரனுக்குத் தூலம். இது சாக்கிர அவத்தையில் இப் பெயர் பெறும்
விரிந்து - அண்டமாக விரிந்து

வை

வைதிக – வேதம் சார்ந்த
வைதிகதருமம் - இந்துமத தருமம்; வேதம் சார்ந்த அறம்
வைரவச் சக்கரம் - வைரவன் —சிவன்; சிவச்சக்கரம்
வைரவிச்சக்கரம் - வைரவி— சக்தி – சக்திசக்கரம்
வைராக்கியம் - பற்றற்ற தன்மை யால் ஏற்படும் உறுதிப்பாடு

ஜ

ஜடம் – அசைவற்றிருத்தல்
ஜபம் - மந்திரங்களின் உச்சாடணம்
ஜலம் - அசைதல்

ஜி

ஜியோதிஷ்டோமம் - யாகத்தின் ஒரு பிரிவு

ஜீ

ஜீவன் முக்தன் – உடலில் வாழும் போதே ஆன்ம விடுதலை பெற் றவன்
ஜீவாத்மன் - தனிப்பட்ட ஆன்மா

ஸ

ஸ்தலம் - உறையுள்
ஸ்திதபிரஞ்ஞன் - நிலையான ஞானத்தையுடையவன்
ஸ்ருதி-பேதங்கள் அல்லது அடிப் படைச் சமய நூல்கள்
ஸ்வருபசக்தி- தன்னுற்றல்
ஸ்வருபஞானம் - தன்னைப் பற்றி யறிதல்

ஹ

ஹடயோகம் – உடல் இருக்கை களையே பெரிதும் வற்புறுத்தி, அதனை மேலும் செய்யவைத்து, உடல் பயிற்சிக்கு அதிக முக் யத்துவம் தந்து, உடலைப் பண் படுத்தி அதன் மூலம் மனத் தைப் பண்படுத்துவது
ஹலாசனம் – சர்வாங்க ஆசன நிலைக்கு வந்து பின், இருகால் களையும் தலைக்குப் பின்புறம் மெதுவாகத் தரையைத்தொடு மாறு செய்தல்

———

பிழைதிருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
11	யானைக்கால்கள்	யானைக்குக்கால்கள்
11	முழு நீளம்	முழு நீலம்
13	ர்ருன்கிதரு	தருகின்றார்
19	பிரிது	பிறிது
21	காணக்கையே	காணிக்கையே
26	சந்தோசிதி	சந்தோசிதம்
27	வலப்புலம்	வலப்புறம்
27	இருட்டரை	இருட்டறை
32	குண்டியம்	குண்டாலம்
43	ஆருதாரம்	ஆரு மாதாரம்
56	அரிடரோகினி	அரிடரோகிணி
62	இந்து ரோகினி	இந்து ரோகிணி
71	கடைக்சித்தாழை	கடைச்சித்தாழை
75	சாங்கை சாற்றி	காங்கை ஆற்றி
79	கடுகு ரோகினி	கடுகுரோகிணி
91	ஆனைந்திப்பிலி	ஆனைத்திப்பிலி
101	செந்திணை	செந்தினை
102	வாலுவை	வாலுளுவை
126	வழுதுனை	வழுதுணை
127	ஆடுதின்னுப்யாளை	ஆடுதின்னுப் பாளை
130	கருப்பான் போக்கி	கரப்பான் போக்கி
142	குமிளுக்கு	குமிழுக்கு
143, 144	திணவு	தினவு
151	முர்க்கமாமம்	மூர்க்கமாம்
160	என்கு	எண்கு
167	மூப்பு	முப்பு
173	நேர்வானப்பருப்பு	நேர்வாளப்பருப்பு
178	வல்லுறு	வல்லூறு
186	மையமளந்தோன்சயனம்	வையமளந்தோன் சயனம்
191	நிமித்நகாரணரான	நிமித்தகாரணரான
192	இவிநாபாவம்	அவிநாபாவம்
192	அருந்தா பத்தி	அருத்தாபத்தி
193	விப	விபவ
197	புருவமந்தி	புருவமத்தி
201	ஜீவ ஒருக்கம்	ஜீவ ஒழுக்கம்
206	சகுனத்தியானம்	சகுணத்தியானம்

குறிப்பு: [illegible] இனி நேராவண்ணம் காப்போம்.

அருட்பெருஞ்சோதி ! தனிப்பெருங்கருணை !!

நீர்உண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும்உண்டு

ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு

தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுன் டாயில்அரசே

தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

5854